விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 ஆவணி 24 ஜுலக் 12 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (9—9—84) இதழ் 207

## வல்வை அகதிகளுக்கு நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறையில் சமீபத்தில் நடந்த சம்பவங்களின் போது மோசமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு அத்தியாவசிய உடுதுணிகளும், குசினிச் சாமான்களும் அடங்கிய பொருட்களை நிவாரண

16ம் பக்கம் பார்க்க)

# ‘தமிழர் பிரச்னையைத் தீர்க்காது நவீன ஆயுதங்களைகுவிக்கிறது’

## சென்னையில் கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம்

[சென்னை]

தமிழர் பிரச்னையைத் தீர்த்துவைப்பதற்குப் பதிலாக, இலங்கை அரசு நவீன போர்க் கருவிகளை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்றுச் சென்னையில் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து நிருபர்களிடம் அமிர்தலிங்கம் விளக்கினார்.

‘‘பாதுகாப்புப் படையினரால் அப்பாவித் தமிழ் மக்கள் தாக்கப்படுவது குறித்து மீண்டும் மீண்டும் நாம் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தும், அதனை நிறுத்துவதற்கு எவ்வித முயற்சிகளும் இதுவரை எடுக்கப்படவில்லை’’ என்று அமிர்தலிங்கம் கவலைதெரிவித்தார்.

மனித உரிமைகள் மீறலுக்கு எதிராக இலங்கையிலுள்ள கம்யூனிஸ்ட் தலைவர்கள் குரல் கொடுத்து, இதற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டுமென்று நாடுகளைக் கேட்டுக்கொண்டுள்ளார்கள் என்று தெரிவித்த திரு அமிர்தலிங்கம், இலங்கை அரசு நவீன போர்க்கருவிகளை இறக்குமதி செய்து கொண்டிருப்பதாகக் கூறினார்.

நவீன போர்க்கருவிகளை இஸ்ரேல், தென் ஆபிரிக்கா, தென் கொரியா ஆகிய நாடுகளிடமிருந்து இலங்கை பெற்றுவருகிறது என்றும் அவர் சொன்னார்.

[16ம் பக்கம் பார்க்க]

## நாளை முதல் 14 வரை [redacted] பாடசாலைகளை பகிஷ்கரிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நாளை திங்கள் முதல் வரும் 14ந்திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலைகளைப்பகிஷ்கரிக்கும்படி துண்டுப் பிரசுரம் ஒன்றின் மூலம் மாணவர் அமைப்பு கோரியுள்ளது.

யாழ். மாவட்ட மாணவர்கள் கைதாவதும், தாக்கப்படுவதும், பாடசாலைகள் சேதமாக்கப்படுவதும் சமீப காலமாக நடந்துவரும் சம்பவங்களாக மாறியுள்ளனவென்றும் இதற்கெதிராக இந்நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதென்றும், துண்டுப்பிரசுரத்தில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

‘வடமராட்சி மாணவர்ஒன்றிய’மும் வடமராட்சிப் பாடசாலைகளில் நாளைமுதல் 14-ம் திகதிவரை பகிஷ்கரிப்பைநடத்துவதெனத் தீர்மானித்துள்ளது. பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி நூலகம் எரிக்கப்பட்டதையும், மாணவர் தாக்கப்படுவதையும்கண்டித்து இந்நடவடிக்கையை எடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

12-ம் திகதி புதன்கிழமை பருத்தித்துறை ஸ்ரீஇராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் மாணவர் உண்ணாவிரதமொன்றை மாணவர்கள் பெற்றோர்கள் மற்றும் சமூக, சமயஸ்தாபனங்களின் ஆதரவுடன் மேற்கோள்வதென்றும் இதேதினத்தில் ஏனையதமிழ்ப் பகுதிகளில் உள்ள பாடசாலைகளைப் பகிஷ்கரிபில் ஈடுபடச் செய்வதென்றும் 14-ம் திகதி வடமராட்சியில் ஹர்த்தாலை மேற்கொள்வதென்றும் தீர்மானித்துள்ளனர். [மா]

## மேற்கு ஜெர்மனியில் 8 ஆயிரம் இலங்கை தமிழர்!

### நேரில் பார்த்த நெடுமாறன் தகவல்

(சென்னை)

எண்ணாயிரம் இலங்கைத் தமிழர்கள் அரசியல் புகலிடம் கோரி மேற்கு தெர்மனியில் அகதிகள் முகாம்களில் இருக்றுர்கள். இவர்களில் பலர் இலங்கையில் உயர் பதவிகள் வகித்தவர்களும், ஆசிரியத் தொழில் பார்த்தவர்களும் அடங்குவர்.

இத்தகவலை காந்திகாமராஜ் கட்சித்தலைவர் நெடுமாறன் சென்னையில் நிருபர்களுக்குத் தெரிவித்தார். அவர் தாம் மேற்கு ஜெர்மனிக்குச்சென்றபோது இவர்களைச் சந்தித்து இவர்களை மீண்டும் இலங்கைககு அனுப்புவதால் ஏற்படும் விபரீதங்களைமேற்கு ஜேர்மன் நீதிமன்றத்தில் விளக்கியதாயும் கூறினர்

இவ்வகதிகளுக்கு மேற்கு ஜெர்மன் அரசு இலவசமாக உணவும், கைச்செலவுகளுக்கு 70 மார்க்ஸ் பண உதவியும் மாதாமாதம் வழங்கப்படுகிறது. உணவை இவர்கள் சமைத்து உண்பதற்கு இம் முகாம்களில் வசதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். [கெ]

## துண்டுப்பிரசுரம் அருகே [redacted] துப்பாக்கிச் சூடுகளுடன் இறந்து கிடந்தார்!

[புலோலி, கரவெட்டி நிருபர்]

கடந்த பொதுத்தேர்தலில் உடுப்பிட்டித்தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்டவர், நெல்லியடி பஸ் நிலையத்தில் நேற்றுக்காலை துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் இறந்து கிடந்தார்.

கரவெட்டியைச் சேர்ந்த சிற்றம்பலம் மகாதேவன் (55 வயது) என்பவரே இவர்.

மூன்று துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட இவரின் சடலத்துக்கு அருகில் துண்டுப்பிரசுரம் ஒன்றும் காணப்பட்டது.

இத்துண்டுப்பிரசுரத்தில் இறந்தவர் சிற்றம்பலம் மகாதேவன் என்றும், தமிழீழ

(16ம் பக்கம் பார்க்க)

## மினிபஸ்ஸை எடுத்துச் சென்றனர்

[யாழ்ப்பாணம்]

நேற்றுக்காலை யாழ் நகரில் கவசவண்டிகள் சகிதம் ரோந்துச் சேவையில் ஈடுபட்டிருந்த ஆயுதப்படையினர் இருவரை விசாரணைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

ரோந்து சேவையிலீடுபட்டிருந்த ஆயுதப்படையினர், பஸ் நிலையத்திற்கு அருகாமையிலிருந்த மினி பஸ் ஒன்றை எடுத்துச் சென்றனர்.

மேலும் சில இளைஞர்களும் விசாரணைக்காக அழைத்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## செல்வச் சந்நிதி முருகன் இன்று புதியதேரில் பவனி



ஆறரிய மாமுகங்க ளாகியொளிர் தெய்வம்
அழகெலா மவைவான ஆதிபர தெய்வம்
கூறரிய தாயுளத்தைக் கெள்ளைகொழுந் தெய்வம்
கூடுதவ ஞானமருள் கூட்டுகின்ற தெய்வம்
ஊறரிய கன்மனமும் உருகவருள் தெய்வம்
உயர்வான குறவள்ளி யுளமேவு தெய்வம்
தேறரிய மாமறைகள் தெளிவிக்குந் தெய்வம்
செல்வச்சந் நிதிமேய தெய்வமுயர் தெய்வம்

— ச. தங்கமாமயிலோன்

# விளம்பரம்

## விற்பனைக்கு

நல்ல இன அல்செசன் (Alsation) நாய்க்குட்டிகள் (Warmid) விற்பனைக்குண்டு. தொடர்பு. குமாரசாமி, 179/2, கோவில் வீதி, நல்லூர். 1675

புதிய சைனீஸ் பிளேரன், 40'' கட்டர், எழுத்துக்கள், தளபாடங்களுடன் நன்றாக இயங்கிக்கொண்டிருக்கும் அச்சகம் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: விளம்பர இல; 1634C/O ஈழநாடு. 1634

9 Sri Volks wagon 1300 CC நல்லநிலை விற்பனைக்குள்ளது. போல் சாமிநாதர், சில்லாலை பண்டத்தரிப்பு. 1646

யாழ். மாநகரசபைக்குட்பட்ட முஸ்லிம் வட்டாரத்தில் முஸ்லீம் பள்ளிவாசலுக்கு அருகில் 12 பரப்பு வெற்றுக்காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ளவும்: முகாமையாளர், றீகல் சினிமா, யாழ்ப்பாணம் 1641

கைதடிச் சந்திக்கு அண்மையில் 82 பரப்பு 3 கிணறுகளுடன் தோட்டம் செய்வதற்கு அல்லது தொழிற்சாலைக்கு உகந்தது கைதடி வழித்துணைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் 50 பரப்பு மேட்டுக் காணி, தொழிற்சாலைக்கு உகந்தது, கைதடிச் சந்தியில் இருந்து 500யாருக்குள் மின்சார வசதிகளுடன் குடியிருப்புக்குரிய 17 பரப்புக்காணி, சரசாலையில்4 அறைகளுடன்கூடிய வீடும், 15 பரப்புக் காணியும் 2 கிணறுகளுடன், பெரியபரந்தனில்பூநகரிறோட்டுக் கருகாமையில் இருபோகமும் செய்யக்கூடிய தண்ணீர்வசதிகொண்ட 300 பரப்புநெற்காணி, கைதடி வடக்கில் தோட்டக் காணி 4 கிணறு கொண்ட 52 பரப்பு 12.000 கன்றுகள் செய்யக்கூடியது. மந்துவிலில் ஸ்ரீபாரதி மகாவித்தியாலயத்துக்கருகாமையில் குடியிருக்க வசதியுள்ள 13½ பரப்பு. உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: செ. அம்பிகைபாலன், ஜே. பி யூ எம்., சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும், இல:9, கண்டி வீதி, சாவகச்சேரி தொலைபேசி; 262சாவகச்சேரி. 1651

மானிப்பாய் மருதனுமடம் பிரதான வீதியில் றேஸ் பிராண்ட் இனிப்பு தொழிற்சாலைக்கும் ஆலடியில் புதிதாகஅமைந்திருக்கும் அரிசி ஆலைக்கும் இடையில் 14 பரப்புகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு: சி துரைராசா, சங்குவேலிவடக்கு வெட்டுக்கட்டை பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய். 1664

Nerhtown Cross Broilers, சேவல், R. I. R. பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்கு: ராதா கிருஷ்ணாஸ், கயிலாய பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம் 1627

உரும்பராய் கிழக்கு கரந்தன் பகுதியில் றோட்டுக்கரையல் வீடு கட்டக்கூடிய 3½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. சுப்பிரமணியம், சட்டத்தரணி, உரும்பராய் 1671

## வாடகைக்கு

கோண்டாவில் இருபாலை றோட்டில் உப்பார்கந்தோருக்கு சமீபத்தில் எல்லா வசதிகளுடன வீடு உடன் வாடகைக்கு உண்டு நேரில் தொடர்பு கொள்ளவும் தி. சண்முகராசா பொற்பதிறோட், கொக்குவில். 1652

## விற்பனைக்கு

கோப்பாய் சந்தியிலிருந்து நூறுயார் தொலைவில் பருத்தித்துறை வீதியில் 2 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. அத்துடன், 20 நவீன தையல் அமைப்புகளைக் கொண்ட மின்சாரதையல் மெஷினும் விற்பனைக்குண்டு. சனி, ஞாயிறு தொடர்பு கொள்க: S. அருணோதயராஜா, அம்பலவாணர் வீதி, வேதக்கோயில் அருகாமை, உடுவில். 1663

வண்ணார்பண்ணை பிரப்பங்குள லேனில் 1½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 145/4, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். 1659

5½' X 5½' புதிய கம்பளம் விற்பனைக்குண்டு. ராதாகிருஷ்ணாஸ், 392, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1673

நல்ல நிலையிலுள்ள Italian Fiat 128 உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். T. சூரியகுமார், அரசினர் வைத்தியசாலை குவாட்டஸ், தெல்லிப்பழை. 1665

ஸ்ரிறியோ றேடியோ, ஒலிப்பதிவு நாடா, இசைத்தட்டு கருவிகளுடன் Remote Controlல் இயங்கும் Music Centre கபினெற்றுடன் மலிவான விலையில் விற்பனைக்குண்டு. புதிய இல. 275, பலாலி வீதி, கந்தர்மடம். 1660

## தேவை

சிங்கப்பூரில் வாழும் நண்பர் ஒருவருக்கு பணிப்பெண் உடனடியாகத் தேவை. ஆங்கில அறிவுமுக்கியம் விபரங்களுக்கு நேரில் பின்னேரங்களில் சந்திக்கவும் த. துரைசிங்கம், 376, B, நாவலர் வீதி, யாழ்ப்பணம், (கனகரத்தினம் மகாவித்தியாலயம் முன்பாக, தொலைபேசி 22602) 1650

யாழ்ப்பாண இந்து வேளாளர் வகுப்புப் பெற்றோர் வெளிநாடொன்றில் I C M A கணக்காளராக உள்ள தமது மகனுக்கும். மருத்துவபீட இறுதியாண்டில் பயிலும் மகளுக்கும் பொருத்தமான மணமக்களைத் தேடுகின்றனர். சாதகக் குறிப்புடனும் ஏனைய விபரங்களுடனும் விண்ணப்பிக்கவும் விளம்பர இல: 1676 ஈழநாடு 1676

வெளிநாட்டில் தமிழ் டாக்டர் குடும்பத்தவருடன் வீட்டு உதவியாயிருக்க ஆங்கில அறிவு கொண்ட இளம் பெண் தேவை. தொடர்பு விளம்பர இல 1670 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1670

யாழ்ப்பாணம் கோவில் வீதி 61ம் இக்கத்திலுள்ள ஹரன் என்ஜினியரிங் கொம்பனிக்கு ஓட்டுனர், பொருத்துனர். கடைச்சல்காரர், பயிலுனர் ஆகிய வேலையாட்கள் உடன் தேவை. 1679

## WANTED

Wanted qualified Accountant with experience Cooks Stewards, Roon boys for a Tourist Hotel in Jaffna Apply Advt: 1668 C/o Eelanadu. 1668

## தேவை

கிளிநொச்சியிலுள்ள பெண்களுக்கான கருணா நிலையத்தில் தையல், வீட்டுநிர்வாகம், விவசாயம், தட்டச்சு, சமையல் கலை பேச்சு ஆங்கிலம் (கல்லூரியிலிருந்து விலகிய பெண்களுக்கு) விஞ்ஞானம், கணிதம் (6-10ம் வகுப்புக்களுக்கு) ஆகியவற்றில் இரண்டு அல்லது மூன்று பாடங்களைக் கற்பிக்கக்கூடிய முழுநேர அல்லது பகுதி நேர பட்டதாரி டிப்புளோமா, GCE A/L தகைமையுள்ள பெண் ஆசிரியர்கள் தேவை முழுநேர ஆசிரியருக்கு இருப்பிட வசதி உண்டு சேவை செய்யும் மனப்பான்மையுள்ளவர்களுக்கு தகைமைக்கேற்ற வேதனம் அளிக்கப்படும். 17-9-84இற்கு முன் விண்ணப்பிக்கவும். Director, Karuna Nilayam Vicarge St. James Church Nallur Jaffna, 1654

## வகுப்புக்கள்

A/L 85 தூய பிரயோக கணிதம் பகல்நேர வகுப்புக்கள் 1-10-84இல் ஆரம்பமாகின்றன. பிரிவு: I 8-00: காவிகள் 9-00திரிகோணகணிதம்பிரிவுII 10-30: தொடர்புவேகம்11-30: நுண்கணிதம், ஆசிரியர்: Ravi mohan, 74A, மணிக் கூட்டுக் கோபுர வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்திக்கும், பெருமாள் கோவிலுக்கும்இடையில்) 1610

வீடு வீடாகசென்று ஆங்கிலக்கல்வி இலக்கணத்துடன் கூடிய பேச்சுப் பயிற்சியும் பரீட்சைக்கு உதவக்கூடிய விளக்கப் பயிற்சியும் போதிக்கப்படும். வகுப்புக்கள் சகல பிரிவுவகுப்புகளுக்கும் வெளிநாடு செல்வோர்களுக்கும் போதிக்கப்படும். அத்துடன் வீட்டிலும் வகுப்புகள் நடாத்தப்படும் முக்கியகுறிப்பு தனிப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கும் பல பேர்ஒன்ருகச் சேர்ந்து படிப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு விஜயம் செய்யப்படும். தொடர்பு கொள்க: ச ஈஸ்வரமூர்த்தி, மே/ பெ சங்கரப்பிள்ளை, ஊரெழு மேற்கு சுன்னுகம். 1623

## சோதிடம்

கைரேகை, சோதிடம் பிறநாட்டுப்பிரயாணம், தொழில் வாய்ப்பு, உயர்கல்வி தேர்வு, காதல், கல்யாணம். தீராத நோய்கள், சிறந்த திருமணப் பொருத்தம், எந்த நேரமும் தீர்க்கமான ஆலோசனைபெற இராசேந்திரன் ''திருவுளம்'', அச்சுக்கூட ஒழுங்கை, ஸ்ரேசன் றோட், கொக்குவில். 1678

## தட்டச்சு கொள்ளை

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை சங்கானை உப அலுவலகத்தில் ஆறு இளைஞர்கள் ஆயுதங்களுடன் சென்று அங்கிருந்த ஊழியர்களைப் பயமுறுத்தி தமிழ் தட்டச்சுயந்திரம், பின் இணைப்பு உப கரணங்கள் ஆகியவற்றை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேற்படி அலுவலகத்தின் அதிகாரம்பெற்ற அதிகாரி காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்துள்ளார்.

## கல்வி

G. C. E. [O/L]ல் கட்டாய பாடமாகிய கணிதம் 15வருட அனுபவமுள்ள ஆசிரியரினால் நுணுக்கமான முறையில் ஆரம்ப அறிவிலிருந்து விஷேடசித்திக்காக குறைந்த காலத்தில் வீடுகளிற் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன். 10, கச்சேரி கிழக்குஒழுங்கை, சுண்டிக்குளி. யாழ்ப்பாணம். 1640

## யாருடையது

மன்னூர் அரிப்புத்துறையைச் சேர்ந்ததிரு. கிறிஸ்திரவீந்திரன் குருஷ் என்பவருடைய அடையாள அட்டையை திரு. க. நிற்சிங்கம் என்பவரும் சுழிபுரம் மேற்கு செல்வன் இரத்தினம் சந்திரகுமார் என்பவருடைய அடையாள அட்டையை திரு. கே. சிறிவரதன் என்பவரும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலகநேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.


I. C. M. A. - A. B. & P. I

CLASSES FOR NOVEMBER 84 EXAM ON PAST PAPERS COMMENCING ON 10-9-84.

RADHAKRISHNA'S POLYTECHNIC
392, Navalar Road,
Kailasapillayarkovilady
Jaffna. 1672

BECON STUDY CENTRE

(ஸ்ரீதர் முன்பாக)

A/L 85

பகல் நேர வகுப்புக்கள்
ஆரம்பம் : 10 - 9 - 84

App/pure — A. பத்மநாதன்
Phy — விமல்ராஜ்
Che — சிவகுமார்

நேரம் — 8-30

1629

ஆங்கில, தமிழ் தட்டச்சுஇயந்திரங்கள்

(ENGLISH AND TAMIL TYPEWRITERS)

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட
கீழ்க்கண்ட மொடல்கள்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

★ 'ஒலிம்பியா' 10''and 13''—'போனிக்ஸ்' 10''and13''
★ 'ஒப்ரிமா' 18'' and26'' —'ஒலிவெற்றி' 18''and27''
★ ஹல்டா (தமிழ்) — 15''

விலை ரூ. 3850/– தொடக்கம் ரூ. 20,500 வரை

சொற்ப தொகையே கையிருப்பில் உள்ளதால்
உங்கள் தேவைக்கு முந்துங்கள்.

விற்பனைக்குப் பின் எம்மால் பராமரிப்பு செய்யப்படும்.

சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.

484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி — 22134

காணிகள், ஆதனங்கள்
விற்பதற்கும் வாங்குவதற்கும்

பிறநாடுகளிலுள்ள எங்கள் வாடிக்கையாளர் பலருக்காக

யாழ். மாவட்டத்தில் காணிகள், வீடுகள், தோட்டங்கள் முதலியன
வாங்கவும், அவர்களுடைய ஆதனங்களை விற்கவும் பொறுப்பேற்றுள்ளோம்
அத்துடன்
உள்ளூரிலும் காணிகள் வீடுகள் வாங்கவோ விற்கவோ பொறுப்பேற்றுச்
சம்பந்தப்பட்ட சகல விஷயங்களையும் மேற்கொள்ளுகிறோம்.

அனுபவமும் திறமையுமுள்ள எங்களுடைய நில அளவையாளர் பெரிய காணிகளை அளந்து தோதான சிறுசிறு துண்டுகளாகப் பிரித்து விற்றுத்தருவார்கள்.

நாட்டமுள்ளவர்கள் காணி உறுதிகளுடனும், அளவுப் படங்களுடனும் எங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்.

ADDRESS :
37/2, Kachcheri-Nallur Road,
CHUNDIKULI
JAFFNA
Tel : 22782

Bhoomiputhra Enterprises
REAL ESTATE AGENTS.
Managing Partners :-
C. Balasingam, Attorney-at-Law
C. C. Cumarasamy, F.S.I Surveyor

வாரமலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் நூற்றுண்டு விழாவையொட்டி அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நிகழ்த்திய பேச்சின் சுருக்கம் இங்கு வெளியிடப்படுகிறது,

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமிஅவர்கள் தமது மூதாதையரின் பிறந்தகமான யாழ்ப்பாணத்தைப் பார்த்துப் போகவும், இங்கே தமது சீர்திருத்தச் சபையின் கிளை அலுவலகத்தைத் திறந்து வைக்கவும், தமிழ்ப் பெரியார்களைக் கண்டு பழகவும் விரும்பினுர். தமது மனைவியார் எதெல் மேரி அம்மையாருடன் 28-05-1906ல் இங்கு வந்தார்,

அவருக்கும் அவர் மனைவியாருக்கும் 04-06-1906 ல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் சட்டசபைப் பிரதிநிதி சேர். அம்பலவாணர் கனகசபை அவர்கள் தலைமையில் விற்பன்னர்கள் மத்தியில் மகத்தான வரவேற்புபசாரம் நடைபெற்றது, தமக்குக் கிடைத்த வரவேற்புக்கு அவர் நன்றி தெரிவித்துப் பேசினுர், அந்த நீண்ட உரையின் சுருக்கமே இது.

# யாழ்ப்பாணத்தில் கலாயோகி



தோற்றம்:
22–9–1877

மறைவு:
9–9–1947

"நான் குழந்தைப் பருவம் முதலாக இங்கிலாந்தில வளர்ந்தமையால் தமிழில் விரிவுரை ஆற்றக்கூடிய அளவு திறமை என்னிடம் இல்லை. எனவே நான் ஆங்கிலத்தில் பேசுவதை தயவு செய்து மன்னித்துக் கொள்ளவும். என்னை உங்களில் ஒருவனுக நீங்கள் வரவேற்று உபசரிப்பதைக் கண்டு உங்களுக்கு உளமார நன்றி கூறுகின்றேன். உள்ளம் பூரிக்கின்றேன் இந்த நாட்டில் வாழும் தமிழரும். சிங்களவரும் தத்தம் பிள்ளைகளை நல்ல முறையில் கல்விகற்பிப்பதற்கு பாடசாலைகளை ஆரம்பித்தல் வேண்டும். வேற்று நாகரிக கோட்பாடுகள் குழந்தைகளின் இதயத்திற் புகுவதற்கு அவசியமில்லை. தாய்மொழிக்கல்வியும் சமயக்கல்வியும் பிள்ளைகளுக்கு மிகவும் அவசியம் என்பேன். எங்கள் நாட்டு வரலாறு இலக்கியம். இசை, பண்பாடு ஆகியவற்றை எங்கள் பிள்ளைகள் நன்கறிதல் வேண்டும். நல்ல பாரம்பரியமும், பண்பாடும் வழிவழியாக நம் அருஞ்செல்வமாக நமக்கிருக்கும் போது நாம் நம் குழந்தைகளின் மனதையும், மதத்தையும் மாற்ற வேண்டிய தேவையில்லை. வேற்று நாகரிக மோகம் எம்மிடம் இருத்தலாகாது.

நான் என் ஆங்கிலவாழ்வை முடித்துக்கொண்டு இங்கே வந்ததும் இதனை மறுபிறப்பாக கருதுகின்றேன். என்னை நீங்கள் ஒரு குழந்தையாக கொள்ளுதல் வேண்டும். எனக்குமுன் பெரியவர்கள் பலர் இருககிறுர்கள். நான் பயபக்தியோடு உங்களுக்கு சொல்வதாவது: நாங்கள் எங்கள் தேசியத்தை உருக்குலைத்தலாகாது. மேற்கத்தேய நாகரிகத்தைக் கண்மூடித்தனமாக பின்பற்றலாகாது. நான் உங்கள் தொடர்பை இழந்து மேற்கு நாட்டில் வாழ்ந்தமையினுல் என் சொந்த நாகரிகத்தை சில காலம் மறந்திருந்தேன். நான் இனி உங்களில் ஒருவனுய் இருடபேன். நாம் சூழலுக்கமையவாழுதல் வேண்டும் எங்கள் நாகரிகம் கீழைத்தேய பண்பாட்டோடு பிணைந்துள்ளது.

## நமது கலாசாரம் பாரதப் பண்பாடு

என் தாயார் ஒரு ஆங்கில மாது. அவர் நன்ருகப் படித்தவர். அவர் என் தந்தையாரை திருமணம் செய்தபோது தமிழரின் கலாச்சாரத்தை வெகுவாக விரும்பியிருந்தார் எங்கள் கலாசாரம் பாரத பண்பாட்டிலிருந்து வந்தது. பாரதப் பண்பாடு மூவாயிரம் ஆண்டுகளுக்கு அப்பால் மூத்தது மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுந்த மூவா இலக்கியங்களும், தத்துவங்களும் எமக்குகிடைத்துள்ளன. இவற்றைவிட ஆழமான உணர்ச்சிப்பெருக்கை நாம் வேறெங்கும் காணவியலாது. இருந்தும் நாம் இந்தியப்பண்பாட்டில் இதயத்தைப் பதிக்காது வாழ்கின்ருேம் எமக்கு வல்லரசுகள் வழிகாட்டத் தேவையில்லை கிரேக்கர் ஒரு சிறு இனத்தவராய் இருந்தும், உலகத்துக்கு அதிகமாக உபகரித்துள்ளனர் அறிவுத்துறையில் குடிபோன உரோமப்பேரரசு சாதித்தவை எவையும் நிலை நிற்கவில்லை, அயர்லாந்து மிகச்சிறியதாவிருந்தும் ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகமாக உபகரித்துள்ளது. சின்னஞ்சிறிய நாடுகளான டென்மார்க், சுவிற்சலாந்து ஆகியவை கல்வித்தரத்தில் சிறந்துள்ளன. ஏகாதிபத்தியங்களைப் பற்றி நாம் கவலைப்படத்தேவையில்லை. அவற்ருல் எமக்குப் பயனில்லை.

> ✱ நமது நாகரிகம் பாரதப்பண்பாட்டிலிருந்துவந்தது
>
> ✱ பூவுலகில் ஒரு மூலையில் உண்டான நாகரிகம் மறுபகுதிக்கு மாற்றியமைத்தல் இயலாது
>
> —கலாயோகி

## நாகரிக மாற்றம் இயலக்கூடியதா?

இதனுல் மேற்கிலிருந்தும் நாம் அறியவேண்டுவன ஒன்றுமில்லை என்று நான் கூறுவதாகக் கருத வேண்டாம். ஆனுல் நாம் ஒன்றுமறியாத வெறும் காட்டுமனிதரலலர் நாம் கண்மூடித்தனமாகப் பிறரைப் பின்பற்றி வாழ்தல் நமக்கு அழகல்ல பூவுலகில் ஒரு மூலையில் உண்டான நாகரிகம் மறுபகுதிகளை மாற்றியமைத்தல் இயலுமா? நாம் எமக்குரிய நாகரிகவளத்தை உடையவர்கள் என்பதை மறுத்தலாகாது ஒருவன் உலகம் முழுவதையும் அடிப்படுத்தி, ஆவியை இழப்பதாலுல் வரும் பயன் என்ன? நாம் எமது பண்பாட்டிலும், பாரம்பரியத்திலும் விசுவாசமுள்ளவராயிருத்தல் வேண்டும். எங்கள் பாரம்பரியப் எத்தகையது என்பதை நாமறிதல் வேண்டும் மது உணவு உடை உறைவிடம் ஆகியவற்றின் முறைகளை நா மாற்றியமைத்து வேதனைப்படத் தேவையில்லை எந்தவெளி நாட்டு அரசாங்கமும் எங்கள் சொந்த வாழ்க்கை முறையை மாற்றியமைக்கத் தேவையில்லை.

எங்கள் நாட்டுப் பழைய மன்னர்கள் மக்களின் சமுதாய ஆத்மீகவாழ்வுக்காகபணி செய்தார்கள். வேற்று நாகரிகமும் வேற்று மதாசாரமும் உள்ள ஆட்சியாளர்கள் எம்மிலும் தாம் பெரியவர் என்னும் எண்ணம் உடையவர். அவர்கள் எம்வாழ்விலும் தாழ்விலும் பங்குபற்ற மாட்டார்கள். மின்ருே பிரபு என்பவர் இந்தியாவுக்கு வந்தபோது தமது ஆத்மா இங்கிலாந்திலும் உடம்பு இந்தியாவிலும் இருக்கும் என்றும் கூறியதை நாம் அறிவோம ஆங்கிலேய ஆட்சியாளர் எமக்குப் பொலிஸ்காரராயும், வழக்கறிஞராயும் கணக்காளராயும்இருக்கலாமேயன்றி அவர் எங்ஙனம் எமக்குத் தந்தையராதல் இயலும் அவர் எமக்கு இலக்கியத்திலும் சமயத்திலும் வழிகாட்ட முடியாதே. அவர் எம்நாட்டுக்கு வருவதும் போவதுமாயிருக்கிறுர்கள். அண்மையில் இலங்கையை விட்டுப்போன பிரதம காரியதரிசி சாதகக் கதைகளென்ருல் என்ன என்று என்னிடம் கேட்டார். இவர் சிங்கள மக்களின் கலாசாரத்தை எங்ஙனம் வளர்க்க முடியும்.

## மக்கள் சம்மதமின்றி அவர்களை ஆளமுடியாது

இந்நிலையில் நம்கையே நமக்கு உதவி. மக்களின்சம்மதத்துக்கு எதிராக அவர்களை ஆளுதல் முடியாது சிங்களவரும் தமிழரும் ஒற்றுமையாக நின்ருல் ஆங்கிலேயர் எம்மீது தமது அதிகாரத்தைச் செலுத்தமுடியாது. எங்கள் நாட்டுக்கு உரிய சிங்களத்தையும் தமிழையும் செல்வாக்கு இழக்கச் செய்ய முடியாது.

ஒருநாட்டின் தேசிய இனம் என்ருல் என்ன? அது ஒருசாதி மாத்திரமல்ல, அதற்குமொழி சமயம்- இலக்கியம்-இசை-கலை முதலியன அமைதல் வேண்டும், வெறும் அதிகாரம் மாத்திரம் அமைந்தால் போதாது. நாம் ஆங்கிலேயனுக நடிப்பதால் நமக்கு ஆங்கிலப்புலமை உண்டாகமாட்டாது. இக்காலத்தில் இலங்கையில்நாட்டுக்கு

(14ம் பக்கம் பார்க்க)

# ஆனந்தர் இன்றிருந்தால்...

இங்கிலாந்தின் இலட்சிய வாழ்வுக்கு வழிகாட்டிய பெரும் புலவர் உலகப்பிரசித்திபெற்ற ஜோன் மில்தன்.

கைத்தொழில் புரட்சியால் செல்வம் வந்துற்ற காலை நாட்டின் ஆன்மிகம் அருகிப்போவதை 19ம் நூற்றுண்டு தொடக்கத்தில் வாழ்ந்த புலவர் உவேட்ஸ் வேர்த் தாங்கொணுது சுமார் இரண்டு நூற்றுண்டுக்கு முன் மறைந்த மில்தனைக் கூவியழைக்கிறுர்.

"மில்தனுரே! இன்று நீர் எங்கள் நாட்டின் இழிநிலையைக் காண்பீராலுல்" என்று தொடங்கும் 14 வரி கொண்டபாட்டில் (Sonnet) தமது இதயத்தை வாரிக் கொட்டுகிறுர் ஆங்கில இலக்கியத்தில் மிக்க பிரபலம் பெற்ற பாட்டு இது.

எங்கள் நாடு இன்றிருக்கும் நிலையில் யாரைக் கூவியழைப்போம்.

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமியின் நினைவு தினத்தில் வேறு யார் எமக்குண்டு?

நிச்சயம் ஆனந்தர் இன்றிருந்தால் ஏன் இங்கு பிறந்தேனென்று தம்மைத்தாமே திட்டிக்கொள்வார்.

எழுபது ஆண்டு நிறைவு கண்ட கலைஞானிக்கு இமயத்தில் முனிவர்போல் வாழும் பாக்கியம் கிட்டவில்லை.

உலகத்தின் உத்தம புத்திரன் என்று அவர், மதிக்கப்பட்ட போதும் தம் மைத்துனர் சேர் பொன்னம்பலம் சகோதரர் போல் தமிழன் யாழ்ப்பாணத்தான் என்ற உள்ளுணர்வை அவர் மறந்ததில்லை.

சிங்களக்கலை, கலாசாரம் பற்றி பிரம்மாண்டமான ஆராய்ச்சி நூல்கள் எழுதி சுதந்திர இலங்கை மலர வேண்டுமென்று பல அரியபணிகள் புரிந்த மகான் ஆனந்தர்.

இலங்கைவாழ் தமிழர்கள் இந்தியப் பண்பாட்டில்நாட்டம் கொள்வதில்லை என்பது அவருடைய பெருங்கவலை.

தமிழர் தம் நாகரிக உடையில் தலைப்பாகை உரிய இடம்பெறவில்லையே என்று குறைகண்ட பெருமகன்; இன்று தமிழரின் தலைக்கேற்பட்ட கதி குறித்து என்ன நினைப்பாரோ?

"நம் கையே நமக்குதவி; மக்களின் சம்மதத்துக்கு எதிராக அவர்களை ஆள முடியாது" என்று அறைந்தவர் ஆனந்தர்,

என்னதான் நடந்தாலும் தமிழ்த்தேசியம் குலைந்துவிடாதென்பதை இக்கூற்று திடப்படுத்துகிறது.

ஹி ஹி

★

ஒருவர்; சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு என்கிறுர்களே, நீதிபதிக்கு முன்னுல் கோட்டுடன் ஒருவர் நிக்கிறுரே?

மற்றவர்: அவர் சட்டத்தரணியல்ல அவர் முதலியார்.

★

ஒருவர்: சட்டத்தரணி மாப்பிளையின் கலியாணம் என்ன நடந்தது.

புறேக்கர்; பகிஷ்கரிப்பைக் கேள்விப்பட்டதும் பெண் வீட்டார் மறுத்துவிட்டனரி.

★

ஒருவர்: சட்டத்தரணிகள் பகிஷ்கரிப்பு என்றுர்களே கோட்டுக்குள்ளே ஒரு சட்டத்தரணியைப் பார்த்தேனே.

மற்றவர்; சாணி வழக்கொன்றில் அந்தச் சட்டத்தரணிதான் வழக்காளி அதுதான் வந்தவர்

★

ஒருவர்: பகிஷ்கரிப்பினுல்சட்டத்தரணிகளுக்கு ஒரு வாரமாய் உழைப்பில்லாமல் போய்விட்டதே..

மற்றவர்: அவர்களுக்குத்தான் குறிப்பிட்ட சம்பளமில்லையே அடுத்த வாரம் 'பீசை' டபிளாக வாங்கிவிடுவார்கள்.

★

சட்டத்தரணி; ட்றைவர் காரை எடு. கோட்டுக்குப் போகவேண்டும்.

சாரதி: இன்று பகிஷ்கரிப்பல்லவோ?

சட்டத்தரணி; 'டென்னிஸ் கோட்டுக்குப் போக வேண்டும்.

★

நீதவான்: உமதுவழக்குக்கு எந்தச் சட்டத்தரணியை ஏற்படுத்தியிருககிறீர்?

வழக்காளி: பகிஷ்கரிப்பு என்று தெரிந்ததால் இந்தத் தவணைக்கு ஒருவரையும் ஏற்படுத்தவில்லை.

★

சட்டத்தரணியின் மனைவி; நீங்கதான் 'நீதிமன்றம்' போகவில்லையே, வாங்கோடவுணுக்குப் போயிட்டு வருவம்

சட்டத்தரணி: பட்டிமன்றம் ஒன்றுக்குப் போக வேண்டும், எனக்கு நேரமில்லை!

கா. யோ. கிரிதரன்

# நம்பிக்கைக்குரிய

# திரு. மு. திருச்செல்வம்

எது எப்படிப் போனுல் என்ன பதவி பறிபோகாமல் பார்த்துக் கொள்வது நமது நாட்டிலிருந்து வரும் ஒரு மரபு!

இதற்கு விதிவிலக்காக ஒரு சிலரே வாழ்ந்து காட்டியிருக்கிருர்கள். தேசிய நெருக்கடியொன்று ஏற்பட்டபோது பிரதமர் பதவியைத் தூக்கி எறிந்துவிட்டு அரசியல் துறவறம் பூண்டு வெளியேறினுர் திரு. டட்லி சேனநாயகா.

எந்த இலட்சியத்துக்காக ஐக்கியதேசியக்கட்சி ஸ்தாபிக்கப்பட்டதோ அந்த இலட்சியத்திலிருந்து அது பிறந்தபோது அக் கட்சியிலிருந்து வெளியேறியது மட்டுமல்ல அமைச்சர் பதவியையும் உதறிவிட்டுப் புறப்பட்டார் தமிழறிஞர் சு. நடேசபிள்ளை.

அரசுடன் ஒத்துழைத்தும் அது கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப் படாததுடன் தமது இலட்சியத்துக்கு மாருகவும் அது செயல்படுவது கண்டு பொறுக்காத திரு மு திருச்செல்வம் அமைச்சர் பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு வெளியேறினுர்!

1965ஆம் ஆண்டில் திரு. டட்லி சேனநாயகா அமைத்த தேசிய அரசாங்கத்தில் திரு. முருகேசன் திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக நியமிக்கப்பெற்றுர். டட்லி-செல்வா ஒப்பந்தத்தைத் தொடர்ந்து தேசிய அரசாங்கத்துக்கு இலங்கைத் தமிழரசுக்கட்சி ஒத்துழைப்பு வழங்க முன்வந்தது. மக்களால்தெரிவு செய்யப்பெற்ற பிரதிநிதிகள் அமைச்சர் பதவியேற்பதில்லை என்று தமிழரசுக்கட்சி செய்திருந்த முடிவைத் தொடர்ந்து டட்லி-செல்வா ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட 'மாவட்ட சபைகள்' அமைக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதற்காக திரு. மு. திருச்செல்வத்தை செனட்சபை உறுப்பினராக்கி அவரையே உள்ளூராட்சி அமைச்சராகவும் நியமிக்கத் தமிழரசுத் தலைவர்கள் வழிசமைத்தனர்.

## "நம்பிக்கையாக நடந்தவர்"

திரு. திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராகப் பணியாற்றியபோது எவரும் குறை சொல்ல முடியாத வகையில் பாரபட்சமின்றி நடந்துகொண்டார் மாவட்ட சபைகள் அமைப்பது சம்பதந்மாக அவர் எடுத்த முயற்சிகளுக்குத் தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகித்த இதர பல அரசியல்கட்சிகளும் ஐக்கிய தேசியக்கட்சியைச்சேர்ந்த சிலரும் முட்டுக்கட்டை போட்டு வந்தனர் இதேசமயம் தமிழரசுக்கட்சிக்குள்ளும் தீவிரவாத போக்கைக் கொண்ட இளைஞர்களும் மற்றும் சிலரும் திரு. திருச்செல்வம் மீது கணை தொடுத்தனர்! அமைச்சரவைக்குள்ளும் தாம் சார்ந்த அரசியல் கட்சிக்குள்ளும் பெரும் போராட்டத்தைச் சமாளிக்க வேண்டிய தர்மசங்கடமான நிலையில் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் நாடுமுழுவதும் தாம் பாரபட்சமற்ற முறையில் ஆற்ற வேண்டிய கடமையுடன் 'திரிசங்கு' நிலையில் திரு. திருச்செல்வம் நின்ருர்.

இதேசமயம் திருக்கோணேச்வர ஆலயப்பகுதியைப் புனித பிரதேசமாகப் பிரகடனம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது. இதற்குப் பிரதமர் திரு. டட்லியின் சம்மதத்தையும் அவர் பெற்றிருந்தார். ஆனுல் இதற்கு எப்படியோ ஆளும் கட்சிக்குள்ளும் வேறு இடங்களிலும் கடும் எதிர்ப்புக் கிளம்பியது.

## எஸ். எம். ஜி.

மாவட்டசபைகள் அமைப்பதற்கான முயற்சிக்கும் எதிர்ப்பு! திருக்கோணேச்சர ஆலயப்பகுதியைப் புனிதபிரதேசமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் எதிர்ப்பு?

கொடுத்த வாக்குறுதிகளைச் செயல்படுத்த முடியாத நிலையில் பிரதமர்!

தமிழரசுக்கட்சிக்குள்ளேயோ பெரும் சோதனை மீண்டும் தமிழர் நம்பிக்கெட்டகதை!

இந்நிலையில் என்ன செய்வது?

அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பது பற்றித் தீர்மானிப்பதற்காக யாழ். நகரில் இரண்டாம் குறுக்குத் தெருவிலிருந்த தமிழரசுக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் பொதுச்சபையின் முக்கியமான கூட்டம் நடைபெற்றது.

கூட்டம் நடைபெற்று முடிவுறும் தருணத்தில திரு. திருச்செல்வம் சில உறுப்பினர்கள் புடைசூழத் தமது மோட்டார் வாகனத்தில் வந்து அமர்ந்தார் பத்திரிகை நிருபர்கள் எவரும் சந்தித்து அவரிடம் எதுவும் கேட்காதவாறு அவரைச் கூட்டிவந்த கட்சி உறுப்பினர்கள் கவனித்துக்கொண்டனர்.

அவரது வாகனம் புறப்படும் சமயம் தம்மை நிருபர் 'ஈழநாடு' நிருபர் என்று காட்டிக் கொள்ளாமல் "ஐயா மீண்டும் எப்போது கோர்ட்டுக்குப்போகிறீர்கள்?" என்று காருக்குள் தலையைநீட்டிக் கேட்டார்

"திங்கட்கிழமை போகிறேன்" என்று திரு. மு. திருச்செல்வம் நிருபருக்குப் பதில் சொன்னதும் கார் புறப்பட்டுவிட்டது

மறுநாள் 'ஈழநாடு' பத்திரிகையில் முதல் பக்கத்தில் தலைப்புச் செய்திக்கு மேலே முக்கிய செய்தியாக "திங்கட்கிழமை 'திரு' கோர்ட்டுக்குச் செல்வார்" என்ற செய்தி வெளி வந்தது!

அமைச்சர் பதவியிலிருப்பவர் நீதிமன்றம் சென்று வழக்குப் பேசமுடியாது! திங்கட்கிழமை 'திரு' கோர்ட்டுக்குப் போகிறுரென்றுல் அதற்கிடையில்அவர் தமது அமைச்சர் பதவியை ரராஜினுமாச் செய்கிருரென்பதுதான் அர்த்தம்!

'திரு' ராஜினுமாச் செய்தார். தமிழரசுக்கட்சியும் டட்லி அரசுக்குக் கொடுத்த ஒத்துழைப்பை திரும்பப்பெற்றுக் கொண்டது!

## சொலிசிட்டர் ஜெனரல் 'திரு'

திரு, முருகேசன் திருச்செல்வம் 1907ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18ஆம் தேதி பிறந்தார். மலாயாவில் ஆரம்ப கல்வி கற்ற அவர்பின்கல்கிசையிலுள்ள சென் தோமஸ் கல்லூரியில் கல்வியைத்தொடர்ந்தார்.

இவரது கல்விபற்றித்தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் கூறியதை இங்கு தருகிறேன்.

"...நான் திரு. திருச்செல்வம் அவர்களைக் குழந்தைப் பராயத்திலிருந்து அறிவேன். 1919ம் ஆண்டில் எனது தந்தையாரைப் பார்க்க மலயாசென்றேன். திரு திருச்செல்வம் அவர்களின் தந்தையாரும் மலாயாவில் இருந்தார். எனது தந்தையாரும் திருச்செல்வம் அவர்களின் தந்தையாரும் நண்பர்கள்...

"... திரு. திருச்செல்வம் அவர்களின் தந்தையாரைப் பார்க்கச் சென்றபோது அவரது ஆண்மக்களுள் இருவரின் கல்வியின் எதிர்காலம் குறித்துக் கலந்துரையாடினேம். இரு ஆண்மக்களையும் தொடர்ந்து கல்வி கற்பதற்காக இலங்கைக்கு அனுப்ப விரும்பினுர். திரு. திருச்செல்வமும் அவர் தம்பி திரு இராஜேந்திராவும் இலங்கைகு அனுப்பப்பட்டனர். இங்குள்ள நல்லபாடசாலைகளுள் ஒன்ருன புனிததோமஸ் கல்லூரியில் இருவரும் கல்வி பயின்றனர்" என்று தந்தை செல்வா கூறியிருக்கிருர்

1926ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் திரு. திருச்செல்வம் வரலாற்றுத் துறையில் சிறப்புப்பட்டம் பெற்றுர். பல்கலைக்கழக யூனியன் தலைவராகஇவர் 1929ஆம் ஆண்டில் பணியாற்றினுர்.

பின்னர் சட்டக்கல்வி பயின்று 1933ஆம் ஆண்டு ஜூன் மாதம் வழக்குரைஞரானுர். சிறிது காலம் வழக்குரைஞராகத் தனிப்பட்டமுறையில் தொழில் செய்துவந்த திரு. திருச்செல்வம் பின்னர் நீதிபரிபாலன சேவையில் சேர்ந்தார். நீர்கொழும்பு பாணந்துறை, காலி ஆகிய இடங்களில் நீதிவானுகக் கடமையாற்றியபின் 1945ஆம் ஆண்டில் சட்டச் செயலாளருக்கு உதவியாளராக நியமிக்கப்பட்டார். 1947ஆம் ஆண்டில் இலங்கையின் அரசியலமைப்புத் தயாரிக்கப்பட்டபோது சேர். அலன்றோஸுக்கு உதவியாளராக இருந்தரர்.

1947ஆம் ஆண்டில் திரு திருச்செல்வம் சட்டமாஅதிபர் திணைக்களத்தில் முடிக்குரிய வழக்குரைஞரானுர். 1954ஆம் ஆண்டில் இவர் உதவி சொலிசிட்டர் ஜெனரலாக நியமிக்கப்பெற்றுர் 1957ஆம் ஆண்டில் சொலிசிட்டர் ஜெனரலானுர். 1959ஆம் ஆண்டில் திரு திருச்செல்வம் இராணியின் வழக்குரைஞரானுர். (கியு ஸி)

1960ஆம் ஆண்டில் நீதிபரிபாலன சேவையிலிருந்தும் ஓய்வுபெற்ற திரு. திருச்செல்வம் தனிப்பட்ட முறையில் தொழில்புரியத்தொடங்கினுர் அதேசமயம் அரசியலிலும் ஈடுபடத்தொடங்கினுர். திரு திருச்செல்வம் இலங்கைத்தமிழரசுக்கட்சியில் சேர்ந்து உழைக்க ஆரம்பித்தார் அதன் பிரதம அமைப்பாளர்களில் ஒருவரானுர். செயற்குழுவிலும் ஓர் உறுப்பினரரனுர். 1961ஆம் ஆண்டு மறியல் போராட்டத்தைத் தொடர்ந்து திருமதி சிறிமா பண்டாரநாயகாவின் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் அவசர காலநிலையை பிரகடனம் செய்து தமிழரசுக் கட்சித் தலைவர்களைப் பனுகொடை இராணுவ முகாமில் தடுப்புக்காவலில வைத்த போது திரு மு. திருச்செல்வமும் அவர்களுடன் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

## பெருமை தெரிந்தது

தமிழரசுக்கட்சிக்குள்ளிருந்த இளவட்டங்கள்திரு, திருச்செல்

(14-ம் பக்கம் பார்க்க)

## உணவு

- ★ கூழானுலும் குளித்துக் குடி.
- ★ பிறர் காணுமாறு உண்ணுதே.
- ★ வெங்காயம், முருங்கையை உணவில்குறை.
- ★ மனதைக் கெடுக்கும் மசால உணவுகளை உடனே விட்டுவிடு.
- ★ பகவான் அமுதுசெய்த உணவே அமுத உணவாகும்
- ★ பக்திதரும் உணவையே பெறுக.
- ★ தேனும் நெய்யும் தூய்மையளிக்கும்.
- ★ எல்லாநீரும் குடிநீர் அன்று.
- ★ உணவால் உடலும் உள்ளமும் திருந்தும்.
- ★ நல்ல உணவையே நாடி உண்க

— சச்சி


உ

முருகா

வேலும் மயிலும் துணை



தொண்டைமானுற்றுச் செல்வச் சந்நிதியில் எழுந்தருளியிருக்கும் வெற்றிவேற் பெருமான், புதிதாக நிர்மாணிக்கப் பெற்ற அற்புதச் சித்திரப் பெருந்தேரேறி பவனிவரும் இஞ்ஞான்றுமுருகன் அடியார்கள் தேர்த் தத்துவத்தினைத் தெளிவுறத் தேர்ந்திட உதவும் வகையில், சைவ உலகின் கலங்கரைவிளக்காகத்திகழும் அருளாளர் சிலரின் படைப்புக்களை "தேர்" என்னும் பெயரில் நூலாகத் தொகுத்து வெளியிட்டு, முருகன் அடியார்களுக்கு இலவசமாக விநியோகிக்கத் திருவருள் பாலித்துள்ளது.

இங்கு குறிப்பிடும் இடங்களில் அடியார்கள் இந்நூலைக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேம்.

1. நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
   நல்லூர்.
2. 'கலைச்சோலை'ப் புத்தகசாலை
   காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை.
3. "மொடேண் ஸ்ரோர்ஸ்"
   நெல்லியடி.
4. சோதிட விலாச புத்தகசாலை
   பெரியகடை, யாழ். நகர்
5. பூபாலசிங்கம் புத்தகசாலை
   மத்திய பஸ் நிலையம், யாழ். நகர்.
6. குளோபல் பணியகம்
   யாழ். நகர்

குளோபல்

ரெலெக்ஸ் ரெலிபோன் சேவை வல்லுநர்கள்

யாழ்ப்பாணம்

(யாழ். தபாற் கந்தோருக்கு அருகாமையில்)

ரெலி: 23015, 23249, 23312



★ அமெரிக்கா ★ கனடா ★ ஜேர்மனி

★ பிரான்ஸ் ★ இத்தாலி

போன்ற சகல நாடுகளுக்கும் செல்ல

டிக்கட் மற்றும் சகல ஒழுங்குகளுக்கும் நாடுங்கள்!

AIR-TRANSIT

TRAVEL CONSULTANTS

99-2/56 B கபூர் பில்டிங், 2-வது மாடி, கொழும்பு-1. போன்: 549365

538 (290), ஆஸ்பத்திரி வீதி, [ஆஸ்பத்திரி முன்பாக] யாழ்ப்பாணம். போன்: 22689

# எமது சிறுகதை

**1966ல் தமிழக சஞ்சிகையான 'தாமரை'யில் வெளிவந்த 'சிறு குறுநாவல்' இங்கு சிறுகதையாக வெளிவருகிறது.**




மிஸிஸ் சறோஜா சுந்தரலிங்கம் அவர்கள், தனது 'உயிர்த்தோழி' மிஸிஸ் விஜேயா சிற்றம்பலம் சகிதம் கிளம்பி வீதியில் இறங்கிய போது, மணி ஐந்து ஐந்தே கால் ஆகிவிட்டது

நாகரிகத்தின் உச்சக்கட்டமான 'கொலம்பு செவன்'-சினமன்காடின் டவுனிலிருந்து 'லவ் ஒடை' என்னும் 'அடல்ற்ஸ் ஒன்லி' 'பிக்ஸர்' பார்க்க, 'மஜெஸ்ரிக்' தியேட்டரைத்தேடி, வழக்கத்துக்கு மாறுக, இன்று கோல் ரேட் பக்கமாக இருவரும் 'வோக்' பண்ணிக்கொண்டிருந்தார்கள்.

அன்று மிஸிஸ்சளின் கார் ஓய்வெடுத்துக்கொண்டு, கருஜ்ஜில் கிடந்தது. ட்ரைவர் சைமன் சிங்கோ வலு குஷாலாக 'வெருண்டா'வில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான்

அவனுக்கென்ன? அம்மாக்கள் வந்தால் வேலை; இல்லாவிட்டால் அவன் பாடுசும்மா. மணி ஐந்தரை ஐந்தே மூக்காலாகிக்கொண்டிருந்தது

மிஸிஸ் விஜேயா பாம்பை மிதித்தவன் போல ஒரு 'திடுக்' காட்டத்துடன், ''ஓமை சறோ. இன்டைக்கு நாங்கஆக லேட்டாயிட்டோம் 'பிக்ஸர்' சரியாகச் 'சிக்ஸ்ஸக் குளொக்'குக்கு 'ஸ்ராட்'டாயிருக்கும். "கம் குய்க்லி'' என்று தனது கைக்கடிகாரத்தைப் பார்த்த வண்ணம் ஒரு கிளிக்குரலில் கீச்சிட்டுச் சொன்னுள்.

உடனே இருவரின் நடையிலும் 'சடா'ரென்று ஒரு அசுர வேகம் தட்டியது.

அந்த வேளையிலே ...

கொள்ளுப்பிட்டிஜங்ஷனில், ஒரு ஹோட்டல் முகப்பிலே எப்பவோ தொங்கப்போட்டிருந்த 'நெஸ்ப்றே'க்கான ஒரு பெரிய 'அட்வடைஸ்மென்ற் போட்' ஒன்று. இப்பவும் வெகு பரிதாபமாகச் செத்த சவம்போல் தூங்கிக்கொண்டிருந்தது.

அந்த விளம்பரப் போட் பலகையைக் கண்டதே தாமதம், கால்கள் தரித்தபடி மிஸிஸ்கள் இருவரும் தமக்குள்ளே நாவூறிகொண்டனர்.

இருந்தாற்போல் இலங்கையில் அரிசிக்கு வெட்டுவிழ, கூடவே 'மில்க்டின்'களுக்கும் துண்டுவிழுந்து விலை ஏறிவிட்டதுதான் மிஸிஸ்களின் இந்த 'நாவூறல்'களுக்குக் காரணமென்றுலும், கொலம்பு செவன் சினமன்காடின் தனக்கென்று பிரத்தியேகமாய்த் திணித்துவைத்த புதுநாகரிகத்தினுல், அதில் பழகிப்போன தோஷமும் இந்த 'நெஸ்ப்றே'யில் இவர்கள் இப்படிக் கண்வைக்க ஒரு காரணமாயிருந்தது. இநத உண்மைகளெல்லாம் மிஸிஸ்களின் குழந்தைச் செல்வங்களை தூக்கித்தாலாட்டிச் சீராட்டி வளர்க்கும் இவர்களின் ஆயாக்களுக்கே வெளிச்சம்.

'இது யுத்தகாலத்திலும் வராத பொருளாதார நெருக்கடி, எந்தக்காலத்திலும் இப்படியாக எங்கள் மெனிகளை இந்தப் பொருளாதாரம் நெரிடிசுது டையாது. ஆர் எங்கே சோத்துக்குத் தவணைடையடித்தாலும இந்தக் 'கொலம்பு செவன்' பாதிக்கப்பிட்டதே கிடையாது. ஆனுல், அது இப்போது பாதிக்கபபட்டிருப்பது, இந்த 'மில்க்டின்'களினுல் மட்டும்தான்' என்று தனக்குள்ளே சொல்லித் துக்கித்துக் கொண்டா, மிஸிஸ் சறோஜா.

'நெஸ்ப்றேகூட நெருக்கடிக்குள்ளாகி, அது அறவே இல்லாமல்போய்விட்டதே. புலி பசித்தாலும் புல்லுத்தின்னுது; மில்க் சாப்பாடு இல்லாவிட்டால் அந்தப்புலியின் கதிதான் எங்களுக்கு வரும்' என்று சலித்துக்கொண்டா, மிஸிஸ் விஜேயா.

இருவருக்கும் ஒரு மீளாத சலிப்பு.

''அம்மா...''

கரடி கத்தினமாதிரி, அந்த 'இன்ப அமைதி'யைக் கலைத்துக்கொண்டு, அவர்கள் முன்னே கைநீட்டி நிற்கும் ஒரு பிச்சைச்காரக் கிழவன்- அவன் கிழவனுகத் தோன்றவில்லை; அவர்களின உயிர் எடுக்கவந்த யமகிங்காரனுகவே அப்போது தோன்றினன்,

மிஸிஸ்களின் 'வெறுப்புணர்ச்சி' முகங்கள் முழுவதிலும் சில்லிட்ட போதும் அந்த அப்பாவிப் பிச்சைக்காரக் கிழவனுக்கு அது புரியவேயில்லை.

''அம்மா உங்களுக்குப் புண்ணியம் கிடைக்குமம்மா...''

''உங்களுக்குப் புண்ணியம் கிடைக்குமம்மா' என்று அவன் சொல்லி அடுத்த வார்த்தை வாய் திறக்கவில்லை. மிஸிஸ் சறோ 'களுக்' கென்று சிரித்தா. அந்தச்சிரிப்பினுள் நெளிந்த ஒரு 'நையாண்டியும்' கேவலம் அந்தப்பிச்சைக்காரப் பரதேசிக்குப் புரிந்ததோ என்னவோ, மிஸிஸ் விஜேயாவுக்கு அது நன்ருகப் புரிந்துவிட்டது.

அவனேமீண்டும் அவர்களைப் பார்த்துக் கைநீட்டிய வண்ணம் அந்தப் பழைய பல்லவியான 'புண்ணியம் கிடைக்குமம்மா' என்று சொல்லவும், ஒரு நச்சரிப்புடன், ''சரிதான் சும்மா அலட்டாமல் இரப்பா. எங்களுக்குப் புண்ணியம் கிடைதிருந்தால் ஒரு 'நெஸ்ப்றே'க்காக இப்படி எல்லாம் அம்பலோ திப்படுவோமா?'' என்று அவனை ஏளனமாகப் பார்த்துக்கேட்கும் ஒரு தோரணையில தன்னிலே 'முணுமுணுத்தா', மிஸிஸ் சறோஜா.

அதைக்கேட்ட போது அந்தப் பிச்சைக்காரக் கிழவனுக்கு ஒருபக்கம் சிரிப்பாகவும், மறுபக்கம் ஆச்சரியமாகவும், இன்னொருபக்கம் பரிதாபமாகவும் இருந்தது.

அவனுக்கு நோனுக்கள் படும் அந்தரநிலை துபபரவாக விளங்கி விட்டது.

சிரித்துக் கொண்டே கேட்டான்;

''நோனும்மா உங்களுக்கு 'நெஸ்ப்றே' உண்மையாகவே தேவை தானு?''

''ஆம்''

இருவர் வாய்களிலும் வந்த அந்த ஒரே ஆமோதிப்பு, ஒரு பச்சைக் குழந்தை வாயிலிருந்து வந்தமாதிரி வெளிக்கிட்டது. அவன் அதையும் கவனித்துக் கொண்டான்.

எந்தவித நாணமுமின்றி, இப்போது நோனுக்களின் கண்கள் அந்தப் பிச்சைக்காரனையே பார்த்தன

''நோனும்மா, கனக்க யோசியாதையுங்கள். அப்படி அவசரமென்டால், நேரே 'மவுண்டலவேனியாச் சந்திக்குப்போங்க அங்கேபோய் கமலாம்பாள் ஸ்ரோஸ் மனேஜரை 'இரகசிய மாகச் சந்திச்சால், அடுத்த நிமிஷம் உங்களுக்குவேண்டிய நஸ்டறே உங்கள் காலடியில் தேடி வந்து விழும்''

பற்பல அர்த்தங்களை உள்ளடக்கி இந்த விஷயத்தை மெதுவாக அம்மாக்கள் காதுகளில் போட்டான். அது அம்மணிகளுக்குப் புரியவேயில்லை காரணம், அவர்களின் காதெல்லாம் 'நெஸ்ப்றே'யில் மட்டும் இருப்பதுதான்.

'மவுண்டலவேனியா'வுக்குச் செல்லும் 'டபின் டெக்கர் பஸ்,ஸிலே, அதன் 'அப்ஹறட்டிலே 'வேக்கண்ட்'டாயிருந்த ஒரு 'பாக்சீட்'டில் வெகுபக்குவமாக அமர்ந்து கொண்ட போது, இருவரும் இந்த உலகத்தையே மறந்தவர்களாகவும். போனபோக்கில் 'நெஸ்ப்றே' மில்க்டின்'களில் குறைந்தது, ஒரு குரோஸுக்'காவது ரகசிய ஓடர் கொடுத்துவிட்டு உடனே திரும்பி விடலாம் என்ற ஒரு பெரும் மகிழ்ச்சியிலும் வலுவாகப் பூரித்துப் போயிருந்தனர்.

மிஸிஸ் சறோ 'சடா'ரென்று துள்ளி எழுந்து அங்கலாய்த்தபடி எதையோ தேடிக்கொண்டிருப்பதைக் கவனித்த மிஸிஸ் விஜே, ''வட் ஆர் யூ சேச்சிங்?'' என்று கேட்கவே, மிஸிஸ் சறோ அழுகிற பாவனையில், ''மைஹான் பாக் கோன் ரு தற்வே'' என்று எதிரே இருந்த இரண்டாவது சீட்டைச் சுட்டிக் காட்டினு''

''கோ அன்ட் ரேக்''

''ஹவ் கான் ஐ கோ?''

''வை?''

''வன் ஓவ் த ஜெண்டில் மன் சீற்றட தெயர்''

''ஓ ஐ ஸி......''

எதிரே வலு குசாலாக இருந்த அந்த ஜென்டில் மன்' சற்றும் ஆசுவாசப்படாமல், மெதுவாகக் கண்களை உருட்டிக் கீழே பார்த்தார்.

அங்கே-அவரின் கால்களுக்கு கீழே'ப்ளாக் ஹான்பாக்' ஒன்று 'செத்தேன் சிவனே' என்று ஓர் அனுதைச் சிசுவைப்போல் வெகு பரிதாபமாகக்கிடந்தது.

''அதற்குச் சொந்தக்காரி யாராயிருக்கும்? என்று அவர் தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தபோதும், அதைப்பற்றி அவர் எந்தவித அக்கறையும் காட்டாமல் தானும் தன்பாடுமாக இருந்தார். அப்படி இருந்தவர், 'சட்'டென்று விழித்துத் துடித்தவராக, தான் கொண்டுவந்த ஒரு 'டின்பார் சலை' வெகு பக்குவமாக அணைத்து வைத்தபடி மீண்டும் ஏனோதானோவென்று 'அசகண்டை'யாக இருந்து கொண்டார்

மிஸிஸ் சறோ, மேனியைச் சாடையாக நுளுக்தி. வ்விய மாக எழுந்து. று நாரி வளைப்புக் கொடுத்து, அங்கு அவரின் கால்களுக்குக் கீழ எட்டிப் பார்த்தா அந்த 'ஹான்பாக்'கை எடுத்துத் தரும்படி அந்த ஜென்டில்மனிடம் கேட்பதா அல்லது தானே எழுந்து போய் அதை எடுத்துக் கொண்டு வருவதா என்று யோசித்த மிஸிஸ் சறோ,பிறகு என்ன நினைத்தாவோ தெரியவில்லை. நாணத்தினுல் சிவந்து போன தனது முகத்தைத் தடவியபடி ஒரு கணம் சுற்றுமுற்றும் பார்த்தா.

பஸ்ஸில் இருந்த பிரயாணிகளின் கண்கள் அனைத்தும் ஒரே வேளையில் அவ மீது விழவே, அதைப்பின் சீட்டிலிருந்து பார்த்துப் புரிந்துகொண்ட மிஸிஸ் விஜேயா, ''சறோ, வட் ஆர் யூ லுக்கிங்? யூ பெற்றர் கோ அன்ட்ரேக் தற்'' என்று உசுப்பி விட்டும் கூட, மிஸிஸ் சறோ அசையாது அப்படியேதான் நின்ரு.

பஸ் ஓடிக்கொண்டிருந்தத;

அந்த ஜென்டில்மன் அப்பவும் முழுமையாகவே தன்னை மறந்து தூங்கி வளிந்துகொண்டிருந்தார்.

எக்ஸ்யூஸ் மீ''

அந்த மனிதருக்கு இந்தக் குயில் குரல் மெல்லக்கேட்டது

சதிரம் அசையாமல் கண்களை உருட்டி மிஸிஸ்சறோவை அந்த 'ஜென்டில்மன்' பார்த்த போது, அவ தனது தேகம் நாணத்தால் சுருங்கிக் கூசுகிற தான ஒரு பாவனையில் நின்று தெறித்துக் கக்கிய ஒரு காந்தச் சிரிப்புடன் அவர் கால்களுக்குக்கீழே அனுதையாக விழுந்து கிடக்கும் அந்த 'ஹான் பாக்' கைச் சுட்டிக் காட்டி, ''எக்ஸ்யூஸ்மீ ஐ வோன்ட்ரு ரேக் தற்'' என்று சொல்லவே, அவர், அவவைப் பார்த்தும் பாராதவர் போல், மிகச் சாதாரணமாக, தனது கால்களை மெதுவாகத் தூக்கி எடுத்துக் கொண்டு கீழே குனிந்து பார்த்தார்.

கீழே அவவின் அந்தக் கறுத்த 'ஹான் பாக்' ஒரு சள்ளைப்பாடாய்க் கிடந்தது. அதைக் கண்டதும் முகத்தில் ஒரு சிறு புன்னகை மலர சாடையாக அவவைப் பார்த்துக் கொண்டு, 'இஸ் இற் யூவர்ஸ்?' என்று அவர் கேட்கவே, அவ, சுழித்துச் சிரித்தவாறு, 'யேஸ் தற்இஸ் மைன்' என்று சொன்னு. சொன்னவுடன், அவர் அதை எடுத்துக் கொடுக்கவென்று 'அவுக்' என்று குனியும்போது அவருடன் இருந்த அந்தப் பெரிய டின் பார்சல்- அது டின் பார்சல் அல்ல; சுமார் ஐந்து ருத்தல் கொள்ளக் கூடிய ஒரு 'நெஸ்ப்றே டின்' என்பது மிஸிஸ் சறோவுக்குத் தெரிந்துவிட்டது.

அந்த நெஸ்ப்றே டின்னைக் கண்டதும் மிஸிஸ் சறோ தனது 'ஹான் பாக்கின்' நினைவுகூட அற்றவவாய், அவர் வைத்திருந்த அந்த நெஸ்ப்றே டின்னையே பார்த்துக் கொண்டு வாயூற நின்ரு.

அந்த மனிதர் அந்த 'ஹான் பாக்'கைக் குனிந்து எடுத்து அவகையில் சேர்ப்பிக்கும் வரை' அவ, இவர் வைத்திருந்த அந்த நெஸ்ப்றேயையே உற்றுப் பார்த்தா.

அவவின் அந்தப் பார்வையை அவர் சாடையாக உணர்ந்து கொண்டார்.

அப்போது அவர் முகத்தில் ஒரு மெல்லிய புன் சிரிப்பு வெடித்து, அவரோடு அது உறைந்துவிட்டது.

'ஒருறுத்தல் நெஸ்ப்றேஎடுக்க நாங்கள் நாய்படாப்பாடுபட்டும் முடியாமல் இருக்கும் போது. இந்த ஆள் இந்தப் பெரிய நெஸ்ப்றேயை எங்கே அடித்துக்கொண்டு வந்திருப்பார்?' என்று ஒரு கணம் சிந்திக்கத் தொடங்கினு மிஸிஸ் சறோ.

அந்த நெஸ்ப்றேயைக் கண்டதும் மிஸிஸ்சறோ பிரமித்து நின்றதை அவர் யூகித்துக் கொண்டபோது. அவரிடம் ஏதோ ஒரு புதிய ஆண்மையும், வீம்பும் தலை தூக்கி ஆடினமாதிரி அவரின் ஒரு அநாயாசப் பார்வையில் தெரிந்தன.

[6ம் பக்கம் பார்க்க]

## அழகுக் கிறக்கம்

பொய்கையிலே பூத்திருக்கும் போதும் - மலர்
பொட்டவிழ்ந்து இதழ்சிரிக்கும் போதும்
கைவளைகள் கலகலக்கும் பொதும் ஒலி
காற்றினிலே மிதந்துவரும் டோதும்
மைவிழிகள் துறுதுறுக்கும் போதும் - கான்
மானெனவே துள்ளுகின்ற போதும்
வைகையில் நீர்சலக்கும் போதும் - குழல்
வாசனை நன்றே மணக்கும் போதும்

முல்லையென முறுவலிக்கும் போதும் - பல்
முத்தெனவே ஒளிசிந்தும் போதும்
அல்லிமலர் அழகொளிரும் போதும் - பாதம்
அனைவினிலே நடைபயிலும் போதும்
கொஞ்சு கிளித்தமிழுரைக்கும் போதும் - இசை
கொட்டுகின்ற யாழொலிக்கும் போதும்
வெஞ்சமரிற் படைகொள்ளும் போதும் - கை
வேலெனவே நீயிருந்த போதும்

தென்னையிளங் கீற்றசையும் போதும் - குயில்
தெம்மாங்கு பண்ணிசைக்கும் போதும்
அன்னமென அடியெடுக்கும் போதும் - மயில்
அழகுடனே அசைந்தாடும் போதும்
சித்திரமாய் உனைவரையும் போதும் - எழிற்
சிற்பமெனச் கடைந்தெடுத்த போதும்
நித்திலத்தில் ஒளிப்பூக்கும் போதும் - இந்த
நிலமடந்தை களிகொள்ளும் போதும்

வித்தகரின் உளம்மகிழும் போதும் - புது
விந்தையிங்கு நிறைகின்ற போதும்
மாருதளிரின் மடியுறங்கும் போதும் - இள
மங்கைநீ புன்னகைக்கும் போதும்
தீந்தமிழிற் கவிவடிக்கும் போதும் - குளிர்
தென்றலென உடல்தழுவும் போதும்
என்னைக் கிறங்கவைக்கும் அழகே - நீ
என்நெஞ்சத் தமிழாகி வாழ்க!

— நெடுந்தீவு லக்ஸ்மன்.

# சிறுகதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அவஅமர்ந்துங்கூட அவவின் வாயோ அமரவில்லை. அந்த ஜென்டில்மன் வைத்திருக்கும் நெஸ்ப்றேயைப் பற்றி 'குசுகுசுத்'துக் கதை கதையாக மிஸிஸ் விஜேயாவுக்குச் சொல்லி அளந்து கொட்டிக் கொண்டிருக்கவே, மிஸிஸ் விஜேயா, 'அந்த நெஸ்ப்றேயை எங்கே எடுத்தீர்கள் என அவரிடம் கேட்டிருக்கலாமே?'' என்று சொல்வது போல் இவவுக்குப் பாவனை காட்டினு.

இப்படியாக மிஸிஸ் சரோவும், மிஸிஸ் விஜேயாவும், வாக்கினுலும், கிரியையினுலும் களேபரப்பட்டிருப்பதை ஒரு விநோதக் காட்சியாக அதில் இருந்த சக பிரயாணிகள் அனைவரும் இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருந்தனர். இதை இந்த மிஸிஸ்கள் இதுவரை கொஞ்சங்கூடக் கவனிக்கவில்லை ஆதலால் தொடர்ந்து அந்த வாய்ப் பேச்சும், இந்தக் கைப்பாவனையும், முகச் சுழிப்பும், சிரிப்பும், உடல் நெளிப்புமாகவே இருந்தார்கள். மிஸிஸ்களின் இந்தக் குதூகலச் சந்தடியை கலைத்துக்கொண்டு, ஒரு ஹோல்டிங் பிளேஸில்' வந்து தரித்தது. பஸ்

அதுதான் 'மவுண்ட்லவேனியா' பஸ் ஸ்ராண்ட்.

★

பிரயாணிகள் புற்றீசல் கிளம்புவதுபோல் பஸ்ஸில் இருந்து வெளியே இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனுல், மிஸிஸ் சரோவும், மிஸிஸ் விஜேயும் தாங்கள் இங்கேயுள்ள கமலாம்பாள் ஸ்ரோஸில்தான் அந்த நெஸ்ட்றேயை வாங்க வந்தோம் என்பதைக் கூடத் துப்பரவாக மறந்து விட்டவர்கள் போல், வடிவாகத் 'தாக்கற'ப் போட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

சற்றுவேளையால் மிஸிஸ் விஜேயா பஸ்ஸை விட்டு இறங்குவதற்குத் தன்னைத் துரிதப்படுத்தியபோது, மிஸிஸ் சரோ, மிஸிஸ் விஜேயாவின் தொடையில் சிமிக்கினுமல் கிள்ளி 'எல்லோரும் இறங்கிப் போகுமட்டும் அமைதியாக இருக்கும்படி ஒரு கண் சமிக்ஞை செய்து அவவை இருத்தினு.

மிஸிஸ் விஜேயாவுக்கு விஷயம் புரியவில்லை; 'தறுதறு' வென்று முழிசத்தொடங்கினு

அப்போது அந்த 'ஜென்டில்மன்' ஒரு கொட்டாவி விட்டவராக வாயை அகலத் திறந்து சோம்பல் முறிக்கும் பாவனையில் கைகளை மேலே உயர்த்தித் திருகணிமாதிரி வளைத்து நாரியை நிமிர்த்தி மிக அமைதியாக எழுந்தார்.

அவர் என்ன நினைப்பில் எழுந்துபோகிருரோ தெரியவில்லை; அவர் உயிர்போல் பாதுகாத்துக்கொண்டு வந்த 'நெஸ்ப்றேடின் பார்சல் அவர் கையில் அப்பொழுது அவர் வசம் இருக்கவில்லை.

இதைக் கண்ட மிஸிஸ் சரோ, கண்களை அகல விரித்து விழித்து அந்த ஜென்டில்மனைக் கடைக்கண் எறிந்து சாடையாகப் பார்த்துக் கொண்டா.

அவர் மெதுவாக இறங்கியது போலவே மிகச்சாதாரணமாக வீதி வழியே சந்தடியின்றி நடந்துபோய்க் கொண்டிருந்தார்

இந்தப் பெரிய நெஸ்ப்றேடின்னை இவ்வளவு கரிசனையோடு கொண்டு வந்து பக்குவமாக வைத்திருந்த அந்த ஜென்டில்மன், அதையே இப்படி மறதியாக விட்டு விட்டு வெட்ட வெறுங் கையோடு எழுந்து போவதைக் கவனித்த மிஸிஸ்கள் இருவருக்கும் தலைகால் தெரியாத ஒரு புளுகம் அப்போது தலைவிரித்தாடியது.

''ஹி இஸ் ஏ மாட்'' என்று சொல்லித் தங்களுக்குள்ளே அந்த ஜென்டில்மனைப் பரிகசித்துக் கொண்டார்கள்.

அந்த உன்னதமான ஒரு இன்ப சாகர நிலையைச் 'சடா' ரென்று ஒடித்து விடுவது போல, திடீரென்று மிஸிஸ் சரோ முகத்தைக் கறுக்கவைத்துக்கொண்டு. உடனே 'அவுச்' என்று எழுந்து, முன் பக்கச் சீட்டை எட்டிப் பார்த்தா.

அதே நெஸ்ப்றே; அந்த ஜென்டில்மன் இறுகப்பொத்திப் பொத்தி வைத்திருந்த அந்த நெஸ்ப்றே. அவர் இருந்து விட்டுப்போன அந்த முன்பக்கச்சீட்டில்இப்பொழுது தேடுவாரற்று ஒரு அனுதை போல் கிடந்தது

மிஸிஸ் சரோ 'அவுக்'கென்று கால்களை உன்னி இடறி எடுத்து இரண்டு கவடு 'சடா' ரென்று பாய்ந்து ஓடிப்போய் அந்த நெஸ்ப்றே டின்னைக் கையில் இடுக்கி எடுத்துக் கொண்டு எதுவித சுணக்கமும் இல்லாமல் பஸ்ஸை விட்டு இறங்கியபடி, மிஸிஸ் விஜேயாவைப் பார்க்காமலே, ''ஐ ஆம் கோயிங்'' என்று சொல்லி விட்டு அடுத்த கவடு வைக்கவே, மிஸிஸ் விஜேயா உண்மையாகவே மின்னல் அடிபட்ட மாதிரி ஏங்கி மலாரடித்து விறைத்துப் போனு.

இரண்டு மிஸிஸ்களின் அந்தச் சந்திரபிம்ப வதனங்களிலும் இப்போது மருந்துக்குக் கூடச் சிரிப்பு இருக்கவில்லை; இரண்டு அந்த அழகான முகங்களும் 'கடுகடு'த்தபடியே தெரிந்தன.

'ஓ, மை கோட்... நான் மிஸிஸ் சரோவை நம்பி வழி நடந்தேன் ஒரு நெஸ்ப்றேக்காக; அதுவும் யாரோ இலவியத்தில் விட்டிட்டுப்போன அந்த நெஸ்ப்றேயைக்கண்டு போட்டு, அதைத் தனக்கு மட்டும் உரிமையாக்கிக்கொண்டு போக இந்தத் தேவடியாள் எத்தனிக்கிறுளே' என்று ஒரு கணம் நினைத்தபோது கடுங்கோபம் இவ தலையில் ஏறிவிட்டது.

நகமும் சதையும் போல் என்றும் இணைபிரியாதிருந்த இந்த இரண்டு 'உயிர்த்தோழி'களுக்கும் மேலாக, கேவலம் இந்த வயிறு வேண்டி நிற்கும் ஒரு சிறு பொருளான இந்த நெஸ்ப்றே வந்து குறுக்கே நின்று இப்படி மோதிக் கொண்டு கிடந்தது.

மிஸிஸ் சரோ வெகு உற்சாகத்துடன், ஏதோ தனக்கு உயில் எழுதி வைத்திருக்கிற ஒரு ஆதனத்தை எடுக்கிற வாக்கில் அந்த நெஸ்ப்றே டின்னைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு, 'இது என்னுடைய நெஸ்ப்றே என்ற பாவனை காட்டி. ஒரு திடும்பு'ப் பார்வை பார்த்துக்கொண்டு நடையைக் கட்ட ஆயத்தமானு.

''சரோ, டோன் ரேக் தற் தற் இஸ் மைன்'' என்று மிகவும் அழுத்தமாக, 'தனது' என்பதை நாக்கு உறுத்தி விஜேயா சொன்னபோது, அவ ஒடி முழிசினு. உடனே மிஸிஸ் சரோ, தனது மேனியை ஒரு தடவை சிலுப்பிக் கொண்டு, பற்களை நரிடிக் கடித்தவாறே, வட் ஆர் யூ? நொன்ஸென்ஸ் திஸ் இஸ் மைன்'' என்று அடுத்த வாய் அழுத்தி அடிக்கவே மிஸிஸ் விஜேயாவும் அதை மடக்கி வாய்க்கு வாய் இறுக்கிக் கொடுத்தா

இதைத்தொடர்ந்து அடியே புடியே, கள்ளி, காதகி, பாதகி என்றெல்லாம் ஒரு பாட்டமாக இருவரின் பதிவிரதப் பட்டோலைகளும் 'கரக்ற்' ராக வாசிக்கப்பட்டன

அந்த வாசிப்பில் மிஸிஸ் சரோஜா சுந்தரலிங்கம் அவர்களுக்கு ஆகக் குறைந்தது பத்து 'ஆசைநாயகர்கள்' உண்டென்றும், மிஸிஸ் விஜேயா சிற்றம்பலம் அவர்களுக்கு ட்ரைவர் சைமன் சிங்கோ உட்பட ஆறு அல்லது ஏழு 'கீப்கள் உண்டென்றும் அப்போது தெரியவந்தது.

இதையெல்லாம் ஒரு சாவாய் பரிபாஷை செய்து ஓய்ந்ததும், அந்த நெஸ்ப்றே சிக்கல் தீருவதாகவே இல்லை.

சொற்ப வேளை இருவரும் தங்கள் வாய்களை மௌனமாக்கிக் கொண்டு அந்த நெஸ்ப்றேயில் கையை வைத்த வண்ணம், 'என்னுடையது, உன்னுடையது' என்று ஆளையாள் 'இழுபறி'ப்பட்டுக்கொள்ளத் தொடங்கினுர்கள்.

இதையெல்லாம் சற்றுப் பொறுமையோடு கேட்டும் பார்த்தும் கொண்டிருந்த பஸ் 'கண்டக்டர்' ஓடி வந்து, ''நோனுல்வா, மெத்தன ரண்டு எப்பா'' என்று அம்மாக்களைச் 'சண்டையிட வேண்டாமென எச்சரித்தும், சீமாட்டிகள் அந்த உக்ரயுத்த இழுபறியைக் கடைசிவரை விடவே இல்லை.

கண்டக்டருக்குப் பொல்லாத 'கேந்தி' வந்து விட்டது.

''அப்ப நாங்க பொலிஸிட்டக் கொண்டுபோய்விடுறம் அங்கால நீங்கபாடு; உங்க நெஸ்பிறே பாடு'' என்று கண்டக்டர் சொல்லிவிட்டு ட்ரைவருக்குச் சமிக்ஞை காட்டிய அடுத்த நிமிஷம், பஸ் பக்கத்தில இருந்த ஒரு பொலிஸ் நிலையத்தில தஞ்சம் புகுந்து நின்றது

★

மிஸிஸ் சரோஜா சுந்தரலிங்கம் அவர்கள் அந்தப் பெரிய நெஸ்பிறே டின் பார்சலுடன் பொலிஸ் ஸ்ரேஷனுக்குள் நுழையும்போது, அவவுக்கு, தான் உடுத்தியிருந்த சேலை கழன்று தொப்புளுக்குக் கீழே விழுந்தமாதிரி வந்த வெட்க உணர்வு, அவவின் மேனியைப் பிடுங்கித் தின்றது.

நாட்டுப்புறத்து வியாபாரப் பெண்கள் தங்கள் கடகங்களில் காய்கறி மீன்கள்கொண்டு சந்தைக்குப் போவதுபோல, இவ, இந்த நாகரிகத்தின் பிறப்பிடமான 'கொழும்பு செவன்' சினமன் காடனிலிருந்து வந்து எங்கோ கிடந்த ஒரு நெஸ்பிறேயோடும், பங்கப்பட்டுத் துடிக்கும் நெஞ்சத்தோடும் அந்தப் பொலிஸ் ஸ்ரேஷனுக்குள் கால் எடுத்து வைத்தா.

மிஸிஸ்களின் இந்தக் 'கோலத்தைக் கண்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர், விஷயத்தை யூகித்தறியும் தோரணையில் தனது நெற்றிப் புருவத்தை மேலிழுத்துச் சுருக்கி, ஒரு புன்முறுவல் ததும்ப அம்மாக்கள் இருவரையும் மாறி மாறிப் பார்த்தார்.

இன்ஸ்பெக்டர் எத்தனையோ யுக்தி வழிகளைச் சொல்லிப் பார்த்தார். அவை ஒன்றும் மிஸிஸ்களின் செவிகளில் ஏற மறுத்து விட்டன.

எப்படியாவது அந்த 'நெஸ்பிறேயைத்' தனக்கே சொந்தமாக்கி' அதைத் தானே தனிய அடித்துக்கொண்டு போக இன்ஸ்பெக்டர் வழி கோலி வைத்துவிட வேணும் என்று இருவரும் அவரிடம் எதிர்பார்க்கத் தொடங்கியதையும் அவர் புரிந்துகொண்டார்.

இன்ஸ்பெக்டருக்கு இந்தக் கட்டத்தில் சலிப்புத்தட்டி விட்டது சற்றுக் கடுகடுத்துக் கொண்டு கேட்பதற்கு 'சட்' டென்று பதில் சொல்ல வேணும்?''

''யேஸ்சேர்''

''றைட் மிஸிஸ் சரோ இந்த நெஸ்பிறே யாருடையது?''

''தற் இஸ் மைன் சேர்''

''நோ சேர், இற் இஸ் மைன்''

''மிஸிஸ் விஜே, நௌ ரெல் மீ தருத் இந்த நெஸ்ப்றே உம்முடையது தானு?''

''யேஸ் சேர்',

''அக்சுவலி?''

இருவரும் 'முழிசி'னர்

இத்துடன் விசாரணை நின்றுவிட்டது.

இந்த 'ஸ்ரேற்மன்ற்' எழுதப்பட்ட பின் இன்ஸ்பெக்டர் இருவரையும் அதிலே 'சிக்னேச்சர் போடுமாறு சொல்லிவிட்டு மிஸிஸ்களையே மீண்டும் பார்த்தார்.

அப்போது இன்ஸ்பெக்டரை முகம் வைத்துப்பார்க்க இருவரும் லஜ்ஜைப்பட, அதை அவர் கண்டும் காணுதவர் போல் சிரித்தவாறு 'கேஸ் பைல் பண்ணுகிறேன். கோட்டிலே வந்து உங்கள் 'ப்ரொப்ளம்'த்தைத் தீர்த்துக்கொள்ளலாம்'' என்று சொன்னதும் மிஸிஸ்களின் கண்கள் 'தறுதறு'வென்று முழிசின.

ஒரு நெஸ்ப்றேக்காக ஒரு வழக்கு வைத்துக் கோடு ஏறுவதா என்பதாலும், வழக்காளி- எதிராளி இருவரும் 'மாங்கல்யப் பெண்கள்' என்பதாலும் இன்ஸ்பெக்டர் சற்று யோசித்துவிட்டு, 'சரி நான் ஒரு யோசனை சொல்கிறேன் அதன்படி செய்ய இருவருக்கும் விருப்பமா?' என்று கேட்டார்.

உடனே மிஸிஸ்கள் 'அது என்ன?' என்று வினவும் போதே நெஸ்ப்றே தனக்குத்தான் கிடைக்கப்போகிறது. என்ற உற்சாகம் ஒவ்வொருத்தர் முகத்திலும் மீண்டும் தோன்றியது.

இந்த நெஸ்ப்றேக்காகக் கோட்டுக்குப் போய் வீணுக அலைவதிலும் பார்க்க ஆளையாள் கொஞ்சம் விட்டுக் கொடுத்து நெஸ்ப்றேப் பவுடரை சரிபாதியாகப் பங்கிட்டு எடுத்துக்கொண்டால் நல்லது' என்ற இன்ஸ்பெக்டரின் தர்க்க நியாயத்தை 'இனி என்ன செய்வது, ஏற்றுக்கொள்வோம். இல்லாவிட்டால் வீண் கரைச்சல்தான்' என்று நினைத்து ஒருஒப்புக்கு இருவருமாக வந்தனர்.

அதன் பின்புதான் அந்த 'உயிர்த்தோழிகள்' இருவரும் ஆளையாள் பார்த்து நாணிச் சிரித்துக்கொண்டனர்.

அந்த நெஸ்பிறேயை, மேசை மீது வைத்துக்கொண்டு அதனடப்பா மூடியைத் திறக்கவென்று, போலிஸ் கொன்ஸ்டபிள்கள் இருவர் எடுத்த 'கடும் பிரயத்தனங்'கள், படுதோல்வியில் முடிந்தன.

மிஸிஸ்கள் இருவரும் கண்களை வெட்டிக்கூட முழிக்காமல் அந்த நெஸ்ப்றேயைஆவல் நிறைந்த கண்களால்பார்ததுக் கொண்டிருந்தார்கள்

இன்ஸ்பெக்டர் ஒரு கேலிச் சிரிப்புடன், தேகத்தை ஒரு அசைப்பு அசைததுக்கொண்டு, ஏற்கனவே கொன்ஸ்டபிள்கள் திருகி இளக்கிவிட்ட அந்த நெஸ்ப்றே டப்பா மூடியை, தனது முழுப்பெலததையும் திரட்டிக்கொண்டு அந்த இரண்டு, பெண்மணிகளுக்கும் முன்னிலையிலே தனது ஆண்மையின் வெளிப்பாட்டைப் புலப்படுத்தும் ஒரு ஆவேசத்துடன், நெஸ்ப்றே டின்னை அமத்திப் பிடித்துக்கொண்டு ஒருதெண்டு கொடுககும்போது அதன்மூடி டக்கென்று திறபட்டதோடு, நெஸ்ப்றே டின்னும் அவரின் கைதவறி 'சடா' ரென்று கீழே விழுந்தது.

ஆவல் கெந்திய கெடுவோடு, மிஸிஸ்கள் இருவரும் தங்கள் வாய்களை 'ஆ'வென்று பிளந்தபடி அந்த நெஸ்ப்றே டின்னை இமை அசைக்காது பார்த்துக் கொண்டிருந்தபோது, கீழே உருண்டு விழுந்த அந்த நெஸ்ப்றே டின்னுக்குள்ளேயிருந்து ரத்த வடுக்களுடன், பிணவெடில் அடித்து நாறிய வண்ணம், செத்துக் கும்பிப் போன ஒரு பச்சைக்குழந்தை நெக்குவிட்டுப்போனஉடலும், சிதறிய மண்டையுமாக முகங் குப்புற வந்து விழுந்து, அந்த நோனுக்களின் காலடிகளில் கிடந்தது.

அப்போது மிஸிஸ் சரோஜா சுந்தரலிங்கமும், மிஸிஸ் விஜேயா சிற்றம்பலமும் அங்கே போட்ட பெருங்கூச்சல், அங்கேயே மடிந்து செத்தது.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் இரண்டு நோனுக்களையும் 'வெறித்து' உற்றுப் பார்த்துக் கொண்டேயிருந்தார்.

(யாவும்கற்பனை)

---

## சங்குவேலியில் இன்று ரதபவனி

துங்கமிகு சோதியனே
சங்குவேலிக்கு அதிபதியே

சித்தியெல்லாம் தருபவனே
சிவஞானப்பிள்ளையாரே

மாங்கனி பெற்றவனே
மாதுமையாள் மைந்தனே

இட்டமாய் வணங்குவார்க்கு
இடரெல்லாம் தீர்ப்பவனே

வேழமுகம் கொண்டவனே
வேண்டுவகை ஈபவனே

எழில் பொங்கும் இரதம் ஏறி
எமைக் காக்க வந்திடுவாய்.

க. கௌரி

---


## வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்
* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை (வங்கியின் கட்டணத்தில்)
* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்


(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக் கொடுக்கப்படமாட்டாது. இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை.)

இன்றே நாடுங்கள்

# மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(Zambian Airways) பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS
த. பெ. எண்: 92 போன்: 24154

யாழ்ப்பாணக் கோட்டை



# அழகவல்லி

## 15

பூமுமதியோன் வானில் பவனி வரும் ஓரிரவு—

பூதத்தம்பி முதலியாரின் வரவை எதிர்பார்த்து மாளிகையில் அழகவல்லி காத்திருந்தாள். இராசவாசலுக்கு அன்று அதிகாலை சென்றவர் இரவாகியும் வீடு வந்து சேரவில்லை. இப்படி இராசவாசலிலிருந்து நேரங்கழித்துவருவது ஒன்றும்நடக்காதசம்பவமல்ல. கடந்த ஓராண்டு காலத்தில் பல தடவைகள் இரவின் முதற் சாம முடிவில் பூதத்தம்பி மாளிகைக்கு வந்திருக்கிறான்.

நேரம் கழித்துவரும் வேளைகளில் அழகவல்லி துடித்துத் துவண்டுவிடுவாள். கணவனைச் சில பொழுதுகூடப்பிரிந்திருக்க அவளால் முடிவதில்லை. நிலவின் ஒளிக்கதிர்களின் பால் வெளிப்பரப்பில் நல்லூர் குளித்துக் கொண்டிருந்தது. சாளரத்தினூடாக அவள் விழிகள் வாசலை ஆவலோடு நோக்கின. செவிகள் வில் வண்டில் காளைகளின்சதங்கைகள் சப்திக்கின்றனவா எனக் கிரகிக்கத் துடித்தன.

நிலவின் ஒளி அவள் மீது பூரணமாகப் படிந்தது ஒளியின் தழுவலில் அவளதுஅழகு அப்பிரதேசத்தின் இனியசூழலை காமக்கலவிக்குத் தூண்டியது.

அவள் அப்படியொரு அற்புதமான அழகி.

பிராமணப்பெண்ணின் நிறமும் சூத்திரப் பெண்ணின் கவர்ச்சியும் அழகவல்லியிடம் குடிகொண்டிருந்தன. சிவந்த அவள் நிறமும் ஒடுங்கியஇடையும் அவளின் எழிலை அதிகப்படுத்தின. விம்மிப் பூரித்த மார்பகங்கள் கலசங்களாகக் காண்போர் சிந்தையைக் கவ்வின. இடைக்குக்கீழ்த் தாழத் தொங்கும் கூந்தலின் கருமையும் அடர்த்தியும் நெளிவும் கார்மேகத்தின் திரட்சியை நினைவு படுத்தின.

அவள் காண்போரைக் கிறுங்க வைக்கும் பேரழகியாக இருந்தாள்.

அழகவல்லியின் தந்தை இரணவீரசிங்கன் அவள் வளர வளர நெருப்பை மடியில் கட்டி வைத்திருப்பது போலத் தவித்தார், இளைஞர்கள் அவளைத் தேனீயாக மொய்த்தார்கள். இறுதியில் அவள் காதல் பார்வைக்குப் புவிநாயகமுதலியாரின் மகன் பூதத்தம்பிதான் இலக்கானான் பூதத்தம்பிக்கு அவளைக்கட்டிவைத்தபின்னரே இரணவீரசிங்கன் நிம்மதியாக உறங்கினார்.

அழகவல்லிக்கும் தன் அழகின் வலிமை தெரிந்திருந்தது. அவள் வெளியில் செல்ல நேரும்வேளைகளில் கண்ணெறிகளுக்கும் சொல்லெறிகளுக்கும் உள்ளாகியிருக்கிறாள் அவள் உடலில் ஈக்களாக மொய்க்கும் ஆண்களின் விழிகளின் தாக்குதல்களை அவள் உணர்ந்திருக்கிறாள் வரம்பு மீறி அவளிடம் நடந்துகொள்ளமுயன்ற சிலர் அவளிடம் அவமானப்பட்ட நிகழ்ச்சிகள் பல நிகழ்ந்திருக்கின்றன. திருமணத்தின் பின்னரும் அத்தகைய சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஒரு தடவை அவள் தன் பாதணியைக் கரத்திலெடுத்து ஒருவனுக்கு அடிக்க முயலும் அளவிற்கு அவளிடம் அவன் நடந்துகொண்டிருக்கிறான் அச் சம்பவங்களை அவள் கணவனுக்கு மறைக்கமுயன்றதில்லை. அவ்வேளைகளில் பூதத்தம்பி மௌனமாகச் சிரிப்பான். அவள் கோபத்துடன் சீறுவாள்.

''இதோ பார் அழகவல்லி, நீ அம்மன் சிலை மாதிரி அழகாக இருக்கிறாய். உன்னை ஒரு தடவை பார்த்தால் மறு தடவையும் பார்க்கத் தூண்டும் கவர்ச்சி எழில் உன்னிடமிருக்கிறது. நீ ஒரு அற்புதமான அழகியடி உன்னிடம்இப்படிக் கொள்ளை அழகை நீ வைத்துக் கொண்டு பார்ப்போரைக் குறைசொல்லி என்ன பயன்? இதோ பார் அழகவல்லி, நீ மற்றவர்களைப் பற்றிக் கவலைப்படாதே நிலவை ரசிக்காதவர்கள் யார்? அதனால் நிலவிற்கு ஒரு களங்கமும் ஏற்படுவதில்லை...'' என்று பூதத்தம்பி ஆறுதல் கூறுவான்.

அவன் கூறும் ஆறுதல் வார்த்தைகள் அவளுக்குத் திருப்தியைத் தருவதில்லை.

''நீ அவனை அப்படி ஏசியிருக்கக் கூடாது... பாதணியைக் கழற்றி அடிக்க முயன்றிருக்கக் கூடாது. ஒரு குடும்பப் பெண்ணுக்கு அது அழகல்ல...'' என்றும் பூதத்தம்பி அவளுக்குச் சொல்வான். அவளுக்கு அவன் வார்த்தைகள் ஆறுதல் தரவில்லை கண்ணீர் விடுவாள்.

''அசடே...அழாதே'' என்று அவளை அணைத்து அவன் ஆறுதல் கூறிய பின்னரே அவள் அடங்குவாள்.

''என்ன ஆண்கள்? ... கழுத்தில் தாலி இருக்கும் பெண்ணை அப்படியா முறைப்பார்கள்? கையில் குழந்தை இருக்கும் பெண்ணை அப்படியா பார்ப்பார்கள்?...'' என்று அவள் பொருமுவாள்.

''நீ ஒரு குழந்தைக்குத் தாயான பெண் போலவா இருக்கிறாய், அழகவல்லி? உன்னை இப்போதும் புதுப் பெண்ணாக மணவறையில் இருத்தலாம் '' என்று அவளைப் பூதத்தம்பி சீண்டுவான்.

அவள் வெட்கத்துடனும் பெருமிதத்துடனும் தலை குனிந்து சிரிப்பாள்.

அவள் சிரிப்பில் பூதத்தம்பி கவிஞனாகிவிடுவான்.

''இருண்டமேகமே வந்து சுருண்டு கிடக்கின்றதோ எழில் மிகும் இவள் கொண்டை...''

''...ப்...'' என்பாள் அவள்.

''இளநீர் போலத் திரண்ட கொங்கை, பாரத்தால் மருங்குல் ஒடியுமென்று தெரிந்து புலம்பும் தண்டை...''

''அடடா...''

''ஆலைக்கரும்பொடு பாலைப் பழிக்கச் சொல்லும் அதரம் பவளத்துண்டோ ''

''நல்லா இருக்கிறது, உங்க பாட்டு...''

''இன்னும் கேள்... இவளிரண்டு காலைக் கும்பிட்டாகிலும் லீலைக்கிழுக்கச் செய்யும் காமன் கை...''

''போதும்... போதும், நிறுத்துங்க. நீங்கள் ஒன்றும் காலைக் கும்பிட வேண்டாம் '' என்று அழகவல்லி சிரிப்பாள். பூதத்தம்பியின் அணைப்பில் அவள் சிரிப்புக் கரையும்.

அவள் ஏக்கத்தோடு வாசலைப்பார்த்தாள்: தூரத்தில் மாடுகளின் கழுத்துச்சதங்கை ஒலி சன்னமாக எழுந்து இரவின் அமைதியைக் குலைத்தது. அவள் முகம் மலர்ந்தது.

ஒரு பெண் ஓடி வந்தாள்.

''அண்ணி..அண்ணி..அண்ணா வாறார். '' என்று சிரித்தாள். அவள் பூதத்தம்பியின் தங்கை புவிநாயகவல்லி அவளும் தமையனின் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்திருக்கிறாள்.

''நீ தூங்காமலா இருந்தாய், புவிநாயகி?...''

''அண்ணா வரவில்லை... தூக்கம் வரவில்லை... சிலவேளை...'' அவள் தயங்கினாள். அழகவல்லியின் முகம் மலர்ந்தது.

''ஓ...'' என்று அவள் சிரித்தாள். அவள் சிரிப்பின் அர்த்தம் விளங்கியதும் புவிநாயகி வெட்கத்துடன் தலையைக் குனிந்து கொண்டாள்.

''அப்படியென்றால் சில வேளைகளில் என் அண்ணன், கச்சாய் வன்னிமை திருவாளர் கயிலாசபிள்ளையாரும் வருவார் என்று எதிர்பார்க்கிறாய்? நீ எதிர்பார்த்தால் அண்ணன் நிச்சயம் வருவார் ஏனடி, உனக்குச் செய்தி வந்ததா?...''

''போங்க அண்ணி '' என்று வாசலுக்குப் புவிநாயகி ஓடினாள்.

சதங்கைகள் சப்திக்க வில் வண்டில் ஒன்று வந்தது. அதிலிருந்து இரு கம்பீரமான புருஷர்கள் இறங்கினார்கள்.

''அண்ணா...'' என்றாள் அழகவல்லி.

''அண்ணா...'' என்றாள் புவிநாயகி.

பெண்கள் இருவரும் தமையன்மாரை அழைத்தாலும் அவர்கள் இருவரின் பார்வைகளும் தம் காதலர் [illegible] மீதே படிந்தன.

''ஏன் இவ்வளவு நேரம்?...'' என்று அழகவல்லி கேட்டாள்.

''இன்று முதலியார்மாரின் கூட்டம் நடந்தது...'' என்றான் பூதத்தம்பி.

''அதுக்கு இவ்வளவு நேரமே?...''

''அதில்லைத் தங்கச்சி. இன்றைக்கு அராபியச்சோனகர் குதிரைகள் கொண்டு வந்திருந்தார்கள். எட்டு உயர்ந்த சாதிக்குதிரைகள் கோட்டைக்குவந்திருக்கின்றன அதனால் மைதானத்தில் பெரிய ஒல்லாந்தேசுவும் சின்ன ஒல்லாந்தேசுவும் ஏனையோரும் குதிரைகளில் ஏறி ஓடிப்பார்த்தனர்...'' என்றான் கயிலாசபிள்ளை வன்னிமை.

''நீங்கள் அவர்கள் குதிரைச்சவாரி செய்வதைப்பார்த்துக் கொண்டிருந்தீர்களாக்கும்'' என்று கிண்டலாகப் புவிநாயகி கேட்டாள்.

''நாங்களா பார்த்துக் கொண்டிருந்தோம்... நீங்கள் இருந்திருக்கவேண்டும். அப்போது தெரிந்திருக்கும்...''

''நீங்கள் குதிரையால் விழுந்தா...?

''என்ன மச்சான், மச்சாள்மார் இரண்டுபேரும் இன்றைக்குக் கலகம் செய்வதென்று வாசலில் நிற்கிறார்களோ?...'' என்று கயிலாசபிள்ளை கேட்டான்.

''அவர்களுக்குப் பசி எங்களுக்காகக் காத்திருக்கிறார்கள் பார்...'' என்று பூதத்தம்பி சிரித்தபடி மாளிகையினுள் நுழைந்தான்

''அழகவல்லி, உன் கணவன் இப்படிக் குதிரையில் திறமையாகச் சவாரி செய்வார் என நான் எதிர்பார்க்கவில்லை. அடங்காத முரட்டுக்குதிரையென்றில் ஏறி வெகு அலட்சியமாகச் சவாரி செய்தார். சின்னவொல்லாந்தேசு வியந்து போனார். இன்னொரு அதிசயம் கேள் தங்காய், சின்னவொல்லாந்தேசு குதிரையொன்றில் ஏறிச் சவாரி செய்யும்போது இருந்தாற்போல அந்த முரட்டுக்குதிரை பின்னங்கால்களில் எழுந்து அப்படியே அவரைத் தூக்கி வீசிவிட்டது கணப்பொழுதில் மச்சான், சின்னவொல்லாந்தேசுவைத் தன் கைகளில் நிலத்தில் விழாது தாங்கிக்கொண்டார். இல்லாவிட்டால் கோட்டை மதிலோடு சின்னவொல்லாந்தேசு மோதியிருப்பார். அவன் மச்சானை நன்றியுடன் அணைத்துக்கொண்டான்...''

''சின்னவொல்லாந்தேசு அவர்களில் மிகவும் வித்தியாசமானவர். என்னிடம் மிக நட்பாகப்பழகுவார்...'' என்றான் பூதத்தம்பி.

''அப்படியா...'' என்று கணவனைப் பெருமையுடன் அழகவல்லி பார்த்தாள்.

''அண்ணா, நீ வருவாய்என்று புவிநாயகிக்கு எப்படித்தெரியும்? செய்தி அனுப்பினாயா?''

''இல்லையே...'' என்றான் கயிலாசபிள்ளை.

''இவளுக்கு நீ வருவது தெரிந்திருக்கிறது. மாலையிலிருந்து வாசலில் தவம் இருந்தாள் ''

''நானா அண்ணி? நீங்கள் தான் அண்ணனை எதிர்பார்த்துத்தவம் இருந்தீர்கள்...''

''ஆண்களுக்காகக் காத்திருப்பதுதான் இந்த யாழ்ப்பாணத்துப் பெண்களின் வழக்கமாகி விட்டது வருகிற நேரம் வரட்டும் என்று அலட்சியமாக இருக்க மனசு கேட்டால் தானே?''

கயிலாசபிள்ளை கிணற்றடிக்குச் செல்ல, புவிநாயகி அவனைத்தொடர்ந்தாள்.

''இவர்களின் கலியாணத்தைக் கெதியில் முடித்துவிட வேண்டும். '' என்றான் பூதத்தம்பி மனைவியிடம்

''நானும் அதைத் தான் சொல்லவிருந்தேன் ...''

''அழகவல்லி, உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? திசைவீரசிங்கன் தப்பிவிட்டானாம்.''

''யார் சொன்னது?...''

''மச்சான் தான். அவன் கச்சாயில் கயிலாசபிள்ளையைச்

[8ம் பக்கம் பார்க்க]

## இது பொய்யல்ல!

★ உடலில் உள்ள தோலில் 45மைல் நீளமான நரம்புகள் உண்டு.

★ தோலின் மொத்த எடை 6 றாத்தல்.

★ தலையில் 1,00,000 முடிகள் உள்ளன.

★ சிரிக்கும்போது 17 தசைகளும், முகம் சுளிக்கும்போது 43 தசைகளும் வேலைசெய்கின்றன.

★ வேகமாகநடக்கும்போது எழுதும்போது செலவாகும் சக்தியைவிட 8 மடங்கு சக்தியை செலவழிக்கிறோம்

★ ஒரு சராசரி மனிதன் ஆண்டொன்றுக்கு ஒரு தொன் உணவையும், தண்ணீரையும் அருந்துகின்றான்

★ நமது உடலில் ஒரு றாத்தல் நிறையைக்குறைக்க 34 மைல் நடக்கவேண்டும்

★ உடலில்மூன்றில்இரண்டு பங்கு தண்ணீர் உள்ளது

★ பற்களைச் சூழ்ந்துள்ள தசைகள் சுமார் 220 கிலோ வலுவுள்ள சக்தியை வலுவாக உபயோகிக்கின்றன.

— சச்சி.



# சர்வதேச நாணய நிதியமும் வறிய நாடுகளும்

சர்வதேச நாணய நிதியின் வரலாறு, சர்வதேச நாணய நிதியின் அமைப்பு, அதன் நோக்கம், அதன் கடன்வசதித்திட்டம், நாணய மாற்றுவீதம், அதன் குறைபாடுகள், அதன்மீது ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றி இக்கட்டுரை விளக்குகிறது.

சர்வதேச வர்த்தகம் நடைபெறுவதற்கு நாடுகளுக்கிடையிலான நாணய மாற்று வீதம் தீர்மானிக்கப்படல் வேண்டும் அதன் பிரகாரம் 1848 ம் ஆண்டு தங்க நாணயத்திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.

இத்தங்கநாணத்திட்டத்தில் பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் என்பன கூட்டாகச் சேர்ந்து தங்களின் தேசிய நாணயங்களை தங்கத்திற்குச் சமப்படுத்தி ஒவ்வொரு நாடும் தங்களின் நாணயப் பெறுமதியினைத் தீர்மானித்துக் கொண்டன. ஆயினும் இது ஒரு இறந்து போன முறையாகும்

## சர்வதேச நாணய நிதியின் தோற்றம்

முதலாவது உலக மகாயுத்த காலத்தில் பொருளாதார உறுதிக்குப் பதிலாகப நாடுகள் அரசியல் உறுதியில் தங்கள் கவனத்தைச் செலுத்தியமையால் இந்த தங்கநாணயத்திட்டமானது முறிவடையத்தொடங்கியது அது மாத்திரமல்லாமல் 1930ல்ஏற்பட்ட உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பெரும் மந்தமும் தங்க நாணயத்திட்டத்திற்குச் சாவுமணி அடித்தது இதனால் ஏற்பட்ட பொருளாதார மந்தமும் வேலையின்மையும் முதலீட்டுத்தேக்கம் என்பனவும் அந்நாடு ஏற்பட்ட 2ம் உலக மகாயுத்தமும் சேர்ந்து உலகில் புதியதொரு நாணய அமைப்பு முறைகளை ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலையினைத் தோற்றுவித்தது

## அமைப்பு

இவ்வாறே ஒரு உறுதியான நாணய அமைப்பினை உருவாக்கிடப் பல்வேறு திட்டங்கள் முன்வைக்கப்பட்டன. ஆயினும் பிரித்தானிய பொருளியல் அறிஞரான செயின்சின் கெயின்சியத் திட்டமும் அமெரிக்க பொருளியலாளரான வைற்றின் வைற்திட்டமும் முன்வைக்கப்பட்டன ஆயினும் செயின்சின் திட்டத்தில் காணப்பட்ட அம்சங்களான எல்லா நாடுகளும் அங்கம் வகிக்கக் கூடிய வகையிலும் பொருளாதாரப் பிரச்னைகளை தீர்க்கக் கூடியதுமான சர்வதேச நாணய அமைப்பொன்றினை ஸ்தாபித்தல். இவ்வமைப்பின் ஊடாக நாடுகள் தமது நாணயக்கூட்டுறவை தீர்மானித்தல் மேலும் சர்வதேச வர்த்தகத்திற்குப் பயன்படத்தக்க ஒரு புதிய சர்வதேச 'திரவத்தன்மை'யினை உருவாக்குதல் (Bancore) என்பன காணப்பட்டன. இவ்வாறே வைற்றின் திட்டத்தில் காணப்பட்ட அம்சங்களான சர்வதேச நாணய அமைப்பினை உருவாக்கி சர்வதேச உறுதிப்பாட்டு நிலையம் ஒன்றினைத் தாபித்தல். அத்துடன் நாடுகளினது தேசிய நாணயத்தினையும் தங்க நாணயத்தினையும் அடிப்படையாகக் கொண்டு சர்வதேச நாணயத்தினை உருவாக்குதல் என்பனவாகும். இவ் அம்சங்கள் அமெரிக்காவிலும், பிரித்தானியாவிலும் நடைபெற்ற பல்வேறு நாடுகளின் மகாநாடுகளில் ஆராயப்பட்டு இறுதியில் செயின்சினது திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது மட்டுமல்லாமல் வைற்றின் சில அம்சங்களையும் சேர்த்து கம்சயர் எனும் மாகாணத்தில் பிரிட்டன் வூட் என்னுமிடத்தில் 1944ல் உலகின் பெரும்பாலான நாடுகள் (44 நாடுகள்) கூடி சர்வதேச நாணய அமைப்பினை ஏற்படுத்துவதற்கான ஒரு உடன்பாட்டிற்கு வந்தன. அதன் பிரகாரம் பிரிட்டன் வூட் பெற்றெடுத்த இரட்டைக்குழந்தைகள் தான் சர்வதேச நாணய நிதி, சர்வதேச புனருத்தாரண வங்கி என்ற இரண்டுமாம்

## நோக்கங்கள்

இவ்வகையில் சர்வதேச நாணயநிதியே ஒரு நிதிஸ்தாபனமாகவும் உலக நாணய அமைப்பினைத் தீர்மானிக்கும் பிரதான பங்காளியாகவும் உலகின் நாணய அமைப்பு முறையாகவும் காணப்படுகின்றது. இது தற்போது 184 அங்கத்துவநாடுகளைக்கொண்ட ஒரு அமைப்பாகவும் விளங்குகின்றது. இதன் நோக்கங்கள் அதன் மூல விதிகளில் எழுதப்பட்டுள்ளதுமல்லாமல் தனது நோக்கங்களையும் அகவிதியில் தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வகையில் 1 சர்வதேசநாணய அமைப்பினையும் நாணயக்கூட்டுறவினையும் அமைப்பின் ஊடாக ஏற்படுத்துதல், 2 சர்வதேச வர்த்தகத்தினை விருத்தியடையச் செய்தல்; நாடுகளுக்கிடையிலான சமமான பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுதல்; மெய்வருமான வளர்ச்சி வீதம் என்பவற்றை ஏற்படுத்துதல், 3 அங்கத்துவ நாடுகளின் உறுதியான ஒருநாணயமாற்றுமுறையினைக் கடைப்பிடித்தல். 4. நாடுகள் யாவும் பலபக்கவர்த்தகத்தை ஏற்படுத்தத் தூண்டுதல், 5. உலக நாடுகளின் நாணயமாற்றுவீதக் கட்டுப்பாடுகளை ஏற்படுத்தாமல் பாதுகாத்தல்; நாடுகளுக்கிடையில் மூலதன அசைவு தங்க அசைவு என்பன சுதந்திரமாக நடைபெறுவதனை உறுதிப்படுத்தல், 6. எல்லாவற்றுக்கும் மேலாக அங்கத்துவநாடுகள் செல்மதி நிலுவை குறைநிலை பிரச்னையினை அனுபவிக்கும் பொழுது அங்கத்துவ நாடுகளுக்குப குறுங்காலக் கடன்வசதியினை அளித்து அப்பிரச்னையைத் தீர்க்க உதவுதல் என்பனவாகும் இம்மூல விதிகளை அங்கத்துவ நாடுகள் யாவும் ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டன. இம்மூல விதிகளைத் திருத்தம்செய்வதானால் அங்கத்துவநாடுகளின் ஐந்தில் மூன்றுபங்கு வாக்குப்பலம் அவசியமாகும் இலங்கையும் இவ் அமைப்பினை ஏற்றுக்கொண்டு 1950ல்கைச்சாத்திட்டுக்கொண்டது.

## மூலதனம்

மூலதனத்தை இவ்வமைப்பு தனக்குத் தேவைப்படும் அங்கத்துவநாடுகள் வைப்புச் செய்யும் பணத்தில் 80 வீதம் பெறுகின்றது அங்கத்துவ நாடுகள் கட்டண அல்லது கோட்டா முறை என்பதனைச் செலுத்த வேண்டும். சட்டணமானது தங்கத்தின் அடிப்படையில் 25 வீதம் தேசிய நாணயத்தின் அடிப்படையில் 5 வீதம் ஆகவும்அங்கத்துவநாடுகளிலிருந்து கட்டணங்களாகவும் பெறுகின்றனர் இக்கட்டண அளவு நாடுகளின் தேசிய வருமான வளர்ச்சி விகிதம் நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தின் பங்கு நாடுகளின் மூலதனப் பயன்பாடு என்ற காரணிகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது இதன் அடிப்படையிலேயே நாடுகளுக்கிடையிலான வாக்குப்பலமும் காணப்படும். அவ்வாறே அமெரிக்கா சர்வதேச நாணய நிதியின் 25% வீதமான கட்டணத்தைச் செலுத்துவதனால் 19 6 வீதமான வாக்குப்பலத்திற்கு பலத்தைக் கொண்டுள்ளது இது 64 லத்தீன் அமெரிக்க நாடுகளின் வாக்குப்பலத்திற்குச் சமமாகும். இலங்கை 0 3 வீதமான வாக்குப் பலத்தை மாத்திரமே கொண்டுள்ளது இதேபோன்று சர்வதேச நாணய நிதியினால் வழங்கப்படும் கடன் தொகையும் அங்கத்துவக்கட்டணத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அக்கடனுக்கு வட்டி உண்டு பெரும்பாலும் குறுங்காலக் கடன்களையே சர்வதேச நாணய நிதி வழங்குகின்றது அதன் அடிப்படையில் அங்கத்துவ நாடுகள் கடன்களைப் பெறும்போது தமது தேசிய நாணயத்தினைக் கடனுக்கு ஈடாக ஒப்படைக்கவேண்டும். எந்த ஒருநாடும் தனது தேசிய நாணயத்தினை 200 வீதத்திற்குமேல் ஒப்படைக்க முடியாது. ஆனால் அங்கத்துவ நாடுகள் தமது தேசிய நாணயத்தினை மீள் கொள்வனவு செய்யமுடியும்

## கடன் வசதிகள்

மேலும் கடன்வசதிகள் போதவில்லையென அங்கத்துவ நாடுகள் அதிருப்தி தெரிவித்தன இவ் அதிருப்தியைப் போக்க 1950ல் குறைவிருத்தி நாடுகள் கடன் பெறக்கூடிய வகையில் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் (IDA) எனும் கிளைத் தாபனத்தினையும் 1960-ல் பக்த உதவித் திட்டம் எனும் திட்டத்தினையும் 1963ல் முதல்விளைவுபொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும் நாடுகள் நிலைதளம்பினால் நட்டம் அடையும் பொழுது அந்நட்டத்தினை ஈடுசெய்ய நட்ட ஈட்டுத்திட்டமும் 1968ல் விசேட எடுப்பனவுத்திட்டமும் (STR), 1974ல் எண்ணெய் விலையேற்றத்தினால் செல்மதி நிலுவைப் பிரச்னையை எதிர்நோக்கும்போது அதனைத் தீர்க்க எண்ணெய் எடுப்பனவுத் திட்டமும் (OFF)உருவாக்கப்பட்டன. இவ்வகையில் இலங்கை கூடுதலான கடன்வசதிகளை சர்வதேச அபிவிருத்திச்சங்கத் திடமிருந்து பெற்றுக்கொள்கிறது.

## சர்வதேச நாணயநிதியின் நாணயமாற்று வீதம்

சர்வதேச நாணய நிதி, தங்க நாணயத்தில் காணப்பட்ட நாணயமாற்று வீதத்தினையே ஒரு சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொண்டு அங்கத்துவநாடுகளின் நாணய உறுதியினையும் சர்வதேச வர்த்தகத்தினையும் பாதுகாத்துவருகின்றது. இவ்வாறே நாடுகளின் தேசிய நாணயங்கள் முதலில் தங்கத்துடன் இணைக்கப்பட்டு நாடுகளுக்கிடையிலான நாணயமாற்று வீதம் உறுதியானதாகத் தீர்மானிக்கப்படுகின்றது இருந்தாலும் ஒரு சிறிய எல்லைக்குள் தளம்ப அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.அதாவது ஒரு விகிதம் என்ற எல்லைக்குள் கூடிக் குறைவதற்கு அல்லது தளம்புவதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 1972ல் தளம்பும் எல்லையானது 2 25 வீதத்திற்கு மேலும் அதிகரிக்கபபட்டது. இதற்கு மேலாக ஒரு நாடு நாணய மாற்றுவீதத்தினை, தான்விரும்பினால் மாற்றியமைத்துக் கொள்ளலாம், அதாவது நாணயமாற்று வீதத்தினை ஒரு நாடு 10 வீதம் என்ற எல்லைக்குள் தன் சுயவிருப்புப்படிமாற்றிக்கொள்ளமுடியும். 10வீதத்திற்கும் 20 வீதத்திற்கும் இடையில் மாற்றியமைக்க விரும்பினால் சர்வதேச நாணய நிதியுடன் கலந்து ஆலோசிக்க வேண்டும். 20 வீதத்திற்கு நாணயமாற்று வீதத்தினை மாற்றவிரும்பினால் அங்கத்துவ நாடுகள் நாணய நிதியின் முன் அனுமதி பெறவேண்டும். இவ்வாறே 1977ல் இலங்கை 100 வீதமான நாணயப் பெறுமதி இறக்கத்தினைச் செய்துகொண்டது.

## சர்வதேச நாணயநிதியின் குறைபாடுகள்

1. சர்வதேச நாணயநிதி 1944ல் ஆரம்பிக்கப் பட்ட போது நாடுகள்யாவும்செல்மதி நிலுவைப் பிரச்னையை அனுபவிக்கவில்லை! ஆனால் 960களில் அமெரிக்கா, பிரிட்டன் உட்படச் செல்மதிப் பிரச்னையை அனுபவிக்கத் தொடங்கியமையினால் 'நாடுகளுக்கு அவற்றின் செல்மதி நிலுவைக்குறை நிலையினைப் போக்க சர்வதேச நாணய நிதியினால் கடன் கொடுக்க முடியவில்லை. இதன் அடிப்படையில் நாடுகள்யாவும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிக்க முற்பட்டன இலங்கையும் 1960களின் பின் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதித்தது! இதனால் நாடுகள் இவ்வமைப்பின் மேல் சலிப்புக் காட்டத்தொடங்கின

2 சர்வதேச நாணயநிதி ஆரம்பிக்கப்பட்டபோது ஒரு பொதுவான 'திரவத்தன்மை' நாணயமொன்றினை உருவாக்காமல் சில அங்கத்துவ நாடுகளின் தேசியநாணயங்களான டொலரையும் ஸ்ரேலிங் பவுணையும் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபடுத்தியமையினால். அந்நாடுகள் செல்மதி நிலுவைக் குறைநிலை பிரச்னையை அனுபவிக்கும் போது அத்தகைய தேசிய நாணயங்களை உடைய நாடுகளுக்கே நாணயங்கள் கூடுதலான அளவு தேவைப்படும். இதனால் அந்நாணயங்களில் சர்வதேச ஒதுக்கீட்டினை வைத்திருக்கும் ஏனைய நாடுகள் பாதிப்பை அடைய முடியும்.

3. சர்வதேச நாணய ஒதுக்கீடு சர்வதேச வர்த்தகத்துடன் ஒப்பிடும்போது குறைவாக இருந்தது ஆயினும் சர்வதேச நாணயநிதியின் நோக்கங்களில் கூறப்பட்ட சர்வதேச வர்த்தக நாணயக் கூட்டுறவு என்பனவும் ஒருவித குறைபாடு உடையதாகவே காணப்படுகின்றது.

4 நாணயநிதியின் நாணய மாற்றுவீதம் தொடர்பான நோக்கமும் ஒரு குறைபாடாகும். ஏனெனில் ஒருநாடு 20 வீதத்திற்கு மேல நாணய மாற்றுவீதத்தினை மாற்றி அமைக்க விரும்பினால் சர்வதேச நாணய நிதியின் முன் அனுமதியினைப் பெறவேண்டும அப்படிப் பெறும்போது ஏனைய அங்கத்துவ நாடுகளுக்கும் குறிப்பிட்ட நாட்டின் நாணயமாற்று வீதமாற்று நடவடிக்கை தெரிந்துவிடும் இதனால் ஏனைய அங்கத்துவ நாடுகளும் தமது நாணயத்தினை மாற்றியமைத்துக் கொள்ளும்,

(10ம் பக்கம் பார்க்க)

என். விஜயன்

★ 'சல்யூட் 7' விண்கலத்தில் ஐந்து மாதங்களுக்கு மேலாக, லியனித்கிசிம், விளாதிமிர் சலோவியோய்; ஒலெக் அக்ஷோவ். ஆகிய மூன்று ரஷ்ய விஞ்ஞானிகள் விண்வெளியில் பயணம் செய்துவருகின்றனர். இக்குழுவின் தலைவர் லியனித்கிசிமின் மனைவிக்கு ஒரு பெண்குழந்தை பிறந்த செய்தி தரைக்கட்டுப்பாட்டு நிலையம் ஊடாக விண்வெளியில் தெரிவிக்கப்பட்டது.

சச்சி.

## கடல் கோட்டை

[7ம் பக்கத் தொடர்ச்சி]

சந்தித்திருக்கிறான். என்றாலும் பெரிய ஒல்லாந்தேசு இப்படி அவனை ஏமாற்றியிருக்கக்கூடாது...''

''அது அரசியல் விஷயம்... அதைப்பற்றிப் பேசவேண்டாம். இப்போதே கந்தவேள் கோட்டத்தில் கிறிஸ்தவ தேவாலயம் கட்ட நீங்கள் எதிர்ப்பு என்று பேசிக்கொள்கிறார்கள். திசைவீரசிங்கனோடு தொடர்பு என்றால் அது வினையாகிவிடும்...''

''அவன் தப்பி வந்தது இன்னமும் பெரிய ஒல்லாந்தேசுவுக்குத் தெரியாது. நாங்கள் சொல்லவில்லை கயிலாசபிள்ளை அவனை இந்தியாவுக்குத் தப்பி ஓடிவிடும்படி புத்திசொல்லியிருக்கிறான். அவன் மறுத்துவிட்டானும். இவர்களைப் பழிவாங்காமல் எங்கும்போகமாட்டானும்...''

பூதத்தம்பியும் கை கால் முகம் கழுவிவிட்டு வந்தான். அவர்கள் உணவருந்தி விட்டுப் படுக்கைக்குச் செல்லும்போது நள்ளிரவாகிவிட்டது.

''அந்திராசி முதலியார் எப்படியிருக்கிறார்?...'' என்று இருந்தாற்போல அழகவல்லி கேட்டாள்.

''நான் எதிர்பார்த்ததிலும் நல்லவன். நிர்வாக விடயங்களில் நல்ல பரிச்சயம் இருக்கிறது. கிறிஸ்தவன். அதனால் அவர்களிடம் நல்ல செல்வாக்கிருக்கிறது. என்றாலும்...''

''என்ன?...''

''பெண்கள் விடயத்தில் பலவீனமானவனாகஇருக்கிறான் அதில் பிழையிருப்பதாகவும் தெரியவில்லை. பெண்ணாசை யாரைத்தான் விட்டது ...''

''அவரோடு சேர்ந்து நீங்களும் அந்தப்பழக்கம் பழகிவிடாதீர்கள்...''

''நான் இராமன். ஏக பதினி விரதன. அருகில் இப்படியொரு அலங்காரரூபி இருக்கும்போது.'' — அவளை அணைத்துக்கொண்ட அவன், ''அழகவல்லி, அற்புதமான கோட்டை ஒன்றினை அவர்கள் கட்டி முடித்துவிட்டார்கள். அதன் கம்பீரத்தை நீ பார்க்க வேண்டும் ஊர்காவற்றுறையிலும் முன்னர் கடல் கோட்டை இருந்த இடத்தில் மீண்டும் ஒரு கோட்டை கட்டப்போகிறார்கள் அதனைச் சின்னவொல்லாந்தேசு கட்டப் போகிறாராம்...''

''பிரமாண்டமான கோட்டை என்று தான் பேசிக்கொள்கிறார்கள் ... ... பார்க்கவேண்டும்......'' என்றாள் அழகவல்லி

அவர்கள் தூங்கும்போது சாமக்கோழி ஒன்று கூவியது.

(வளரும்)

ஏழு பெண் எழுத்தாளர்கள் சேர்ந்து எழுதும்

# தொடர் நவீனம்

# சிதைவுகளில் ஓர் உதிப்பு!



## "விதி!"-

சுலபமாக எவரும் கூறி முடித்துவிடும் ஓர் இரண்டெழுத்துச்சொல். அது இரக்கமற்றது இதயமற்றது. பல விதமான குரூரத் தாக்குதல்களுக்கு ஆளாகி ஆளாகி நைந்து போன இதயச் சுவர்களுக்கு மத்தியிலே ஒரு சின்னஞ்சிறு இடத்தில் மெல்ல உயிர்துடிப்பு தளிராக இருக்கும் அந்த நினைவும் இந்த விதியின் கோரப்பிடிக்குள் அகப்பட்டுத் தானே மலராகாமல் காயாகிக் கனியாமல் மொட்டுப் பருவத்திலேயேகூடமைத்துச் சிறை வைக்கப்பட்டுவிட்டது

''ஓ... கடவுளே... இந்த நினைவுகளும் எங்களைச் சாதிகுறைவெண்டு எண்ணி வெறுத்து ஓடிவிட்டால் எங்களுக்கு இந்தப் பயங்கரத்தனிமையிலை யார் துணை?

'இந்தப் பூமியிலை உள்ளவைக்கு இண்டைக்குத்தான் அமாவாசை. ஆனால் எனக்கு...

'வாழ்க்கையே அமாவாசை இரவுகளாலை தொடுக்கப்பட்ட ஒரு முள்ளு வேலிதானே!

**5**

நான் வெளியேறவும் முடியாது; எவைக்குப் பிடிச்சாக்களை உள்ளே அழைக்கவும் முடியாது'.

இருள் கப்பிக் கிடந்த வானத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு நட்சத்திரங்கள் தென்பட்டன. இயல்பான அவற்றின் ஒளிகூட அவளைக்கேலி செய்வதாகத் தோன்றுகிறது இந்த இரவில் அவள் எவ்வளோ தடுத்தும் கேளாமல் பிடிவாதக்காரகுழந்தைபோல அந்த முகம்... மெல்லச் சிரிக்கும் அந்த முகம்... அவளது மனக் கதவைத்தட்டி இடித்துத் தள்ளிக்கொண்டு அவளெதிரே தோன்றுகிறது.

ஓ... மதன்! பெயரைப் போலவே அவன் அழகானவன். இனிமையானவன்... இளமையானவன்.

தலையணை என்ற பெயரில் தனது ஆற்றாமையை வெளிக்காட்டிக்கொண்டிருக்கும் ஒரு கந்தல் துணிமூடை அவளது இன்பத்திலும் துன்பத்திலும் அவளது அணைபபிற்கு ஆளாகிப்போய்விட்ட ஒரு துணை.

இப்படித்தான் ஒரு விடுமுறை முடியும் தறுவாயில் ஆசிரியப்பயிற்சிக்குக் கடிதம் வந்தது இன்ரர்வியூ... அதன் பின் பலமுக அறிமுகங்கள்... முற்றிலும் புதிய ஒரு சூழலில் அவளது பயிற்சி ஆரம்பம்.

கவலையற்றுச் சிறகடித்துத் திரியும் இளஞ்சிட்டுக்களில் இவள் மட்டும் ஒதுங்கியிருக்க முடியுமா? படிக்த பண்புள்ளவர்கள் மத்தியில் இவள்தன் தாழ்வு மனப்பான்மையை முற்றாக மறந்துவிட்டிருந்தாள் என்று கூடச்சொல்லலாம்.

பாடசாலை வாழ்க்கையைப் போலவே அவள் பயிற்சிக்கலாசாலையிலும் பல விடயங்களிலும் முன்னணியில் நின்றாள்! போட்டிகளில் எல்லாம் முதல் மூன்று இடங்களுக்குள்ளும் நிச்சயமாக நின்றாள். பலர் மத்தியில் இவள் குறிப்பிடத் தக்கவளானாள்.

பாலைவனமாக அவள் கருதியிருந்த வாழ்க்கையில் ஒரு பசுமை கோடிட ஆரம்பித்தது. அந்தப் பசுமையைத் தோற்றுவித்த மழையாக வந்தான் மதன். கலாசாலை ஆரம்பித்து ஒரு மாதம் கழிந்தபின் புதிய மாணவனாக நுவரெலியாவிலிருந்து வந்து சேர்ந்தவன். ஒரு மாதம் நடந்து முடிந்துபோன பாடங்களின் விளக்கத்தைக கேட்க மகேஸ்வரியை நாடினான்.

பலரின் கண்களும் அவனையும் அவளையும் குறும்புடன் பார்த்தபோது... ஓ... பார்வைகளே வாழ்வை மாற்றியமைக்கும் சக்தி படைத்தவையாக இருக்குமானால், நினைவுகள், வார்த்தைகள், செயல்கள் இவற்றின் சக்தி எப்படியிருக்கும்?

விபரீதமான தனது சிந்தனைகளை அவள் தடுக்கத்தான் எண்ணினாள். ஆனால் அவள் வாழ்ந்த அன்றைய சூழல் அந்த நினைவுகளுக்கு நீரூற்றி உரமிட்டு வளர்க்கக் காத்திருக்கும் போது... அவள்... என்ன செய்வது..?

அவளுக்குள்ளேயே ஒரு புது உலகம் உதயமாக ஆரம்பித்தது கலாசாலை விடுதியில் அவளுடன் நெருங்கிப் பழகும் ஒரு சில தோழிகளுக்குக்கூட அவள் தன் உள்ளத்தின் அந்தரங்கத்தை முற்றாக மறைத்துவிட்டு மௌனச்சிலையாக நடைபயின்றபோதுதான் அந்தச்சந்திப்புகள் நிகழ்ந்தன. அந்த மகிழ மரத்தின் அடியைச்சுற்றி வட்டமாகப் போடப்பட்டிருந்த சிமெந்துத் தரையில் ஆண்களும் பெண்களும் பாகுபாடின்றி அனைவரும் ஒருமித்து அமர்ந்து உரையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒருநாள் மகேஸ்வரியும் ராஜியும் ஒன்றாக இருக்கும் போது மதன் தன் நண்பர்களுடன் வந்து கொண்டிருந்தான்

''என்ன மிஸ் யோசனை? எந்தக் கோட்டையைப் பிடிக்கப் போறீங்க?''

மதனின் குறும்புத்தனமான கேள்வியில் தலைநிமிர்ந்த மகேஸ் பதிலின்றிமௌனமாக அவனை ஏறிட்டாள் சொல்லிவைத்தாற்போல் நண்பர்கள் விலகிட மதன் மெல்ல சிமெந்துக் கட்டில் அமர்ந்து கொண்டான் ராஜிதான் அந்த மௌனப் பூட்டகத்தை உடைத்தாள்.

''பிடித்த கோட்டையை... எங்கை கோட்டைவிட்டிடப் போறேளோ எண்ட யோசனைதான்...''

மதன் பெரிய நகைச்சுவையைக் கேட்டதுபோல் பலமாகச் சிரித்தான். முடிவில் தானகவே ஓய்ந்து ஒரு நிதானத்திற்கு வந்தான்.

அவன் விழிகள் மகேஸை ஊடுருவுவது போல் ஒளிர்ந்தன. மகேஸ் மீண்டும் தலை குனிந்தாள்..

ராஜி 'ரீ' எடுப்பதற்காக விடுதிக்குச் செல்லவேண்டும் என்று மெல்ல நழுவிக்கொண்டாள்.

''என்ன மகேஸ்... ரெஸ்ற் வரப்போது...ம்... உங்களுக்கென்ன...அறிவுக் களஞ்சியம். எங்களைப்போல மர மட்டைங்களா? படிக்காமலே எழுதிடுவீங்க. எனக்கெண்டா படிச்சுக்கிட்டது எதுவுமே ஞாபகத்திலையில்லே...''

''என்னைக் கேலி செய்யிறதுக்கெண்டே திட்டம் போட்டுக்கொண்டு வந்தனீங்களே மதன்?''

மகேஸ் பொய்க் கோபத்துடன் அவனை ஏறிட்டுப்பார்த்தாள்.

'அப்பாடா... கேலியா? இதென்ன கேலி? இந்தக் கொலிஜிலேயே உங்கமேலை நான் வைச்சிருக்கிற மதிப்பு... பிரசின்சிப்பல் மேலே கூட இல்லை...''

உண்மையான வார்த்தைகளாக அவன் சொன்னதும் அவள் திடுக்கிட்டு இமைகள் படபடக்க, ''மதன் நான்... நான்... ஒரு'' வார்த்தைகள் முடிக்கப்படாமலே மதனால் இடைவெட்டப்பட்டன.

''ஒரு... சாதாரண ஸ்ருடன்ற் எண்ணு தெரியும். ஆனால் உங்க முகத்தப் பாக்கிறப்போ... மற்றவையைப் போல விளையாட்டுத்தனமா, மேலோட்டமா, போலி மரியாதைகளோடை பழக முடியேல்லை மிஸ்... அது ஏனெண்ணு தெரியேல்ல...''

அவன் பச்சைப் பசேலென்று பரந்திருக்கும் கோணல் புளி மரங்களை ஆழமாகப்பார்த்துக் கொண்டிருந்தான்.

மகேஸ்வரி கூறவந்தது ''நான் ஒரு லோகாஸ்ற் கேர்ல்......'' என்ற வார்த்தைகளே! ஆனால் அவன் புரிந்து கொண்டதோ 'ஒரு ஸ்ருடன்ற்' என்ற விடயத்தை! அவனது அறியாமையும் வெகுளித்தனமும் மகேஸ்வரிக்கு அவனமேல் இன்னும் ஒரு பற்றுதலை ஏற்படுத்தியது

''எப்படியும் வாழலாம்ணு இருக்கிறவைக்கு நடுவிலை. ... இப்படிதான் வாழவேணும்ணு கொள்கையோடை இருக்கிற உங்களைப்பார்க்கிறப்போ...... உங்க தனித்துவம் எனக்கு விளங்குது'' இந்தப்பயிற்சிக் காலம் இன்னும் இரண்டு வருஷம் நீடிககக்கூடாதான்னு இருக்கு. இந்த வருஷம் முடியாமலே தொடரக் கூடாதா....''

வெறுமையாக ஆரம்பித்து விரக்தயாக முடிந்த அந்த வார்த்தைகளின் அர்த்தம் மகேஸ்வரியின் அடி மனதில் ஒரு இனம் புரியாத சிலிர்ப்பை ஏற்படுத்தியது. ஆனாலும் வெளிப்பார்வைக்கு நிதானமாக அவள் அவனைப் பார்த்தாள்.

''...ம் அதெப்பிடி மதன்? இயற்கை தன்ரை நியதியை உங்களுக்காண்டியும் எனக்காண்டியும் மாற்றிக்கொள்ளுமா? நாங்கள் மட்டும் என்ன விதிவிலக்கா?

''விதியும் விலக்கும்தான். சரி சரி... அப்ப என்னமோ கோட்டையும் கோட்டை விடுறதும் எண்டு ஏதேதோ சொன்னீங்களே? என்ன பிரச்சனை? என்னாலை தீர்க்கக்கூடியதா?''

உள்ளார்ந்த பரிவுடன் அவன் கேட்டபோது மகேஸ்வரி பார்வையைத் தரையில் பதித்துக்கொண்டு வார்த்தைகளை எண்ணிப்பார்த்து அளவாக வெளியிட்டாள்.

''பிரச்சினை... ம் பிரச்சினையே உங்களோடதானே மதன்?''

திடுக்கிட்டு எழுந்துவிட்ட மதன் சூழ்நிலையை எண்ணி மீண்டும் அமர்ந்து கொண்டான். மகேஸ்வரி தொடர்ந்தாள்

''ஓ.. பேரைக் கேக்காதேங்கோ... என்ரை உயிர்ச் சிநேகிதி ஒராள்... அவளுக்கு உங்களை நல்லாய் பிடிச்சிருக்காம்... என்னைத் தூதனுப்பினாள். எனக்கு ஒரு தர்மசங்கடமான நிலை...'

முத்துப் போலக் கோத்திருந்த வியர்வைத் துளிகளை மெல்ல ஒற்றியெடுத்துக் கொண்டிருந்தான் மதன். அவனது முகம் என்றுமில்லாமல் இருள் கப்பியிருந்தது குரலில் இலேசான தழு தழுப்பு.

''மிஸ்.. நீங்க என்னோடை கூடப் பிறக்காத சகோதரி மாதிரி... உங்களைக் கெஞ்சிக் கேட்டுக்கிறன் எப்படியாவது உங்க தோழின்ர மனம் நோகாமல் பேசி என்னை மறக்கச் சொல்லிடுங்க ஏன் தெரியுமா? நான் ஒரு பெண்ணுக்கு என்றோ விற்கப்பட்டிட்டன். அதுவும் வெளியுலகத்தையே தெரியாமல் இருண்டு விட்ட சூனியத்திலே போராடிக் கொண்டிருக்கின்ற ஒரு கண்ணில்லாதவளுக்காக அர்ப்பணிக்கப்பட்டவன் ... மிஸ்... இதோ... இவதான் ... என்னோட வருங்கால மனைவி... லதா... என்ர மாமாவின் மகள்...''

திறந்து வைத்த டயறியின் முதற்பக்கத்தில் கறுப்புக் கண்ணாடியுடன் கள்ளமில்லாமல் சிரித்துக் கொண்டிருக்கும் அந்த அழகான பெண்ணின் முகம் கலங்கலாக மகேஸ்வரியின் கண்ணீர் நிறைந்த கண்களுக்குள் ஒரு சிதைந்த ஓவியமாகத் தோன்றியது

விழிக்கடல்களின் கரையில் அலைமோதிய உப்புக் கண்ணீர் வெள்ளம் கன்னத் தரைகளை முத்தமிட்டுத் தரையில்வீழ்ந்து கொண்டிருந்தது. ஒரு உண்மையான தியாகியைக் கண்டு விட்ட பூரிப்பில் தலைநிமிர்ந்த மகேஸ்வரி ஒரு நிதானமான தெளிவுடன் அவனை ஏறிட்டுப் பார்த்தாள்.

மதன் குரலைச் செருமிக் கொண்டு, ''மிஸ்...உங்க தோழிக்கும்வேணுமெண்டால் படத்தைக் காட்டுங்கோ...,' என்று நீட்டினான்.

(அடுத்தவாரம் தொடர்பவர்

கோகிலா மகேந்திரன்)

## 'மாவை பாரதி'

## எம்மொழி காப்போம்

எம்மொழி எங்கள் உயிரென மதிப்போம்
எம்முயிர் போலதைக் காப்போம்
நம்மொழி வளர்ச்சி நம்மினத் தவரின்
நாகரி கத்தினைக் காட்டும்
இம்மையில் வாழ்வுக் கிசைந்தபல் சாத்திரம்
இலக்கிய நூல்களைப் படைப்போம்
செம்மொழி என்ற சிறப்பினைக் காப்போம்
சில்மொழிக் கலப்புகள் செய்யோம்.

புலவர் வே. கனகசபாபதி

## புதிய புத்தகம்

நூல்: "முருகனின் முனைப்பே முனைப்பு"

தொகுப்பு: வைத்திய கலாநிதி க இராமசுவாமி. ஆடிய பாதவீதி, திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

முடிப்பு ரூ. 6/-

இயற்கை, உயிர், இறைவன் பற்றி ஆராய்ந்து, அறிந்து, தெளிந்து இறைவனருளால் உண்மையை உணர்தலே மெய் உணர்வு எனப்படும். "முக்தி என்றொரு நிலை சமைத்தாய்-அங்கு முழுதினையும் உணரும் உணர்வமைத்தாய்" என்பது மகாகவி பாரதியின் வாக்கு. "எதைத் தெரிந்து கொண்டால் எல்லாம்தெரிந்துகொண்டதாகுமோ அதைத் தெரிந்து கொள்வதே ஞானம்" என பகவான் சத்தியசாயிபாபா கூறியுள்ளார் "பொய்யாயின வெல்லாம் போயகல வந்தருளி மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே" என்றும் "மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே" எனவும் பாடியருளினார் மாணிக்கவாசக சுவாமிகள். "இறையியல் கலவாத அறிவியல் மூடத்தன்மையது. அறிவியல் கலவாத இறையியல் குருட்டுத்தன்மை வாய்ந்தது" எனக்கூறிய உலகின் மிகப்பெரிய அறிவியல் மேதை அல்பேட் ஐன்ஸ்டைன் மனத்தைப்பற்றி பின்வருமாறு பகர்ந்துள்ளார். "அணுவும் அண்டமும் பொருளும் பிரபஞ்சமும், காலமும் வெளியும் மனத்தின் உணர்வால் எழுந்த மகத்தானதொரு மாய மாளிகை புலன்களின் அறிவால் கட்டுப்படுத்தப்பட்ட நமது மனத்தின் உணர்வுக்கு அப்பால் சென்றுவிட்டால் அணுவுமில்லை. அண்டமுமில்லை, பொருளுமில்லை இப்பிரபஞ்சமுமில்லை, காலமுமில்லை இப்பரந்த வெளியுமில்லை". "மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி மறுமையோடிம்மையுங் கெடுத்த பொருளனே" என மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளியதையும் இங்கு நினைவு கூர்தல் நன்று "தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை தன்னை யறியாமல் தானே கெடுகின்றான் தன்னை அறியும் அறிவை அறிந்தபின் தன்னையே யர்ச்சிக்கத் தானிருந்தானே" என்ற திருமூலரின் திருமந்திரப் பாடல் சாதனைக்குரியது.

"முருகனின் முனைப்பே முனைப்பு" என்ற நூலை வாசித்தபோது பல்வேறு உணர்வலைகள் எழுந்தன. அவற்றின் விளைவுதான் மேற்கூறப்பட்ட தெளிந்த அறிவுரைகள், அருளுரைகள்.

அறிவு முதிர்ந்து, அனுபவம் பழுத்து, தத்துவம் செறிந்து, மனித வாழ்க்கைக்கும் ஆன்ம ஈடேற்றத்திற்கும் உய்வுதரும் உயர்ந்த கருத்துக்களை உள்ளடக்கியதாகத் திகழ்கிறது இத் தொகுப்பு நூல். வைத்தியம், சோதிடம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் பெற்ற பழுத்த அனுபவங்களின் துணைகொண்டு மதிநுட்பத்துடன் முருகதத்துவம் தெளிவாக உள்ளத்தைத் தொடும் வகையில், முருகனின் நோக்கு, ஆறுவது முகத்தின் பெருமை படைத்தலும் முருகனும், காத்தலும் முருகனும், அழித்தலும் முருகனும், அருளலும் மறைத்தலும் அதனுள் முருகனும், பன்னிருகரங்கள், வேலின் விளைவு, சூரனும் சூதமும் வீரவாகுத்தவரின் வலிமை, மயிலின் மாண்பு, சேவலின் செழிப்பு சூரபத்மனும் ஆசௌசமும் என்னும் தலைப்புகளின் கீழ் விளக்கப்பட்டுள்ளன கந்தபுராணம், திருமந்திரம், திருக்குறள் திருப்புகழ் ஆகிய நூல்களிலிருந்து பொருத்தமான மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன

'இறைவன் முருகன் ஆகியவை இரண்டுமைது அக்ஷரக் கூட்டுத் தொகைகளும் தனித்தனி 51 ஆக ஆயினும் அவைகளின் மூலமந்திரம் மட்டும் முறையே ஐந்தும் ஆறுமாக அமைந்துள்ளமை இறைவன் ஐந்துகிருத்தியங்களைக் கொண்டுள்ளமையும்? முருகனோ இவ்வைந்தினோடு ஆறுவது கிருத்தியத்துக் கொப்பான தொன்றையும் மேலாகக் கொண்டு நிகழ்பவன் என்பதும் இலகுவில் புரிந்து கொள்ளக் கூடியதேயாம் இதுவே முருகனுக்கு முக்கிய முனைப்பினைக் கொடுக்க அமைந்ததாகும்' என நூலின் முகவுரையில் கூறப்பட்டுள்ளது. பஞ்சபூதங்கள் பஞ்சகிருத்தியங்கள், முக்குணங்கள், சுழுமுனை, இடகலை பிங்கலை நாடிகள், மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆச்ஞை ஆகிய ஆறு ஆதாரங்கள் பிராணயாமம், பிரணவம் பற்றிய தத்துவார்த்த ரீதியான கருத்துக்களும் நூலில் இடம் பெற்றுள்ளன.

வேலின் விளைவு என்ற தலைப்பின் கீழ் உடற்கூறு ஒன்றுடன் வேலை ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ள பின்வரும் அறிவியல் கருத்துக்கள் அறிவுக்கு விருந்தாய் அமைந்துள்ளன "இரத்தாசயத்துள் வலதுபக்கம் காரிரத்தத்திற்கும் (Venous blood) இடது பக்கம் செவ்விரத்தத்திற்கும் உறைவிடமாகும். இவ்விரு பக்கங்களையும் வலம் இடமாகப் பிரிக்கும் சவ்வுப்பாகம் ஒன்று (Septum) உண்டு. இச்சவ்வின் நடுப்பாகத்தில் ஓர் நுண்ணிய நரம்பு அமைந்துள்ளது. இந்த நரம்புப்பாகம் தேகத்தில் வேறு எந்தப் பாகத்துடனும் தொடர்பு கொண்டதாக இல்லை அந்தரத்தில் ஒட்டிக் கொண்டே இருக்கின்றது இதனை ஆங்கிலத்தில் (Bundle of His) என்பர் இதன் உருவம் சரியாக வேலின் அமைப்பையே கொண்டுள்ளது இதனை நீக்கி விட்டால் உடனே இரத்தாசயம் நின்று விடும்"

மயிலின் மாண்பு. சேவலின் செழிப்பு என்பன பற்றிக் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் சிந்தனையைத் தூண்டுவனவாயுள்ளன பலபக்கங்களில் பட்டை தீட்டப்பட்ட வயிரம் போல பல்வேறு அறிவியல் இறையியல் கருத்துக்களை உள்ளடக்கிய கருத்துக் கருவூலமாக இந்நூல் மிளிர்கிறது ஆயினும் நூலின் 31-ம் பக்கத்தில் சிறிது இருள் படர்ந்துள்ளது என்பதை ஆன்மீக உணர்வு சுட்டிக்காட்டவே செய்யும் அறிவியலிலும் இறையியலிலும் ஈடுபாடு கொண்ட அனைவரும் படித்துச் சுவையும் பயனும் பெறத்தக்க அரிய நூலாக அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது

— "கரவைகிழார்"

---

## சந்நிதிக் கந்தனைக் கை தொழுவோம்

தொண்டைமா னாறென்று சொல்லவே முருகனைத்
துதியென்று மனம்சொல்லுமே
அண்டர்கள் துயர்தீர்த்த ஆறுமுகன் அருளாட்சி
அனுதினம் அகங்கொள்ளுமே!

செல்வச்சந் நிதியென்று செப்பவே முருகனைத்
தியானிக்க மனம் சொல்லுமே
அல்லலைக் களைந்திடும் அருளாட்சி அதிமாட்சி
அனுதினம் அகங்கொள்ளுமே!

மயிலேறி விளையாடும் மாமணியை மனங்கொள்ள
வடிவான வேல்வந்ததே
நயமான தொண்டைமா னாற்றிலே அருளூற்று
நம்பிக்கை நாள்வந்ததே!

கதிர்காமர் கண்கண்ட கனிவார்த்த காவலன்
கவினூர்ந்த கந்தவேளே
துதிசெய்யும் அடியார்கள் துயர்தீர்க்கும் சோபிதன்
தொண்டைமா னாற்றுளானே!

வாய்கட்டி வழிபட்டு வரம்வேண்டி வருபவர்
மனக்கண்ணின் மணிவேலனே
தாய்தந்தை குருவென்றும் தமிழ்தந்த அருளென்றும்
சாற்றிடும் அனுகூலனே!

அன்னதா னத்திலே அயராத கந்தனே
ஆனந்த அணிவேலனே
கன்னிகா தானமும் கவின்சமா தானமும்
கனிகின்ற கதிர்வேலனே!

கற்பூர சோதியும் காவடிகள் கரகமும்
காண்கின்ற கலைவேலனே
அற்புதன் அருளிதன் அரகரா விரிவுளன்
அழகான அயில்வேலனே?

திருவீதி யானவுயர் பெருவீதி கொண்டவன்
தேரிலே பவனிவரவே
பெருவாரி நிதிசேர்ந்து உருவாய தேருக்குப்
பேறூர்ந்த நிதிகந்தனே!

ஆலிலையில் அமுதுண்ட அற்புதக் கந்தனை
அனுதினம் மனங்கொள்ளவே
சீலமுயர் சித்திரத் தேரிதம பெற்றதே
செல்வச்சந் நிதிதனிலலே!

தேரிலே தெரியவும் திருவீதி பரவவும்
திசையாவும் சேந்துவரவும்
நேரிலே கதிர்காமர் நிறைபூசை செய்தமுன்
நோத்திநிறை சீர்த்தியாமே!

அரியாலையூர் வே. ஐயாத்துரை

✶ இன்று சந்நிதியான் தீர்த்தத்திருவிழா

---

●

சோமு:- இப்ப குடும்பமே நடுத்தெருவில நிக்குத! என்ன யோசிக்கிறீங்க.

ராமு:- இல்லை நடுத்தெருவில் வீடுகட்டிக்குடியிருக்க எப்படி அனுமதித்தார்கள் எண்டுதான் யோசிக்கிறன்.

—கிரி

---

## சர்வதேச நாணய நிதியமும் வறிய நாடுகளும்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான குறைபாடுகளை போக்குப் விதத்தில் சர்வதேச நாணயநிதியைச் சீர்திருத்த வேண்டுமென்று 1967ல் றையோடிஜெனரோவில்கூடிய மகாநாட்டின் மூலம் முதல் சீர்திருதத நடவடிக்கையானது ஆராயப்பட்டு 1968ல் சர்வதேச நாணய நிதிக்கு ஏலவே செயின்சினால் கூறப்பட்ட ஒரு பொதுநாணயத்தினை நிதியம் கொண்டிருக்கவேண்டும்எனும் கூற்றின்படி விசேடஎடுப்பனவுகள் உரிமைத்திட்டம்(S D R.) முன்வைக்கப்பட்டது. இதுவே சர்வதேச நாணய நிதியின் முதற்சீர்திருத்தமாகும், இதன் அடிப்படையில் கடன்பெறல் கொள்கையில் கூறப்பட்ட எல்லைக்கு மேலாக அங்கத்துவ நாடுகள் கடன்பெறவும் வசதியளிக்கப்பட்டது. ஒவ்வொரு நாட்டுத்தேசிய நாணயமும் S. D R. க்குச் சமப்படுத்கப்பட்டு நாணயமாற்றுவீத தீர்மானிக்கப்பட்டது ஆனாலும், S D R. சர்வதேச நாணயநிதியின் நாணய வரிசையில் ஒரு நாணயமாக இருந்தாலும் வெறும் பெறுமான அலகாகவே காணப்படுகிறது. இதனைப் பேப்பர்தங்கம் எனவும்அழைப்பதுண்டு.

மேலும் இந் நிலையத்தினை இரண்டாவது தடவையும் சீர்திருத்த வேண்டும் என்ற கோரிக்கையின்படி 1972 ல் ஜமேக்காவில் கூடிய 20 பேர் கொண்ட குழுவினர் மகாநாட்டில் ஆராய்ந்த முடிவின்படி பின்வரும் ஒழுங்கு அமைப்புகள் சம்பந்தமான விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

(1) நாணய மாற்று வீதம் சம்பந்தமான ஒழுங்கு

(2) சர்வதேச ஒதுக்கு சம்பந்தமான ஒழுங்கு.

(3) தங்க இருப்பு சம்பந்தமான ஒழுங்கு.

(4) நம்பிக்கை நாணய நிதியம்.

இவ்வாறான ஒழுங்கமைப்பின் மூலம் இந்நிதியம் சீர்திருத்தப்பட்டது. எனினும் செல்வந்த நாடுகளே கூடுதலான திருப்தியைப் பெற்று வருகின்றன. ஆனாலும், சர்வதேச வர்த்தக ஒழுங்கென்னும் அமைப்பில் இன்றும்கூட வறியநாடுகள் அதிருப்தியையே அனுபவித்து வருகின்றன

## முருங்கை நாகரிகம்

தென்னிலங்கை யெங்கும் ஈரப்பலாக் காய்கறி மணக்கும் இல்லங்கள் போல, வட இலங்கை, கிழக்கிலங்கை எங்கும் முருங்கைக்காய்கறி, மணக்கும் இல்லங்கள்நிறைந்த காலம் ஒருகாலம். முருங்கைக்காய் தீயல்+கறி முதல்நாளில் சமைத்ததாயினும் அது அடுத்தநாளிலும் பழுதுபடாது பயன்தருவது. முருங்கைக்காய் தீயலுக்குப் பலாக்கொட்டை கொண்டாட்டம். முருங்கைக்காய் அவியல்கறிக்கு கத்தரிக்காயும் சேர்த்தால் அமிர்தம், வெள்ளைக்கறி வகைகளில் அதைவிட விசேடமானது கிடையாது ஒரு முருங்கைக் காய்த்துண்டில் இரண்டு சுவை கொடுப்பது பொரித்துக்காய்ச்சிய கறி.

பத்தியத்துக்குப் பயன்படும் முருங்கைக்காய் போன்ற இன்னொருமரக்கறி வகை இவ்வுலகில இல்லை கூட்டரைத்து, உள்ளி, மிளகு, சீரகம் சேர்த்து வைப்பது ஒரு கறி. இன்னொன்று, வெறும் மல்லித்தூள் அரைத்துவைக்கும் சரக்குக்கறி. அதன் இலையை வாரத்துக்கு இருமுறையாவது வறுத்து உணவோடு சேர்த்துக் கொள்ளல் அக்காலத்து பெரு வழக்கு. தென்னிலங்கையில் தத்துறு முருங்கா என்னும் அகத்தியிலை சேராத சோறு குறைவு. நாங்கள் முருங்கையிலையைக் கூட்டுக்கறியில் சேர்த்துப் பூரணஉணவாகக் கொண்டகாலம் ஒருகாலம்.

தமிழ் நாகரிகத்தோடு நெருங்கிப் பயன்தந்து வந்த முருங்கைக்கு இதுவரை எவரும் தோட்டம் அமைக்கவில்லை என்பது ஒருகுறை என்று விரிவாக்கப்பெரியார் மானிப்பாய்க் கருத்தரங்கில் சுட்டிக்காட்டினார். வலிகாமம் வடபகுதியும், தென்மராட்சியும் முருங்கை அபிவிருத்தியில் தீவிரமாக ஈடுபடவேண்டும். இரத்தத்தில் இரும்புச் சத்தை உண்டாக்கும் முருங்கைக்காய் உற்சாகம் தரும். உற்பத்தி அதிகரித்தால் ஏற்றுமதி செய்யலாம்.

நன்றி:- 'மில்க்வைற்'

---


# நீங்கள் வெளிநாடு செல்கிறீர்களா?

கொழும்பு சென்று பயணச் சீட்டுக்களைப் பெறுவதில் உள்ள

✶ தாமதம் ✶ வீண் செலவு

ஆகியவற்றைத் தவிர்த்து யாழ். நகரிலேயே உங்கள் பயணச் சீட்டுக்களை மிகவும் குறைந்த கட்டணத்தில் உடன் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் திரும்பிச் செல்லும் பயணச் சீட்டுகள் (Return Tickets) வைத்திருப்போரும் கொழும்பு செல்லாமல் தங்கள் ஆசனங்களை இங்கேயே பதிவுசெய்து கொள்ளலாம்.

FLY
To many parts of the world
at Unbeatable Rates

TFC
த பிறெண்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
போன்: 23680

# துதியும் தூதும் தந்த

# இணுவில்

# சின்னத்தம்பிப்புலவர்

## தமிழ்தந்த தாதாக்கள்

ஈழவள நாட்டின் இணையில்லாப் புலவர்கள் வரிசையில், செந்தமிழ் வளர்த்த செம்மல்களாயும் சைவம்வளர்த்தசான்றோர்களாயும்பெருந் தொண்டாற்றிய பெரியவர்கள் பலர் சின்னத்தம்பி என்னும் பெயரிலேயே புலவர்கள் பலர். காலந் தோறும் தோன்றியுள்ளனர் அவர்களுள் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர், இணுவிற் சின்னத்தம்பிப் புலவர், அல்வாய்ச் சின்னத்தம்புப் புலவர், உடுப்பிட்டிச் சின்னத்தம்பிப் புலவர் ஆகியோர் தமிழ் தந்த தாதாக்கள் வரிசையைத் தக்கவாறு அலங்கரிக்கின்றனர்.

யாழ்ப்பாணத்து இணுவில் பதி குளத்தங் கரை நாகரிகத்திற்குப் பெயர் போன குடியிருப்புக்களில் ஒன்று சைவத்தமிழ்ப் பண்ணைகளுள் ஒன்று பல்லாண்டுகளாகப் பல கலைகளையும் பேணிப் பாதுகாத்துவந்த பெருங் கலைவாணர்களின் உறைவிடங்களில் ஒன்று. ஆய கலைகளுள் ஆடல் பாடல் முதலிய அருங் கலைகள் அன்றும் இன்றும் அங்கே களிநடம் புரிந்த புரிகின்ற அமைவு எல்லோரும் அறிந்ததே. விவசாயம், வர்த்தகம், தொழில் துறை முதலியவற்றிலும் மேம்பாடு கண்ட இணுவிலில் தமிழரசர்களோடு தொடர்பு கொண்ட ஆலயங்களும் பல நூற்றாண்டுக் காலமாக அங்கே நிலவி வருகின்றன.

### ஒல்லாந்தர் கொடுத்த முதலிப்பட்டம்

இணுவிற் சின்னத்தம்பிப் புலவர் இலங்கைக் கரை நாடுகளை ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில தோன்றியவர். இணுவில் சிதம்பரநாதர் என்பாரின் மைந்தராகத் தோன்றிய இவருக்கு கதிர்காம சேகரர் என்பதே இயற் பெயர் என்ப. அப்பெயரோடு ஒல்லாந்த அதிகாரிகள் அளித்த மாணுமுதலியார் பட்டமும் சேர இவர் கதிர்காமசேகர மாணு முதலியார் என வழங்கி வந்தார்.

இவர்சைவங்கைவந்தபக்திபிலக்கியவாணராய் இருந்ததோடு, பொது மக்கள் பெரிதும் விரும்பிய இசை நாடகத் துறையிலும் விற்பன்னராகி, நொண்டி நாடகம், கோவலன் நாடகம், அனிருத்த நாடகம் முதலிய நூல்களும் செய்தவராவார்.

இணுவிற்பதியில் கோயில்களுக்குக் குறைவில்லை. இணுவல் வாசிகள் கோயில் வழிபாட்டில் தம்மை மறந்துருகும் இயல்பினர். அங்கே ஆண்டு முழுவதும் ஏதோ ஒரு இடத்திலாவது ஒரு திருவிழாவாவது நடைபெறுவதால் வழிபாட்டுப் பழக்கம் சனுதனமாக நிலவுகின்றது. சைவங் காக்கும் இணுவிலில் சைவப்பிரகாச வித்தியாசாலை. சைவமகாசன வித்தியாசாலை முதலான கல்விக் கூடங்களுக்குக் குறைவில்லை.

### கோயில் நகரம்

குளத்தங்கரை நாகரிகத்தில் தோய்ந்துபழகிய மக்கள் கோயில் வழிபாட்டில் சிறந்து விளங்கிய விரத அநுட்டானங்களில் மேம்பட்டுப் பக்திவயப் பட்டுப்பாடல் ஆடல்களில் தங்கள் திறமையையும் காட்டத்தவறுவதில்லை. அந்த வகையில் அவர்களுக்குக் காவடியாட்டம் கைவந்தகலை.

பக்தித்துறையில் பழுத்த ஊரவருள் சின்னத்தம்பிப்புலவர் காலத்தால் முற்பட்டவர் இவருக்குப்பின் வந்தவர்களுள் நடராச ஐயர் என்பார் நாவலர்களின் நன் மாணுக்கருகிச் சித்தாந்த சாத்திரம் செம்மையாகக் கற்றிருந்ததோடு, போர்த்துக்கேயர் காலத்தில் திருநெல்வேலி ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் அரிதினுய்ந்து எழுதிய சிவஞானசித்தியார் சுபக்கத்தின் அகலவுரையை 1882 ஆம் ஆண்டிலே அருமையாகப் பதித்தவர் அன்றி குப்பிழான் செந்திநாத ஐயரவர்களின் சித்தாந்தஞானகுருவாயிருந்தவர் இந்தப்பாரம்பரியம், திருப்பரங்குன்றம் வரைபரவி அங்கே சப்தரிஷிகள் என வழங்கிய பழநி ஈசானசிவாசாரிய குருபரியந்தம் படிப்பதற்கு வழிவகுத்தது.

இன்னும் இணுவிலில்தோன்றிய பேராயிரம் உடையவர் வழித்தோன்றல்கள்பலர் அம்பிகைபாகர் என்பார் அடக்கமான ஆசிரியராய். தம் அறிவாற்றலைத் தமிழ்நாட்டில் மணக்கச்செய்ய வசதியும் வாய்ப்புஞ் செய்தவர் தமிழ் தந்ததாதா தாமோதரம்பிள்ளை அவர்களாவர் புலவர்களுக்கு இரும்புக்கடலை என நிலவியது தணிகைப்புராணம். அதனைச் செய்தவர் சிவஞான முனிவரின் மாணுக்கரான கச்சியப்பமுனிவர். கடினமான தணிகைப் புராணத்தை தமிழ் வாணர்களுக்கு முகஞ்செய்தவர் உரையாசிரியர் அம்பிகைபாகர்.


### சின்னத்தம்பிப் புலவர் துதித்த சிவகாமியம்மை

இணுவிற் சிவகாமியம்மை அவ்வூரவர்களுக்கு வரமும் வாழ்வும் வற்றுத வளமும் அளிக்கும் வடிவுடையன்னை. அவள் அன்பர்களை அடியவர்களை அண்டினுேரைக்காத்தருளும் கண்கண்ட தெய்வம். ஒரு சமயம் சின்னத்தம்பிப் புலவரை அவரின் பகைவர் யாரோ வஞ்சனையால் மடக்கிப் பிடித்து எடுத்துச் சென்று மறியல் செய்தாற்போல மறைவிடத்து ஒதுக்கி வைத்தனர், பூட்டப்பட்ட அறையில் கிடந்துவாடிய அவருக்குத் தாய்போல் வழிதிறந்தவள் சிவகாமித் தெய்வமேயாவள்.

சிறையிலிருந்த சின்னத்தம்பிப்புலவர் சிவகாமியம்மையைச் சிந்தையில் இருத்தித் தம்மைமறந்து தமிழ் நயங் கனியப் பத்துப்பாடல்கள்

(12-ம் பக்கம் பார்க்க)

க.சி.குலரத்தினம்



## கவிதைநாடகம்

# தருமத்தின் குரல்

காரை.செ.சுந்தரம்பிள்ளை

(முன் தொடர்ச்சி)

### காட்சி 1

(அங்கம் 1)

இடம்: சத்தியபுரி மன்னன் அவை.

காலம்: காலை நேரம்.

மந்திரி: 1

மரபினைப் பேண வேண்டும்
மறுத்து யான்கூற வில்லை
அரசனை அழைத்துத் தானு
ஆலயம் திறக்க வேண்டும்!
நிரந்தர மரபிவ் வாறு
நிலத்திலே உண்டா சொல்வீர்
பொருத்தமே இல்லா வார்த்தை
புகல்வதைத் தவிர்த்தல் நன்று.

மந்திரி: 2

பெருமைசேர் முதல மைச்ச,
பேணிஅவ் அறவோன் செய்த
கருமமே சரியென் றுநீர்
கருதுநீர்? நன்று நன்று
தரணியை ஆள்வோன் தன்னைத்
தவிர்த்தொரு செயல்செய் கின்ற
மரபினை ஏற்ப தென்ருல்
மாபெரும் தவறு என்பேன்

மந்திரி: 1

மாநிலம் புரக்கும் எங்கள்
மன்னவ! இதனைப் பற்றி
ஏனுெரு வார்த்தை சொல்லா
திருக்கின்றீர்; சபையில் உள்ளோர்
ஆனவுன் பதிலைக் கேட்க
ஆவலாய் உள்ளார்; உண்மை.
மௌனமே விடுத்து உங்கள்
மறுமொழி கூற வேண்டும்.

மக்கள்:

உண்மைதான் அரசே உங்கள்
உயர்ந்தவோர் கருத்து யாதோ?

அரசன்:

அன்புள்ள சபையோ ரேயான்
அமைதியாய் இருந்த தெல்லாம்
பண்புள்ள உங்கள் உள்ளப்
பான்மையை அறிதற் கேயாம்
வன்மைசேர் அறவோன் செய்கை
வரவேற்றற் குரிய தாகும்.

கோவிலைக் கட்டி ஏற்ற
கும்பாபி ஷேகம் செய்யும்
தூயவன் இறைவ னைத்தன்
துணையாகக் கொள்வ தன்றி
நேயமாய் அரச னைப்போய்
நின்று மன்ருட மாட்டான்
ஆயவோர் செயலைத் தானே
அறவோனும் செய்தான் என்பேன்.

அறவோனைப் பற்றி யானும்
அதிகமாய் அறிந்தே யுள்ளேன்
நிறைகுடம் போன்ருன்; தூயன்
நேர்மையன், ஒழுககம் மிககான்
குறைகூறும் குணமி லாதான்
கொடுத்திடும் வண்மை கொண்டோன்
இறைபக்தி உடையான்; மேலும்
என்னிடம் அன்பும் பூண்டான்.

எச்செய லான போதும்
எந்தனுக் கறிவி யாது
அச்செயல் செய்வ தென்ப
தறவோனின் வாழ்வில் இல்லை
இச்செயல் எந்தன் பேரால்
இயற்றிய நிபந்தம் என்ற
அச்சத்தால் போலும் நல்லன்
அறிவிக்க வில்லை என்பேன்.

மந்திரி: 1

உண்மைதான் வேந்தே இல்லை
உரைத்தனன் எனக்குக் கூட
அன்புள்ள அவன்போன் ருேரால்
அரசர்பேர் நீடு வாழும்

மந்திரி: 2

எந்தனைப் பொறுத்தல் வேண்டும்
இனிய எம்தலைவா........ அன்ப!

அரசன்

உன்மொழி அன்பி னுலே
உதிதவை என்ப தோர்வேன்
அவையோரே மேலும் ஒன்று
அறைந்திட விழைகின் றேன்யான்
நவையிலாத் தொண்டு செய்யும்
நல்லவர் எவரே யேனும்
கவலை கொள்ளாத வண்ணம்
காத்தல் உம்கடமை என்பேன்
அவச்செயல் செய்வோர் தம்மை
அவைமுனே நிறுத்தல் வேண்டும்.

கட்டடம் திறப்ப தற்கும்
கடைகளைத் திறப்ப தற்கும்
பெட்டகம் திறப்ப தற்கும்
பெருஞ் சாலை திறப்ப தற்கும்
பட்டடை திறப்பதற்கும்
பலகாரம் தின்ப தற்கும்
இட்டமாய் அரசன் சென்ருல்
யார்நிரு வாகம் செய்வார்.

அரசவை சார்ந்த நீங்கள்
அடிக்கடி இந்த வாறு
கருமங்கள் செய்யப் போனுல்
கடமையைச் செய்வார் யாரே
அருமந்த நேரம் தன்னை
அவமாக்கிப் போட்டி டாது
நிருவாகம் செய்வீ ரென்ருல்
நிலைத்த நற்பயனுண் டாகும்.

மந்திரி: 1

கட்டளை அரசே! உங்கள்
கருத்தினை வரவேற் கின்ருேம்
திட்டங்கள் செயலாய் மாற
செயல்கள் நல்லனவே யாக
பட்டணம் கிராமம் யாவும்
பயன்பெற; மக்கள் வாழ
தொட்டன பொன்னே யாக
தொண்டு நாம் புரிவோம் வாழ்க.

(இச்சந்தர்ப்பத்தில் வாயிற் காவலன் வருகிருன்.)

வாயிற்காவலன்:

வெற்றிவேல் மன்னு போற்றி
விளங்கிடும் திறலோய் போற்றி
கற்ற மாநிதியே போற்றி
காவலன் வணங்கு கின்றேன்.

அரசன்:

குற்றமில் காவலா நீ
கூறுடும் செய்தி யாதோ?

காவலன்:

பொற்புறு வேந்தே! ஐந்து
புதியவர் வாயில் உள்ளார்
அடுத்த வூர் தனிலிருந்து
அரசரைக் காண வென்று
விடுத்தவோர் அம்பைப் போல
விரைந்துமே வந்துள் ளார்கள்
கொடுக்கவோர் செய்தி யுண்டாம்
கொற்றவா! வணங்கு கின்றேன்.

அரசன்:

தடுத்திடா தவரை இங்கே
தருக நீ.........

காவலன்:

....... ......வாழி வேந்தே.

(வளரும்)

## துதியும் தூதும்....

(11ம் பக்கத் தொடர்ச்சி)

தரவுகொச்சகத்தில் பாடினுர்; தமிழ் தந்த தாதாவாயினுர்.

''பெற்றவள் நீ யானுனது பிள்ளையுலகோரறிய அற்றமிலாச் செல்வமருளி வளர்த்தன்புதந்தாய் இற்றைவரையுந்தனயே யான் வருந்த வெங்கொழித்தாய் சிற்றிடைமின் னன்னை சிவகாம சுந்தரியே'' தாம் சிறையில் வருந்தியதையும் தமது துதிப் பாடல்களில் இடையிடையே குறிப்பிட்டதோடு, ஈற்றில் சிவகாம சுந்தரி தம் சிறையை நீக்கியருள் புரிந்ததையும் குறிப்பிட்டுப் பாடியுள்ளார்.

''துப்பூட்டு மென்றனது துன்னுர் சிறைப்படுத்தும் அப்பூட்டுத் தீய அரிய சிறைவீட்டிருக்கும் இப்பூட்டு நிர்ப்பூட்டாய் என் சிறையை நீககியருள் செப்பூட்டும் பொற்ருள் சிவகாம சுந்தரியே''

''சிவகாமசுந்தரி தம்மைச் சிறை நீத்த பேரருளைப்பெரிதும் வியந்து''சிறை தீர்த்த சிவகாமசுந்தரியே'' என துதித்து மகிழ்வர்

### பஞ்சவர்ணத் தூது

### பாடிய புலவர்

இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழ்த் துறைபோய சின்னத்தம்பிப் புலவர் பாடிய தூதுப்பிரபந்தம் ஒன்று வீரர் வணக்கத்தை நினைவுபடுத்துகின்றது. தமிழ்ப் பண்பாட்டில் வீரமரணமெய்தியவர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு செய்தல் பாரம்பரிய வழக்கம். என் தலைவனுக்கு முன்னே வராதே. வந்து தோற்றுக் கல் நின்றவர் பலர். பலராய பெருவீரரை வென்றவன் என் தலைவன் ''என்னை முன் நில்லன்மின் தெவ்விர் பலர் என்ஐ முன்னின்று கல் நின்றவர்,, என்று திருவள்ளுவர் படைச் செருக்கில் ஆண்மை மிகுதி கூறுகின்ருர். இணுவிலில் உள்ள கோயில்களுள் இளந்தாரி கோயில் என்பதும் ஒன்று. அங்கே கோயில் கொண்டுள்ள காளிங்கராயன் தந்த கயிலாயநாதனே பஞ்சவண்ணத்தூதின் பாட்டுடைத் தலைவனுவன் இவன் கலிங்க நாட்டைச் சேர்ந்த வீரனின் சந்ததியினன் இலங்கையைஆண்ட மாகன் வரலாற்ருேடு இணைந்தவன் எனினுமாம்.

வீரனுய இளந்தாரி பவனி வரும்போது கண்டு காதல் கொண்ட தலைவியாய புலவர் தம்வயமிழந்து பாடும் பாவனை உச்சமாயுள்ளது புலவர் சந்திர மோகினி எனக்காதல் வயப்பட்ட பெண்ணின் பெயரையும் தருகிருர் சந்திர மோகினி காதல் படுத்திய பாட்டில் நிலவையும், தென்றலையும், கிளியையும், அன்னத்தையும் தோழியையும் தூதனுப்பினுர். இவ்வாருக ஐவகைத் தூதில் அசைந்த இளந்தாரி அவளைத் திருமணஞ் செய்வதாகத் தோழியிடம் இசைவு தெரிவித்தான்

இத்தகைய தூதுப் பிரபந்தம் தொல்காப்பியா குறிப்பிட்ட விருந்தின் மேல் விருந்தாக அமைந்துளளமை இணுவிலுக்குப் பெரும் பெருமை தரு, விருத்தம், கொச்சகக் கலிப்பா, அகவல் முதலியா பாவினங்கள் விரவிவரத் துள்ளிக்குதித்தோடும் செந்தமிழ் தூதுப்பிரபந்தம், பிள்ளையார், சிவகாமியம்மை, சுப்பிரமணியர், வைரவர், பத்திரை முதலான தெய்வ மூர்த்தங்களுக்கு வணக்கம் பாடும் வகையில் இணுவிற் பதியில் கோயில்கள் நிறைந்திருந்தன, அங்கே கும்பிடுவதற்கும் ஆயிரக்கணக்கான அடியவர்கள் பழவடியார்களாயிருக்கிறுர்கள். பாடி ஆடுகிறுர்கள்.

## விலங்குகளும் ஊர்ப் பெயரும்

இலங்கைத்தீவில் குறிப்பாகத் தமிழ்ப் பிரதேசங்களில் பறவைகளினதும் மிருகங்களினதும் பெயர்களைக் கொண்ட ஊர்கள் பல உள்ளனவல்லவா? உதாரணத்துக்குச் சிலவற்றை இன்று தருகிறேம்.

பறவைகளின் பெயரைக்கொண்ட ஊர்கள்;

கொக்குவில், காக்கைதீவு, கிளிநொச்சி,
மயிலங்காடு, புளுப்பொறுக்கி, சாவல்கட்டு.

மிருகங்களின் பெயரைக் கொண்ட ஊர்கள்:

ஆனைக்கோட்டை, ஆனையிறவு, ஆனைவிழுந்தான்,
பன்றித்தலைச்சி, கீரிமலை, அரியாலை, [அரி-சிங்கம்]
கழுதைப்பிட்டி, கரடிப்போக்கு.

இவைதவிர்ந்த வேறும்பல ஊர்கள் உள்ளன. எழுதி அனுப்புங்கள் பார்க்கலாம்!

## பைத்தியத்துக்கு வைத்தியம்

அது ஒரு பைத்தியக்காரர்களின் ஆஸ்பத்திரி ஒரு நாள் அங்குள்ள டாக்டர் பைத்தியத்தைத் தெளிய வைப்பதற்கான புதிய மருந்தொன்றைத் தன் நெடுங்கால ஆராய்ச்சியின் பயனுகக் கண்டு பிடித்தார். அந்த மருந்தைச் சோதித்துப் பார்க்க வேண்டி இருந்தது. அதைப்பரிசோதிக்க அந்த வைத்தியசாலையில் இருந்த ஐந்து பைத்தியங்களை அழைத்தார்

அவர்களுக்கு மருந்தைக் கொடுத்து நாற்காலிகளில் உட்கார வைத்தார், பின் அவர்களிடம், ''நீங்கள் இப்போ சைக்கிள்களில் உட்கார்ந்திருக்கிறீர்கள். எங்கே சைக்கிள் ஓட்டுங்கள் பார்க்கலாம்'' எனறுர்.

உடனே பைத்தியங்களில் நால்வர் சைக்கிள் ஓட்டுவது போலக் கால்களை ஆட்டினுர்கள். ஒருவன் மட்டும் அமைதியாக அமர்ந்திருந்தான் டாக்டருக்கு மிகவும் சந்தோஷம். தனது மருந்து அந்த ஒருவனிடமாவது வேலை செய்ததே என்று! டாக்டர் தன் வெற்றியைத் தீர்மானித்துக் கொள்ளும் பொருட்டு அந்த ஒருவனை அணுகினுர்.

''எல்லோரும் சைக்கிளில் செல்வதுபோல் கால்களைப் பெடல் செய்யும்போது நீ மட்டும் ஏன் சும்மா இருக்கிருய்'' எனக்கேட்டார்

அதற்கு அவன் சொன்ன பதில் என்ன தெரியுமா? ''நான் சைக்கிளில் இறக்கத்தில் அல்லவா சென்றுகொண்டிருக்கிறேன். ஏன் பெடல் செய்யவேண்டும்..... பிறீ வீல் தான்'' என்ருன் அவன்.

சி. நகுலேஸ்வரன்
9-ம் தரம்
யாழ். இந்துக் கல்லூரி.

## சிறுவர் மஞ்சரி

★ தொகுப்பு: என். செல்வராஜா

### உலகில்

### சிறிய நகரம்

இத்தாலி நாட்டின் எல்லைக்குள் அமைந்திருப்பதுவத்திக்கான் நகரம். இதன் பரப்பு 0 17 சதுரமைல். வத்திக்கான் சுதந்திரமான தன்னுட்சியுள்ள நாடு. போப் ஆண்டவர் இங்குதான் இருக்கிருர். வத்திக்கான் கத்தோலிக்கர்களின் தலைமையகமாக மிகப்பழங் காலம் தொட்டு இருந்து வந்தாலும் 1920 ல் தான் சுதந்திர நாடாகியது. இந்தச் சின்ன நாட்டில் வங்கியும் ரயில் நிலையமும், ஒரு தினசரிச் செய்தித் தாளும் உள்ளன. வரலாற்றுப் புகழ் மிக்க சென் பீட்டர்ஸ்தேவாலயத்தைக் காண வருடமொன்றுக்கு ஒரு லட்சம் மக்கள் இங்கு வருகிருர்கள்.

— சச்சி —

கம்பியூட்டர் என்பது தமிழ்ச் சொல் அல்ல என்பதை அறிவீர்கள். அதன் தமிழ்ச்சொல் சொல்லுங்கள் பார்க்கலாம்?

கணணி

முதல் தமிழ்க் கம்பியூட்டரின் பெயர் யாது தெரியுமோ?

திருவள்ளுவர்

ஆமாம், திருவள்ளுவர் என்று பெயரிட்டுள்ளனர்.

செல்வி நளாயினி நல்லையா
வேம்படி மகளிர் கல்லூரி

## அட்டை

புகைக்காமல் புகைவண்டி போகுதம்மா
பூமியில் தண்டவாளமின்றி
வகைக்கங்கே ஆயிரம் சில்லுகளாம்
வரிவரியான பெட்டிகளாம

தலைப்பாகம் உயர்ந்திரு விளக்குகளாம்
சரியான வளைவிலும் நெளிந்திடுமாம்
இலைக்காடு சுவரெங்கும் ஏறிடுமாம்
இயங்காமல் இடைக்கிடை நின்றிடுமாம்

மழைக்காலம் புறப்படும் வண்டியிதாம்
வழிந்தோடும் தாழ்வார நீளமம்மா
சளைக்காத வண்டிதைத் தொட்டுவிட்டால்
சட்டென்றும் வட்டமாய்ச் சுருளுமம்மா

க. சச்சிதானந்தன்

## அவன் யார்?

ஐந்தே எழுத்துக்களைக் கொண்ட ஒரு அற்புதக் கடல்வீரனின் பெயர் அது

முதலாவது எழுத்து கொழும்பிலுண்டு கண்டியிவில்லை.

இரண்டாவது எழுத்து உலகத்திலே உண்டு தேசத்திலே இல்லை.

மூன்ருவது எழுத்து அம்மாவிலேஉண்டு அப்பாவிலே இல்லை.

நான்காவது எழுத்து பண்டிதரில் உண்டு புலவரில் இல்லை·

ஐந்தாவது எழுத்து பஸ் வண்டியிலே உண்டு புகை வண்டியிலே இல்லை.

அந்த அற்புதக்கடல்வீரன் யார் சொல்லுங்கள் பார்ப்போம்.

[விடை: கொலம்பஸ்]

## நீங்களும் பாடலாம்—2

சரியானவிடை

'நீங்களும் பாடலாம்—2' சரியாக நிரப்பி அனுப்பியவர்கள் விபரம் வருமாறு; திருமதி நிற்ரு பற்றிமாகரன், யாழ்ப்பாணம், செல்வி சாந்தி பாலசிங்கம். யாழ். இந்து மகளிர் கல்லூரி வே. கனகசபாபதி, சண்டிலிப்பாய் செல்வி கந்தையா ஜெயலக்சுமி, திருநெல்வேலி வடக்கு. மிகிலா விமலேந்திரன், யாழ்ப்பாணம். செல்வி ஃபுவைஸா ஹாஜி அபுசாலி அபூசாலி, யாழ் மு சுதாகர், திருநெல்வேலி தெற்கு. செல்வி சொகீதா, யாழ். இந்துமகளிர் கல்லூரி கே. அரசேஸ்வரன், நல்லூர், ஜெற்றோசுபருஜ். மயிலிட்டிரோ. க. பாடசாலை. ச. துஷ்யந்தி. திருநெல்வேலி. ஜெ. மகேஸ்வரன், மானி. இந்துக் கல்லூரி. பிரேமன் சுப்பிரமணியம், கரவெட்டி கிழக்கு அஷ்ரப் கபூர், சாவகச்சேரி. ப. சாய்மருகன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை. பதஞ்சலி சுந்தரலிங்கம், யாழ் திருக்குடும்பக்கன்னியர் மடம். கலா மோகன், நீராவியடி. கேதீசன் செல்லையா, நீர்வேலி வடக்கு. மைதிலி நவரத்தினம், யாழ். திருக்குடும்பக் கன்னியர்மடம் தி- திருச்செல்வி, வேம்படி மகளிர் கல்லூரி. சி. அபராஜிதன், உரும்பராய் மேற்கு. செ. தேவன், வேலணை துரைசுவாமி ம. ம. வி. த. தர்ஷன், வயாவிளான் தெற்கு. எஸ். சண்முகதாசன், சாவகச்சேரி. க. சுந்தரகுமார், கட்டுடை. கணேசன் சூரியகரி, வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி. எஸ். தேவன், சரவணை கிழக்கு. நித்தியவதனி நாகரத்தினம், யாழ். இந்துமகளிர் கல்லூரி; த. சத்தியசீலன், யாழ். மத்திய கல்லூரி. வி ஜெயந்தினி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, செல்வி ஆசீர்வாதம் அனிலா, சுண்டிக்குளி. செல்வி சி. அனுஷா, உரும்பராய். செல்விகௌசலா கணபதிப்பிள்ளை, அனலைதீவு, துரை சுரேந்திரன், மேல்நீதிமன்றம். யாழ்ப்பாணம் செல்லர் தங்கவேலாயுதம்'

யாழ்ப்பாணம் ப விஜயகுமாரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி. வி. சிவரூபி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி. மா. விஜயகுமாரி, வட இந்து மகளிர் கல்லூரி, க. பவானி, கரணவாய் ம. வி, ப ஜெயராசசேகரன், வேலணைமேற்கு. வே. லோகநாதன், சுன்னுகம்.

ஒருபிழையுடன்: த. யோகேஸ்வரன், யா. வைத்தீஸ்வர வித்தியாலயம்.

★ 'நீங்களும் பாடலாம்' பாடலை நிரப்பி அனுப்பும்போது சிலர் பெயர் முகவரியைக் குறிப்பிடத்தவறிவிடுகின்றனர். சிலர் தனியாகவே எழுதிவைக்கின்றனர்· இவற்றைக்கவனிப்பதில் எமக்குச் சிரமமாயிருப்பதாலும் பங்குபற்றுவோர் வசதிக்காகவும் இங்கு பெயர் முகவரிப்பத்திரம் பிரசுரமாகிறது. பாடலுடன் இதனைக் கத்தரித்து நிரப்பி அனுப்புங்கள்;

## நீங்களும் பாடலாம் (3)

மருந்தே யாயினும் விருந்தோடு உண்
மதித்திட வேண்டும் உன்தாய்——(மண்)
கண் எனத் தகுவது எழுத்தொடு——(எண்)
காத்திடும் கடவுளின் இருப்பிடம்——(விண்)

கட்டிடம் கட்டத் தேவையாம் சல்லி
கைமண் அளவே கற்றது —— (கல்வி)
அருமருந்தில் ஒன்று கொத்து —— (மல்லி)
அர்ச்சுனன் மனைவி ஆனவள் —— (அல்லி)

வாசலில் இருப்பது வாயில் படி
வாழ்வைக் கொடுப்பது கொடிய —— (குடி)
மன்னவன் தலையில் இருப்பது —— (முடி)
மண் வெட்டிக்குத் தேவை —— (பிடி)

காட்டில் பிறந்து வாழ்வது புலி
காவல் பூனைக்கு உணவு —— (எலி)
காளிக்கு பக்தர் இடுவது —— (பலி)
காய்ச்சலில் எழுவது உடம்பில் —— (வலி)

பெயர்:..................................

முகவரி:..................................

..................................

..................................

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

குடும்பத்தில் சிறு பூசலின் பின் குதூகலம் நிலைக்கும். ஆயுதபீடைக்கும் எதிரிகளின் சச்சரவிற்கும இடமுண்டு பிரிவும் உங்களை நிலைதடுமாற வைக்கும் தாய் வழியால் புத்திரருக்கு இலாபம்கிட்டும். அவ்வழியால் மகிழ்ச்சிக்குஇடமுண்டு. மாணவர்களாயின் கண்வலை வீசி காதல் கணை தொடுப்பீர். வீரமாகாளியம்மன் வழிபாடு விரும்பத்தக்கது.

## ரிஷபம்

எண்ணியகாரியத்தில் தடையேற்படும். மேலதிகாரிகளின் கண்டிப்பும் உண்டு. குடும்பப் பிணைப்புகள் இறுகும். காதலர்களுக்கு கரும்பாக இருக்கும். சிறிய விபத்துக்கும் இடமேற்படும். வஞ்சகர் வலைவிரிப்பர். பிள்ளைகளால் உதவியுமாகும். புகழ்ச்சியும் மகிழ்ச்சியைத் தேடித்தரும் சுப்பிரமணியர் வழிபாடு விரும்பத்தக்கது.

## மிதுனம்

தனவரவும் தருமசிந்தையும் மேலோங்கும். நஷ்டத்திற்கும் இடமுண்டு முதலீடுகளைத் தவிர்த்துக்கொள்ளவும். விசப் பரீட்சைமூலம் விபரீதங்கள் விளையும் களஸ்திரவழிச்சிறப்புமுண்டு புதிய சந்திப்புக்கள் பிரச்சினையை உண்டாக்கலாம். எவ்விடயத்திலும் நேர்மையுடனும் உண்மையுடனும் நடக்கவும். தயவுடன் தட்சணாமூர்த்திப்பெருமானை வழிபடவும்

## கடகம்

பெரியோர் புகழ்ச்சியும்புதுப் பிரயாணங்களும் பூமிபொருள் லாபங்களும்உருவாகும். தடைகள் பல உருவாகலாம். பெயரைக்கெடுப்பதற்கும் பொருளைப்பறிப்பதற்கும் சிலர் எத்தனிப்பர். அவதானமும் நிதானமும் வேண்டும். நீண்டநாள் தொடர்பில்மாற்றம் ஏற்படும். அது மனதில் இதமாக இருக்கும் எதிலும் அமைதிவேண்டும் சனீஸ்வரப் பெருமானை வழிபடவும்

## இன்று

மாதம்- ஆவணி
திகதி- 24 [09-09-1984]
வாரம் ஞாயிறு
திதி- சதுர்த்தசி முற்பகல் 10-54ன் மேல் பூரணை
நக்ஷத்திரம்- சதயம் பின் இரவு 5-15 வரை

## சிம்மம்

தனவரவு உங்களை மகிழ்விக்கும் தொழில்துறையில் முன்னேற்றமும் உயர்ச்சியான மாற்றங்களும் மேலோங்கிநிற்கும். பெரியோரும் அயலோரும் அன்புகாட்டுவர். சில விடயங்களுக்கு தடை விதிக்க தரகர்கள்எத்தனிப்பர் விழிப்புடனிருக்கவும் சிவசூரியப் பெருமானை வழிபடவும்.

## கன்னி

பிதாவழிச்சுகம் கிடைக்கும் துன்பத்தின் சாயல் மனதில் புகைமூட்டத்தையும் பகைமூட்டத்தையும் உண்டு பண்ணும். திடீரெனவரும் வருவாயால் கடன் தொல்லைகள் தீரும் அன்புக்கரங்கள் அணைக்கும் நல்ல விடயங்களுக்கு வழிகோலப்படும் சனீஸ்வரப் பெருமானை வழிபடவும்.

## துலாம்

குருவின் உபதேசம் வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமையலாம் உடல் நலனும் பாதிக்கப்படலாம். பெண்கள் மிகவும் அவதானமாகநடக்கவும். அதிர்ஷ்டதேவதையின் பார்வை உங்களுக்கும் கிடைக்கலாம். சனீஸ்வரப்பெருமானை வழிபடவும்.

## விருச்சிகம்

கொள்வனவுகளில் நல்ல திருப்பம் ஏற்படும். குறுக்கு வழித்தலையீடு சட்டத்தில் மாட்டிவைக்கும். திடசித்தம் இருப்பின் எதையும் சமாளிப்பீர். இன்னலின பின்னல் உங்களின் முன்னேற்றத்தைத் தடுக்கும. வீரமாகாளியம்மனை வழிபடவும்

## தனுசு

குடும்பத்திலும் மகிழ்ச்சிக்கு இடமுண்டு தீயசக்திகள் பல வழிகளிலும் உங்களை வீழ்த்தப் பார்க்கும். விழிப்புடன் செயற்படவும். கைத்தொழில் புரிவோருக்கு நல்ல வருவாய் உண்டு. உடல்நலமும் பாதிக்கப்படலாம். சிறிவரும்கோபம் மோதல்களை ஏற்படுத்தும். பொறுமை வேண்டும். சுப்பிரமணியரை வழிபடவும்.

## மகரம்

தாய்வழிப் பெருமையும் அவ்வழி இலாபமும் ஏற்படும். உயர்கல்விகளும் இடம்பெறும். சிந்தையில் தடுமாற்றம் ஏற்படலாம். சுகாதாரம் வேண்டும். நீண்டநாள் பிணி நீங்க இடமுண்டு. அவசரப்போக்கையும் ஆத்திர உணர்ச்சியையும் தவிர்க்கவும் தட்சணாமூர்த்திப் பெருமானை வழிபடவும்.

## கும்பம்

வெளியிடத் தொடர்புகள் சிறப்பைத்தரலாம் படித்தவர்களால் பயன்கிட்டும். சகோதரர்களால் தொல்லை அதிகரிக்கும். பிரயாணங்களை தவிர்ப்பது நன்று. பேச்சாளர்களும் வீரம் காட்டுவர்! புகழும் ஈட்டுவர். எப்பக்கம் திரும்பினும் ஆதரவு கொடுக்க அன்பர்கள் முன்வருவார்கள். சுப்பிரமணியப்பெருமானை வழிபடவும்.

## மீனம்

பந்தபாசம் உங்களைப் பரவசப்படுத்தும், இளையோர் கசப்பர். பகைமூட்டம் தோன்றும். பதட்டமும் உடன் சேரும், குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். புதிய பொருள்களை கொள்வனவு செய்வதற்கு நன்று மிகையான போக்கு கசப்பாக இருக்கும். சனீஸ்வரப் பெருமானை வழிபடவும்.

**திருமலை.க.வே.ரவீந்திரன்**



# சாதனைக்காய் வாழ்ந்தான் சாதனையில் சாய்ந்தான்

நடைதனிலே சாதனைகள் நன்றாய் செய்தீர்
நடுக்கடலில் வெற்றிகள் நல்லாய் செய்தீர்
இடைவேளை தானுமின்றி ஒற்றைக் காலில்
இரவுபகல் நின்றதையும் ''இமயம் உச்சியை''
அடைந்ததையும் மூன்று நாள் அடுத்து அடுக்காய்
அவை நிகழ்ச்சி தன்னிலே அங்கம் வகுத்து
படைத்தளித்த வெற்றிகளை பாரில் கண்டோம்
பரிசெடுத்த ஆனந்தனை அறியுமே ஞாலம்

பாஷையூர் தேவதாசன்

★

ஓ...
ஆங்கிலக்
கால்வாயே...
''இங்கு
என்னைத்தழுவிய
வீரன் ஆனந்தன்
அங்கு—
உன்னைத் தழுவ
இடங்கொடாதே''
என்று பாக்கு நீரிணை
வேண்டுகோள்
விடுத்ததோ
அதன் முடிவுதான்
பயங்கரமோ?

— நயினை-குலம்

★

ஆழ்ந்துவிட்டானும்
ஆனந்தன்
அப்பட்டமான பொய்
ஆடிக் களைத்த களைப்பாம்
இல்லை...களிப்பு!
கங்கையொன்று
கங்கை யிலே
ஆழ்ந்திடுமா?
ஆழியொன்று
ஆழியிலே
ஆழ்ந்திடுமா?
ஆழியதன் அமைதியிலே
அலையோசைத்
தாலாட்டில்
அயர்ந்து உறங்கி
விட்டான்
ஆழிக்குமரன் ஆனந்தன்!

— ந- குமரகுருபரன்

ஆங்கிலக், கால்வா யன்னை யுனைக் குளிப்பாட்டி
ஆடை அணிவித்து ஆலங்கரிகக அழைத்தாளோ தன்
அங்கனுமம் ஆழிதனில் ஆசையுடன நீராட்டி - நீள்
அலை நடுவே ஆரத்தி அமுதுண்ணத் தந்தாளோ-வீர
சிங்க முனைச் சீராட்டி சீர்கல்வி தானூட்டிச்
சிறப்பிக்க வோதானே சீக்கிரமா யழைத்திட்டாள் ?
தங்க நிகர் தனயன் உனைத் தன் மடியில் கிடத்திவிட்டு
தாலாட்டுப் பாடிடவோ நீயுறங்க லானாயோ?

இரா-இராஜேஸ்வரன்

பாங்குடன் இருமுறை நீந்தி பாக்குநீரிணை கடந்தவன்
பாரிலே சிறநத வீரனாய்ப் பலரும்புகழ நடந்தனன்
ஓங்கலென மிகவுயர்ந்த ஓங்குபுகழ் அடைந்திடவே
ஒப்பரிய சாதனையை சீதளசீமையிலே செய்ய
நினைந்தனன்
ஆங்கிலக் கால்வாயை ஆருமிதுவரையில் நான்குமுறை
கடந்ததில்லை
அஞ்சாத அசற்றமிழன் ஆனந்தன் அதற்கும்
துணிந்தனன்
தேங்கிய ஆசைமனம் தேக்கமனவுறுதி தேகமோ
உடைந்தலை
தீந்தமிழன் நினைத்ததொன்று தமிழுலகம் தேம்ப
நிகழ்ந்ததொன்று !

இயற்கையின் பொதுநிகழ்வு இறப்புஎன இனிதறிவோம்
இறப்பவர் பிறப்பதில்லை எனிற்சிலரை இவ்வுலகு
மறப்பதில்லை
வியத்தகு வோர்சாதனையை விளைக்கின்ற காலையிற்றான்
வித்தகன் 'சாதனைவேந்தன்' சாதலில்(?) வீழ்தலுற்றான்
மயக்கிடும் வேளைவரையில் மண்ணவர் மதிக்கும் நல்ல
மாசிலாச் சாதனைதனையே மனத்திலே கொண்ட மன்னன்
வியத்தகு சாதனையேட்டில் அதிகசாதனை பதித்தோர்
சாதனைமுடித்தான்
சாதனைப்பணியில் காய்ந்து சாகாது வாழ்ந்துமோர்
சாதனைபடைத்தான் !

கனக- மனோகரன்


சுபீட்சத்திற்கு ஒரு வழிகாட்டி

ஷப்ரு

''ஷப்ரு''வின் உழைக்கும்போதே சேமிக்கும் திட்டத்தில்
இன்றே சேருங்கள்
உங்கள் வாழ்க்கைக்கு ஒளியூட்ட ''ஷப்ரு''வின்
உதவியை நாடுங்கள்

SHABRA

Unico Finance Limited.

61, நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு – 4.
தொலைபேசி இல: 589310.

207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 22073.



ஹாபர் வியூ ஹோட்டல்

காங்கேசன்துறை

எமது ஹோட்டல் பாதுகாப்பு அமைச்சினால் கையேற்கப்பட்டுள்ளமையால், வழமையான பொது நடவடிக்கைகளுக்கு மூடப்பட்டிருக்குமென்பதை எமது வாடிக்கையாளர் அனைவருக்கும் இத்தால் அறியத்தருகிறோம்.

எமது வார இறுதி உணவு பொட்டலங்கள், BUFFET மதிய உணவு, மற்றும் BAR - BE - QUE இரவு உணவு யாவும் நிறுத்தப்பட்டுள்ளன.

முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அறை வசதிகள் மற்றும் பணிகளை இறுதி நேரத்தில் ரத்து செய்ய நேர்ந்தமைக்கும் அதனால் ஏற்பட்ட வசதியீனங்களுக்கும் எமது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். சகல வைப்புப் பணங்களும் மீளளிக்கப்படும்.

முகாமையாளர்.

விளையாட்டு

# இலங்கையின் கிரிக்கெட் போட்டிகள்

அவுஸ்திரேலியா, மேற்கு இந்திய தீவுகள் ஆகிய இரண்டு அணிகளுடனும் அடைந்த படு தோல்விக்கு, பிறகு இலங்கையுடன் இங்கிலாந்துஅணி சென்ற கிழமைலோட்ஸ்மைதானத்தில் முதல் Test போட்டி தொடரை ஆரம்பித்தது. இந்த போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தாலும் இலங்கைக்குத் தான் வெற்றி என்று சொல்லுமளவிற்கு மிகவும் திறமையாக இலங்கை அணி வீரர்கள் ஆடியிருந்தனர்.

1980-ம் ஆண்டில் முதல் முதல் Test அந்தஸ்து பெற்ற இலங்கை அணிக்கு அவ் அந்தஸ்தை பெற உதவியளித்தது 1979ம் ஆண்டுஉலகக் கிண்ணப் போட்டிதான் என்று சொன்னால் மிகையாகாது. 979-ம் ஆண்டு வெங்கட்ராமன் தலைமையிலான இந்திய அணியை இலங்கை அணி தோல்வியுறச் செய்தது எதிர்பாராத நிகழ்ச்சியாக அமைந்திருந்தது. Test

## ★ எஸ். கணேசலிங்கம்

அந்தஸ்து கிடைத்த பின் கொழும்பு சரவணமுத்து விளையாட்டரங்கில் இங்கிலாந்து அணிக்கெதிராக தன் Test போட்டியை இலங்கை அணி ஆரம்பித்தது இப்போட்டியில் முதல் இனிங்ஸில் எவரும் எதிர்பாராத அளவு ஆடி வெற்றி வாய்ப்பை தழுவும் நிலையிலே இருந்த போதும், இரண்டாம் இனிங்ஸில் அதைக் கோட்டை விட்டு இரசிகர்களின் பெருத்த ஏமாற்றத்தைபெற்றுக்கொண்டது. இந்தபோட்டியில் அசந்த டிமெல் மிகவும் சிறப்பாக பந்து வீசியிருந்தார் அன்றைய பரிசளிப்புவைபவத்தில் பேசிய அப்போதைய இங்கிலாந்து அணி தலைவர் இலங்கை அணி மிகவும் தன்னம்பிக்கையான துடுப்படி வீரர்களை கொண்டுள்ளது. அதை தோற்கடிப்பது இலகுவான காரியமல்ல நாங்களும் இலகுவாக இந்த வெற்றியை பெறவில்லை'' என்றார். அதைத் தொடர்ந்து இலங்கை அணி சிம்பாப்வே, நியூஸிலாந்து ஆகிய நாடுகளுக்கு சென்று அங்கு படு தோல்வியையே சந்தித்தது. அத்தோடு உலக கிறிசாற் அவதானிகள் மத்தியிலும் 'இலங்கை அணிக்கு மட்டுப் படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளை தவிர அங்கீகரிக்கப்பட்ட Test போட்டிகளில் ஆட அனுபவம் போதாது' என்ற ஒரு தவறான அபிப்பிராயம் ஏற்பட்டுகொண்டே வந்தது. இப்படியான கருத்து ஏற்படுவதற்கு சில காரணங்கள் இருக்கத்தான் செய்தன. இலங்கை அணி அதன் பின் பாகிஸ்தானிலும்சரி வேறுசென்றஇடங்களிலெல்லாம் தோல்வியை தழுவிக் கொண்டது. ஒரு முக்கிய காரணமாக இருந்தாலும், உள்ளூர ஒரு காரணமும் இருக்கத்தான் செய்தது முதல் முதல் இலங்கை அணி Test அந்தஸ்தை பெற்று ஆடிய போது தலைமை பதவி வகித்த பந்துலவர்ணபுரவும் மிகத் திறமையான ஆட்டக்காரர்கள் வேறு பலரும் சேர்ந்து தென்னாபிரிக்காவில் போட்டிகளில் பங்குபற்ற சென்றது. விளையாட்டுத்துறையில் சர்வதேச அதிகாரம் இரத்து செய்யப்பட்ட தென்னாபிரிக்காவிற்கு இலங்கை கிறிகெற் கட்டுப்பாட்டு சபையின் அதிகாரத்தைப்பெறுமல் அவர்கள் சென்றதால் இவர்கள் தொடர்ந்து Test போட்டிகளில் பங்குபற்றும் சந்தர்ப்பத்தை இலங்கை கிறிக்கற் கட்டுப்பாட்டு சபை நிராகரித்துவிட்டது இதனுல் இலங்கை அணியில் பலம் திடீரென சிறிது குறைக்கப்பட்டது அதன் தொடர்ந்த தோல்விகளுக்கு ஒரு காரணமாகும்.

### சிதம்பரத்தில்

இந்தியாவுக்கு சுற்றுபயணம் மேற்கொண்ட இலங்கை அணி சென்னை சேபாக்கம் சிதம்பர விளையாட்டரங்கில் சுனில் கவஸ்கர் தலைமையிலான இந்திய அணியை மிகத் திறமையாக யாரும் எதிர்பார்க்காத அளவுக்கு எதிர்த்து விளையாடியது, இப்போட்டியில் இலங்கை அணித்தலைவர் டிலிப்மென்டிஸ் ''Follow செஞ்சரி என்று அழைக்கப்படும்'' இரண்டு இனிங்ஸிலும் 100 க்கு மேல் அடித்து இரண்டு செஞ்சரிகளை போட்டு உலக கிறிகற் புத்தகத்தில் தன் பெயரை சாதனை வரிசையில் சேர்த்து கொண்டார். இவர் இரண்டு இனிங்ஸிலும் 101, 10 , அடித்திருந்தது பலருக்கு நினைவிருக்கலாம். இதில் ஆச்சரியப்படக் கூடிய நிகழ்ச்சி என்னவெனில் அவர் 2nd இனிங்ஸில் 95 Runs என்ற நிலைமையில் இருந்தபோது ஒரு சிக்ஸறை [Sixsar] அடித்து 101 என்ற தனது செஞ்சரியை பெற்றுகொண்டது. இரசிகர்களின் ஆச்சரியத்தை கிளறியது என்றுதான் சொல்ல வேண்டும். தலைவர் டிலிப் மென்டிஸின் தன்னம்பிக்கையான அந்த Sixsar ஐ Sithamparam Stadiam மிகவும் வியப்புக் குறியுடன் கூடிய ஒரு சந்தோஷமான கரகோஷத்துடன் வரவேற்றுக் கொண்டது. இப்படியான தன்னம்பிக்கையான செயல்களை உலகப் புகழ் பெற்ற பொன் பார்மன், சோபஸ், சப்பல் போன்ற வீரர்களிடமே எதிர்பார்த்த இரசிகர் கூட்டம் டிலிப்மென்டிஸை வியப்புடன் நோக்கியது. இதனுல் இலங்கை அணியின் கௌரவமும் ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவரப்பட்டது. இப்போட்டியில் வெற்றி தோல்வி அற்ற நிலைதான் தோன்றிலுைம். கிறிகெட் அவதானிகளின் மத்தியில் ஏற்பட்டிருந்த இலங்கை அணி பற்றிய ஒரு தவறான அபிப்பிராயம் விலகத் தொடங்கியது

983ம் ஆண்டு நடைறும் உலகக் கிண்ண போட்டிக்காக விஷேட பயிற்சியை இலங்கை அணி பெறுவதற்கு முன்னுள் உலகப் புகழ்வீரர் சோபஸ் வரவழைக்கப்பட்டார். ஒரு பத்திரிகையில் இலங்கை அணியைப் பற்றி திரு சோபஸ்பேட்டியளிக்கையில்கூறினுர் 1983ம் ஆண்டுக்கான உலக கிண்ணப் போட்டியில் கால் இறுதியாட்டத்திற்குநிச்சயமாக இலங்கை அணி தெரிவு செய்யப்படும் மிகவும் திறமையான துடுப்பாட்டக்காரர்களை கொண்டுள்ள இவ்வணியில் திரு அருச்சுனு ரணதுங்காவின் ஆட்டத்தில் எனக்கு நல்ல நம்பிக்கை இருக்கிறது என்று கூறியிருந்தார்.

இப்படி அவர் இலங்கை அணியைப் பற்றி பேட்டிக் கொடுத்ததற்கு ஒருமுக்கிய காரணம் இருக்கத்தான் செய்தது. இச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த அவுஸ்திரேலியா அணியுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் போட்டிகளில் இலங்கை அணி மிகவும் திறமையாக ஆடி சில வெற்றிகளை பெற்றுக் கொண்டதுதான் அவரின் அந்த கூற்றுக்கு காரணமாக இருந்திருக்கலாம். ஆனுல் டிலிப்மென்டிஸ் தலைமையிலான இலங்கை அணி சோபஸ்ஸின் அந்த கூற்றை தவிடுபொடியாக்கி விட்டது இவ்வுலகக் கிண்ணப் போட்டி தொடரில் இலங்கை அணியின் ஒரேயொரு வெற்றியைதான் பெற முடிந்தது. இது மிகவும் கவலையான ஒரு நிகழ்ச்சியாக இலங்கை கிறிகற் இரசிகர்களுக்கு அமைந்துவிட்டது.

### லோட்ஸ் டெஸ்ட்

சென்ற கிழமை அணியை அவர்களின் லோட்ஸ் மைதானத்தில் இலங்கை அணியினர் மிகச் சிறப்பாக யாரும் எதிர்பாராத வகையில் சந்தித்திருக்கிறுர்கள் முதல் இனிங்ஸில் விஞேதன் ஜோனின் பந்து வீச்சும் மிகவும் திறமையாக அமைந்திருந்ததுசிதாத்வெற்றிமுனியின் 190 Runs கள் அவரின் நிதானத்தையும் இலங்கை அணியின் தரத்தையும் உயர்த்துவதாக அமைந்திருந்தது. அருச்சுனு ரணதுங்காவின் 84 Runs கள் மிகவேகமாக எடுக்கப்பட்டு இரசிகர்களின் பாராட்டை பெற்றிருந்தது இதைத் தொடர்ந்து தலைவர் டிலிப்மென்டிஸின் 111 என்ற எண்ணிக்கையுடன் கூடியசெஞ்சரி இலங்கை அணிக்கு மகுடம் வைத்தால்போல் விளங்கியது

இவ்வாட்டத்தின் (Man of the match) சிறப்பு ஆட்டக்காரருக்கான விருது சிதாத் வெற்றிமுனிக்கு கிடைத்தது. இந்த போட்டி தொடரில் இனி வரும் போட்டிகளிலும் இலங்கை அணி சிறப்பாக ஆடும் என்பதில் கொஞ்சமும் ஐயமில்லை. 1983ம் ஆண்டு உலகக்கிண்ணத்திற்கு பங்குபற்ற இருந்த அப்போதைய பாகிஸ்தான் அணி தலைவர் அம்றுன்கான் அப்போது இலங்கை அணியைப் பற்றி ஒரு பேட்டியில் கூறினுர், இலங்கை அணி ஒரு குழந்தை அது இப்போதுதான் Test அந்தஸ்துபெற்றிருக்கிறது அது வளர்ச்சியடைய நிறைய காலம் தேவைப்படும். என்று கூறியிருந்தார். ஆனுல் இன்று அதே பாகிஸ்தான் அணியினர் பார்த்து பயப்படும் அளவிற்கு இலங்கை அணி அனுபவத்தில் முன்னிற்கிறது. இங்கிலாந்துடனுன இனிவரும் போட்டி தொடர்களில் இங்கிலாந்து அணியினர் தோல்வியை தழுவிக் கொண்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

# யாழ்ப்பாணத்தில் கலாயோகி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உரியவகையில் மொழி அபிவிருத்தி உண்டாகவில்லை. மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் மாத்திரம் அபிமானம் உண்டாகுமா? எங்கள் தேசீயம் அபிவிருத்தியடைதல் வேண்டும் இதற்கு எங்கள்பாடசாலையிலேதான் பணியை ஆரம்பித்தல் வேண்டும். பிள்ளைகளை மனிதராக்குவதில் நம்பணி சிறத்தல் வேண்டும். பிள்ளைகளுக்கு தேசிய முறையிற் கல்வி புகட்டுவதோடு பெண்கல்வியும் முக்கியமாதல்வேண்டும். சிலப்பதிகாரம் மணிமேகலை ஆகிய காப்பியங்களில் மகளிர்மாண்பு பேசப்படுகின்றது மங்கையர் கல்விகற்று மாண்புடன் இருந்தால்தான் மனை அறம் சிறக்கவும் எங்கள் பாரம் பரியமும் பண்பாடும் மாறுமல் அமையவும் உறுதியாகும்.

### எமது இசைக்கலையை வளர்க்கவும்

மைசூர் மாநிலத்து பார்ப்பனப் பெண்கள் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பட்டங்கள் பெறுகிறுர்கள். அவர்கள் திருமணத்துக்குப் பின்னரும் தொடர்ந்து படிக்கும் வழக்கம் உள்ளவர். எங்கள் பெண்கள் வெறும் பாவைப்பிள்ளைகளாதலாகாது. அவர்கள் வெள்ளைக்காரிகளாகவும் ஆகாது. அவர்கள் தமிழ்ப்பெண்களாதல் வேண்டும், எங்கள் பாரம்பரியத்தில் பயிற்சி பெறுதல் வேண்டும். வீணையில் பயிற்சி பெறுதல் வேண்டும் பியானுே போன்றபறங்கிவாத்தியத்தால் எமக்குபயனில்லைநேற்று சங்கீத விற்பனர் ஒருவரை என்னிடம் அழைத்துவந்தார்கள். அவர் நான்குமுறை ஆங்கிலச் சங்கீதத்தை ஆரம்பித்தார். ஆனுல் அவர் தமிழிசையை அறிந்திருக்கவில்லை. ஆங்கிலச் சங்கீதத்தை நன்றாக அறிந்திருந்த நான் அதைப்பற்றிக் குறைசொல்ல விரும்பவில்லை

(15ம் பக்கம் பார்க்க

# நம்பிக்கைக்குரிய

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தைக்''கறுவாகாட்டுத்தமிழர்'' என்று கூறி வேறுகண்ணுேட்டத்திலேயே கணித்து வந்தன.

1967ஆம் ஆண்டு மே மாதம் 31ம் நாள் திரு அமிர்தலிங்கம் திரு. வே. நவரத்தினம் திரு க. பொ இரத்தினம் திரு. க. துரைரத்தினம் ஆகியோர்மீது தனித்தமிழ் ஈழத்தை அமைக்கக்கோரும் துண்டுப்பிரசுரங்களை வைத்திருந்ததாகவும் மக்களுக்கு வழங்கியதற்காகவும் பிறவுக்காகவும் குற்றம் சாட்டப்பட்டது. மேல் நீதிபதிகள் மூவரின் முன்னிலையில் ஜூரியார் இல்லாத ட்ரயல் அட்பார்' முறையில் வழக்கு விசாரிக்கப்பட்டது. 1976 ஆம் ஆண்டு செப்ரம்பர் பத்தாம் நாள் இவ்வழக்கில் தீர்ப்புவழங்கப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மேல் நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய 'ட்ரயல் அட்பார்' முறையில் நீதிமன்றம் அமைக்கப்பட ஏதுவான அவசரகால விதிகள் செல்லுபடியற்றவை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

இவ்வழக்கில் திரு திருச்செல்வம் கியூ ஸி. பெரும் பங்குவகித்தார் இந்நேரத்தில் தான் இவரது பெருமையை இளவட்டங்களும் தெரிந்து கொண்டன.

[மிகுதி அடுத்தவாரம்]

T. C. C. குளியலறைத் தளக்கற்கள்
BATHROOM FLOOR TILES
உற்பத்தியாளர்களும் விநியோகஸ்தர்களும்
ரெருசோ மாபிள் நிலம்
அமைப்பவர்கள்
SPECIALIST IN TERRAZZO FLOORING
மின்சார வசதிஅற்ற இடங்களிலும்
ரெருசோ நிலம் அமைத்துக் கொடுக்கப்படும்
த ரெருசோ கொன்ருக்ரேஸ் அன் கொன்சல்ரன்ஸ்
தலைமை அலுவலகம் :- 69, சங்கிலியன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
64, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (சட்டநாதர் சிவன்கோவில் அண்மை)

யாழ். வாசிகளுக்கு ஓர் வரப்பிரசாதம்
தீயணைக்கும் கருவிகள்
(FIRE EXTINGUISHERS)
★ உங்கள் தொழிற்சாலைகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும், இல்லங்களுக்கும் அவசியமும் சட்டத்திற்கு அமையவும் தேவையான உபகரணம்:
★ வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுள்ள அதிசக்திவாய்ந்த கையாளுவதற்கு இலகுவான கருவிகள்:
★ உங்கள் தேவைகளுக்கேற்ற மொடல்கள் உள்ளன:
★ விற்பனைக்கு பின் எம்மால் பராமரிப்பு செய்யப்படும்:
விலை—ரூ. 750/- தொடக்கம் ரூ. 1250/- வரை
சிலோன் மேர்ச்சன்ஸ் லிமிற்.
484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 22134

நம்பிக்கையான நவநாகரிக தங்க வைர நகைகள் வேண்டுமா?
பொ. அம்பலவாணர்
தங்க, வைர நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன் : 23199 தந்தி : 'வைரம்'

# 'குவலயத்தின் விழிபோன்ற யாழ்ப்பாணத்தான்'

யாழ்ப்பாணத்துச் சுவாமிகளைப் புதுவையில் 1914ம் ஆண்டளவில் மகாகவி பாரதியார் சந்தித்ததும் தமது ஞான குருவாக ஏற்றுக்கொண்டார். பாரதியார் பாடுகிறார்:


## பி.எஸ். செட்டியார்

''யாழ்ப்பாணத்தான்
தேவிபதம் மறவாத
மூர்த்தியாவான்
பாவியரைக் கரையேற்றும்
ஞானத்தோணி
பரம பத வாயிலெனும்
பார்வையாளன்''

நயனதீட்சை பெற்ற பாரதி தான் சிவனென்று போற்றி வரும் யாழ்ப்பாணத்துச் சுவாமியை சரண் அடைந்தால் முத்தி நிச்சயமென்று அழுத்திக் கூறுகிறார்.

யானையின் கண்கள் சிறியன; அதன் மூலம் பார்க்கும் பொருட்கள் யாவும் பெரியனவாகத்தோன்றும். அஃதே போன்று குவலயத்தின் கண்களான யாழ்ப்பாணத்தான்,

(16ம் பக்கம் பார்க்க)



1958ம் ஆண்டு ஜனவரி 1ம் திகதி அமெரிக்க கடற்படை ''ஸ்கைமாஸ்டர்'' ராட்சத விமானம் ஒன்று யாழ்ப்பாண வெள்ள அகதிகளை ஏற்றிக்கொண்டு கொழும்புக்குப் பறந்து செல்கிறது கம்பியைப்பிடித்துக் கோண்டு நிற்பவர் இக்கட்டுரையாளர் பி. எஸ். செட்டியார். கருணைப்பணியில் (Mission of Merey) ஈடுபட்டு விரைந்துவரும் ''பிரின்ஸ்டன்'' அமெரிக்ககடற்படைக் கப்பலை சாளரம் ஊடாகக்கண்டுகளிக்கிறார்கள் பிரயாணிகள்.

பி. எஸ். செட்டியார் அவர்கள் சில தினங்களின் முன்பு அமெரிக்காவில் திடீர் மரணமெய்திய செய்தி ஈழநாடு வாசகர் அறிந்ததே. பத்திரிகையாளரான செட்டியார் அவர்கள் அமெரிக்காவிலிருந்து யாழ்ப்பாணம் வந்து சில மாதங்கள் தங்கியிருந்த போது 'ஈழநாடு'க்கு விஷயதானங்கள் உபகரித்திருந்தவர். வாரமலருக்கு அவர் தொடர் கட்டுரை எழுதுவதாக உறுதியளித்து முதலாவது கட்டுரையைத் தந்து சென்றார். துரதிஷ்டவசமாக அவர் திடீர் மரணமெய்தி விட்டார். யாழ்ப்பாணத்தின் தொல்பெருமை பற்றியும் யாழ்ப்பாணத் தவனின் திறமைகள் பற்றியும் விபரிக்க விரும்பிய செட்டியார் அவர்கள் மக கவி பாரதியார் கண்ட யாழ்ப்பாணத்துச் சுவாமிகளை முதலாகக் கொண்டு தமது கட்டுரையை ஆரம்பித்தார். எனினும் முதற் கட்டுரையுடனேயே முயற்சி முற்றுப் பெறுவதாயிற்று.

எதிர்வரும் 11ம் திகதி பாரதியார் தினமாகும். இக்கட்டுரையின் மூலம் பாரதியாரையும் செட்டியார் அவர்களையும் இங்கு நாம் நினைவு கூர்வோம்.

''ஜகத்தினிலோ ருவமையிலா
யாழ்ப்பாணத்து
சுவாமிதனை யிவனென்றன்
(குவளைக்கண்ணன் சுவாமிகள்)
மனைக்கொணர்ந்தான்
அகத்தினிலே யவன்பாத
மலரைப் பூண்டேன்
அன்றே யப்போதே
வீடதுவே வீடு''

திரஞானி சிதம்பரத்து நடராஜ

## யாழ்ப்பாணத்தில்.

(14ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல் எங்கள் தமிழிசையின் பெருமையை நான் பாராட்டுகிறேன். உங்களை நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வது ஒன்றுஉண்டு. எங்கள் இசைக்கலையை வளருங்கள்.

உங்களிடம் நான் கூறுவது மற்றுமொன்று உண்டு. மேல்நாட்டுக் கல்வித்துறையில் மனத்தை ஒருவழிப்படுத்தி நினைவாற்றலை அதிகரிக்கச் செய்து மனோதத்துவத்தை விசாலித்துக் கொள்வதற்கான யோகக்கலை என்பது இடம் பெறுவதில்லை?

மேல்நாட்டுக்கல்வி முறை உயர்ந்தாக இருக்கலாம். ஆனல் அது மேல்வாரியாக பாடங்களைப் படிக்க வைக்கிறதும் குறிப்புக்களை மனனஞ் செய்யத் தூண்டுவதுமாகும் ஆனல் மூளையை விருத்தி செய்வதற்கு எம் மூதாதையர் வகுத்த கல்வித்திட்டமே மேலானது என்று கூறின் மிகையாகாது நினைவாற்றல் எமக்கு வேண்டியதாகும். நினைவாற்றல் இல்லாவிடத்து ஒன்றை அறிந்துகொள்ள இயலாது. ஒன்றை அறிந்துகொள்ள இயலாததால் நம் ஒரு மனிதனையே இழந்து விடுகின்றோம் என்று கீதை கூறுகிறது

கல்வியைப் பற்றிக்கூறி முடிப்பதற்கு முன் இன்னுமொரு அம்சத்தைக் கூறுதல் வேண்டும். அது எங்களுக்கு சிங்கள மொழியும், தமிழ்மொழியும் பயிலஇடமளிக்காத அரசாங்கப் பாடசாலைகளாலும், உபயோகமில்லை என்பேன இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தில தமிழுக்கும் இடமுண்டு. தமிழராகிய எமக்கு அக்கல்வி நிலைய ஒரு வரப்பிரசாதம் போல் இருக்கிறது.

எமது பல்கலைக்கழகம் ஒன்று வேண்டும் ஆனல் ... உள்ள ... அடைய ... நன் விரும் ... தமிழருக்குச்சென்னைப் பல்கலைக்கழகப் அமைவது அந்த அமைப்பில் பல்கலைக்கழகத்தை அமைத்துக்கொள்ளலாம் நாம் சுதேசி இயக்கத்தை ஆரம்பித்து நாட்டுப் பொருள்களுக்கு மதிப்புக் கொடுத்தல வேண்டும்''


வின்சர் (யாழ். நகர்)
தினசரி 10-30. 2-30, 6-15
பாலையா-முத்துராமன்
ராஜஸ்ரீ
பாமா விஜயம்
[முழுநீள ஹாஸ்யசித்திரம்]

Shanthi (JAFFNA)
Daily 10-30, 2-30 and 4-45
MOVING VIOLATION
(Color)
(Action Thrilling Suspense)

மனோகரா (யாழ் நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15,
ஜெய்சங்கர்-ஜெயலலிதா
நாகேஸ்
முத்துச்சிப்பி
(புதிய பிரதி)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
Robert Shaw.
FORCE 10 FROM NAVARONE
(War Film)

Rajah Jaffna
Daily 10-30, 2-00, 4-30
Richard Gere
Lauren Hutton
AMERICAN GIGOLO
(Adults only) (Action)
(color)
நாளை முதல்
நீதிதேவன்

ஹரன் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-15, 6-15
முத்துராமன் - ஸ்ரீவித்யா
காலங்களில் அவள் வசந்தம்
நாளை
எடுப்பார் கைப்பிள்ளை

லிடோ யாழ். நகர்
தினசரி 10-30,, 2-30
ஆயிரம்வாசல் இதயம்

வெலிங்டன்
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15,
4-15, 6-30
Antonny Quinn
Jacquline Bisset in
THE GREEK TYCOON
(Cinemascope-Color)

போயா தினத்தை யொட்டி இன்று சினிமாக்காட்சிகள் இல்லை

கலர் பிலிம் சுருள்களை Processing & Printing, 24 படங்களுக்குக் குறையாது செய்து கொண்டால், ஒரு கலர் பிலிம் சுருள் இனமாக வழங்கப்படும், Processing ரூபா 30/- Printing. P.C ஒருபிரதி ரூபா 6.50,
கொழும்பு ஸ்ருடியோ


## நயினாதீவு ஸ்ரீநாகபூஷணியம்மன் கோவில்

# பதவி வெற்றிடம்

1. கணக்காளர்.

(அ) கல்வித் தகைமைகளும், அனுபவமும்:-

க. பொ. த. ப. (உயர்தரப்) பரீட்சையில் வர்த்தகமும் நிதியும், கணக்கியல், பொருளியல், தூயகணிதம், பிரயோககணிதம் ஆகிய பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களுட்பட நான்கு பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் குறைந்தது நான்குவருட தொழில் அநுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

மேற்குறித்த கல்வித் தகைமைக்கு மேலான ஏதேனும் கல்வித் தகைமையுடன் இரண்டு வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

க.பொ.த. (சாதாரணம்) பரீட்சையில் தமிழ்மொழி, எண்கணிதம் / தூயகணிதம் / வர்த்தக எண்கணிதம் ஆகிய பாடங்களிலும் வேறு ஏதேனும் மூன்று பாடங்களிலும் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருப்பதோடு குறைந்தபட்சம் பத்துவருட தொழில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஆ) **வயது:**
விண்ணப்ப முடிவு தேதியன்று இருபத்தைந்து வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல்வேண்டும்.

(இ) **சம்பள விபரம்:**
800—20X20—1200 (சகல படிகளும் உட்பட)

(ஈ) **முக்கிய கவனிப்பு:**
சைவ சமயிகளுக்கும் ஆங்கில மொழி அறிவு, அனுபவம் ஆகியன உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். கோவில் சூழலில் வசிப்பவராக இருத்தல்வேண்டும்.

(உ) **பிணைப்பணம்:-**
தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் ரூபா ஐயாயிரம் காசாகவும் பதினையாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த ஆதனத்தையும் பிணைதரத் தயாராக இருத்தல்வேண்டும். அறங்காவலர் சபையினர் தீர்மானிக்கும் வீதப்படி காசுப்பிணைக்கு வட்டி வழங்கப்படும்.

(ஊ) **விண்ணப்பிக்கும் முறை:-**
விண்ணப்பங்கள் யாவும் கோவில் அலுவலகத்தில் நேரிலும் தபால் மூலமாகவும் பெறக்கூடிய விண்ணப்பப் படிவங்களில் தயாரிக்கப்பட்டு 30-9-84 அன்று அல்லது அதற்குமுன் பிந்தாமல் கிடைக்கத்தக்கதாக பதிவுத்தபாலில் எனக்கு அனுப்பப்படவேண்டும். அறங்காவலர்சபை நியமிக்கும் நேர்முகப் பரீட்சை முடிவே இறுதியானது.

தி. க. மகாலிங்கசிவம் ஜே. பி.,
செயலாளர்,
அறங்காவலர் சபை,

05-09-1984 1619

# ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
## வி. ம. கண்ணையா
(மாகோ. ஸ்ரோர்ஸ்)
யாழ்ப்பாணம்

மலர்வு: 12-12-1907
உதிர்வு: 23-8-1983

ஆலமரமாய் அனைவருக்கும் நிழலாக அவனியில் பணிவந்து அவனடி நிழலைத்தேடி அமருலகம் சென்ற எங்கள் அன்புத்தெய்வமே உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம் அன்புடன் நினைவு கூரும்:-

அருமை மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

44/4, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம். 1644

வீமன்காமம் கிணறொன்றில் [redacted]

# உயிர் பிரிந்த நிலையில் தாயும் 3 பிள்ளைகளும்!

## தாங்காத கணவன் நஞ்சருந்தினுர்!!

[மாவிட்டபுரம்]

உயிர் பிரிந்த நிலையில் ஒரு தாயும், பிள்ளைகள் மூவரும் கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட சோக சம்பவம் ஒன்று மாவிட்டபுரத்தையடுத்த வீமன்காமத்தில் நடைபெற்றுள்ளது.

மாவிட்டபுரத்தை அடுத்த வீமன்காமத்தைச் சேர்ந்த கமலா சிவலிங்கம் என்னும் 30 வயது மதிக்கத்தக்க பெண்ணும், அவரது மூன்று பிள்ளைகளும் இவரது வீட்டுக்கருகிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டனர்.

இரவில் இருந்து இவர்களைக் காணுததால் கணவர் இவர்களைத் தேடியதாகவும், பின் நேற்று காலை அருகில் உள்ள கிணற்றில் கிடக்கக் கண்டு அயலவர் உதவியுடன் வெளியில்கொண்டு வரப்பட்டதாகவும் இதைப் பார்த்த கணவன் கவலையால் நஞ்சருந்தி தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. இச்சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## நுணுவிலில் உணவு போஷாக்கு குழு

(மட்டுவில்)

மட்டுவில் நுணுவில் பகுதிக்கென புதியதொரு உணவு போஷக்கு குழுவை இப்பகுதி விசேட சேவை அலுவலர் திரு.பொ. திருநாவுக்கரசு இன்று அங்குரார்ப்பணம் செய்து வைத்தார். இக் குழுவின் புதிய உத்தியோகத்தர்களாக கீழ்க்காணபோர்தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஆசிரியர் திரு.த. கனகலிங்கம் உப தலைவர் திரு. ந.குணவீரசிங்கம், செயலாளர் திரு.எஸ்.எம். அருளம்பலம் உப செயலாளர் திரு. த.சின்னத்துரை பொருளாளர் ஆசிரியர் திரு.க.இளையதம்பி மேலும் . நால்வர் கொண்ட நிர்வாக குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## பனைவள கருத்தரங்கு

]மட்டுவில்]

பனைவள அபிவிருத்தி பற்றிய ஒருநாள் கருத்தரங்கும், பரிசு வழங்கும் வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தில், சாவகச்சேரி பல நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர் திரு. எஸ். வி. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெறும்.

தொழிலதிபர் திரு. க. கனகராஜா, கூட்டுறவு ஆக்கஉதவி ஆணையாளர் ஜனுப் எம். ஸி. எம். இக்பால், பனைவள அபிவிருத்தி சபை தலைவர் திரு. கே. நடராஜா, திரு. க.சி.குலரத்தினம், டாக்டர் எஸ். மோகனதாஸ், இந்திய பனை நிபுணர் கே. சம்பந்தம், வட்டாரக் கல்வி அதிகாரி திரு.கு. சோமசுந்தரம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## துப்பாக்கிச் சூட்டுக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகளை காட்டிக்கொடுக்கும் துரோகிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்றும் இதேபோன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து ஈடுபடுபவர்களுக்கு இது ஒரு பாடமாக அமையவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரசுரத்தின் அடியில் ''தமிழீழ விடுதலைப் போராளிகள்'' என்றும் எழுதப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பருத்தித்துறை நீதவான் கே.கணபதிப்பிள்ளை ஸ்தத்துக்கு சென்று விசாரணை நடத்தினுர். பருத்தித்துறை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். (சு)

# சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

கொழும்பில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 975வது தேசிய சுவீப் முடிவுகள்.

முதலாவது பரிசு

**15 S 0181**

ரூபா 1,97,200

இரண்டாவது பரிசு

**07 K 0254**

ரூபா 73,950

மூன்ருவது பரிசு

**03 A 0335**

ரூபா 24,650

ரூபா 887.40சதம் கொண்ட நூறு ஆறுதல் பரிசுகள்:

| | |
|---|---|
| 10 A 0718 | 20 A 0169 |
| 06 B 0513 | 01 B 0535 |
| 02 B 0891 | 04 B 0934 |
| 06 B 0517 | 20 B 0237 |
| 14 C 0484 | 14 C 0764 |
| 21 C 0359 | 21 C 0403 |
| 02 D 0843 | 08 D 0673 |
| 04 E 0092 | 07 E 0356 |
| 07 E 0596 | 14 E 0600 |
| 17 E 0192 | 08 F 0918 |
| 12 F 0634 | 19 F 0094 |
| 01 G 0084 | 06 G 0615 |
| 08 G 0835 | 06 G 0905 |
| 19 G 0080 | 20 G 0307 |
| 13 H 0777 | 15 J 0410 |
| 18 K 0775 | 11 K 0781 |
| 14 K 0730 | 15 K 0236 |
| 18 K 0664 | 20 K 0814 |
| 03 L 0350 | 05 L 0810 |
| 05 L 0925 | 06 L 0639 |
| 09 L 0452 | 20 L 0526 |
| 02 M 0843 | 05 M 0615 |
| 05 M 0696 | |
| 08 M 0067 | 11 M 0236 |
| 21 M 0489 | 06 N 0152 |
| 07 N 0535 | 01 N 0124 |
| 11 N 0335 | 16 N 0129 |
| 04 O 0323 | 06 O 0125 |
| 06 O 0536 | 01 O 0107 |
| 04 O 0690 | 07 P 0835 |
| 06 P 0312 | 04 Q 0361, |
| 02 Q 0847 | 07 Q 0262 |
| 07 R 0854 | 09 R 0904 |
| 18 R 0138 | 20 R 0442 |
| 21 R 0012 | 06 S 0965 |
| 03 S 0079 | 05 S 0904 |
| 09 S 0380 | 09 S 0935 |
| 04 T 0174 | 09 T 0090 |
| 01 U 0399 | 01 U 0013 |
| 06 U 0141 | 06 U 0633 |
| 20 U 0070 | 21 U 0794 |
| 05 V 0622 | 02 V 0176 |
| 20 V 0113 | 01 V 0973 |
| 09 V 0682 | 05 V 0925 |
| 06 X 0912 | 07 X 0797 |
| 11 X 0320 | 21 X 0261 |
| 05 Y 0446 | 11 Y 0568 |
| 05 Z 0590 | 06 Z 0169 |
| 06 Z 0359 | 07 Z 0521 |
| 08 Z 0395 | 20 Z 0008 |

இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்.

## தமிழர் பிரச்னையைத்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர்கள் மீது பாதுகாப்புப்படை தொடர்ந்து ம்தாக்குதல் நடாத்தி வருகிறகிறதென்றும் சொன்னுர்.

இலங்கையில் நடக்கும் கொலைகளைத் தடுத்து நிறுத்துமாறு உலக சமூகத்தினரைக், குறிப்பாக இலங்கைக்கு உதவி அளிக்கும்நாடுகளிடம் வேண்டுகோள்விடுவதைத்தவிர வேறு வழி எதுவும் தமக்குத் தெரியவில்லையென்றும் அமிர்தலிங்கம் அங்கலாய்த்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு இந்தியாவின் கட்சிகள் அனைத்தும் ஆதரவளிக்கவேண்டும் என்றும், சமீபத்தில் லோக்சபாவில் நடந்த விவாதத்தினைப் பார்க்கும்போது இந்த் ஆதரவுகிடைக்குமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் திரு.அமிர்தலிங்கம் சொன்னுர்.

கொழும்பில் நடக்கவுள்ள சர்வகட்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இன்னும் ஐந்தாறு நாட்களில் அங்கு திரும்பிச் செல்லவுள்ளதாகவும்அவர் ர்கூறினு.

# குவலயத்தின் விழிபோன்ற

[15-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்று தன்னைச் சிறியவனுகவும், யாருமற்ற அநாதையாகவும் கருதி, தாழ்வுமனப்பான்மையுடன் கொழுகொம்பில்லாதகொடிபோல்ஏங்கித்தவிக்கிருன். ஆட்டுமந்தையுடன் கூடிவாழ்ந்து வளர்ந்துவந்த சிங்கக்குட்டி தன்னையும் ஓர் ஆடாக எண்ணிற்ரும் இதைக் கண்ணுற்ற சிங்கமொன்று இந்தக் குட்டிச்சிங்கத்தை ஆற்றங்கரைக்கு அழைத்துச் சென்று அதனுடைய பிம்பத்தை நீரில் காட்டிற்று. உடனே உண்மையில் தான் யார் என்பதை உணர்ந்த குட்டிச் சிங்கம் காடு அதிரும்படி கர்ஜித்தது. யானையின் நிலையில் இன்று யாழ்ப்பாணத்தவர் இருக்கின்றனர். தன் சுயசொரூபத்தை யானை உணர்ந்தால் எவ்வளவு பலம் அதற்குண்டு பீமன், துரியோதனன்கீசகன்இவர்களுடையபலம் எத்தனையோ யானைப்பலம் என்று மகாபாரதம் வர்ணிக்கிறது. யாழ்ப்பாணத்தானும எத்தனையோ யானைப் பலம் கொண்டவன். பண்டைய யாழ்ப்பாணத்தான் இக்குவலயத்தில் ஆற்றிய அரும் பெரும் பணிகளையும் சாதனைகளையும் பின்நோக்கிப் பார்த்தால் நான் சொல்வது புரியும். இக்கால சந்ததியினரின் நன்மைக்காக யாழ்ப்பாணத்துக்கு புகழீட்டியோரின் பட்டியலை சேகரித்து ஈழநாடு வாரமலரில் தொடர்ச்சியாகச் சிலகட்டுரைகள் எழுத முற்பட்டுள்ளேன்.

கம்பர் ராமாயணம் பாடமுற்பட்டபோது அவையக்கரத்தில் ''ராமாயணம் என்னும் பாற்கடலை ஒருபூனை நக்கிக் குடித்துவிட முற்படுவது போல் நானும் ராமாயணத்தைப் பாடமுற்பட்டுள்ளேன். கடற்கரையில் சிறுர் மண்வீடுகட்டி விளையாடும்போது விஸ்வகர்மா போன்ற நிபுணர்கள் ''இதுபிழை''யென்று கூறுது உற்சாகமூட்ட வேண்டும்'' என்று வேண்டுகிறுர்.

நான் எழுத முயற்சிக்கும் பட்டியல் என்னுடைய சொந்தச்சரக்கல்ல. பலசரித்திர ஆராய்ச்சியாளர் எழுதியவற்றிலிருந்தும், நண்பர்கள் வாயிலாகக்கேட்டறிந்த வைகளைக் கொண்டும் எழுதமுற்பட்டுள்ளேன்.

நமது பூர்வீகத்தை நாம் மறந்துவிட்டோம். நம்முன்ஞேரின் வாழ்க்கைமுறையை நாம் அனுஷ்டிக்கத்தவறி விட்டோம். மீண்டும் பழமைக்குத் திரும்பிப் பலம்பெறுவோம்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டுசெப்டம்பர் மாதம் 9ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. o. Box 49, Telegram Eelanadu, Telephone: 22389 — 24126.

மன்னுர் அசம்பாவிதங்கள்

# குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டும்'

[யாழ்ப்பாணம்]

''மன்னுரில் நிகழ்ந்த அசம்பாவிதங்கள் குறித்து பாரபட்சமற்ற விசாரணை நடாத்தி குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும்'' என்று கத்தோலிக்க ஆயர்கள் மன்றத் தலைவரும் சிலாபம் ஆயருமான பேரளுள்திரு. பிருங் மார்க்கஸ் பெர்ணுண்டோ ஜனுதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

ஆவணி மடுத்திருவிழாவுக்குச் சென்றிருந்த சிலாப ஆயர் வண. பிருங் மார்க்கஸ் பெர்ணுண்டோ 13ம் திகதி மன்னுர்பகுதிக்கும் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். மன்னுர்ப்பகுதிகளில் தாம் கண்ட அழிவுகளைப் பற்றி ஜனுதிபதிக்கு கடிதமொன்றை எழுதி அனுப்பி வைத்துள்ளார்!

''மன்னுர்ப் பகுதிகளில் வாழும் மக்கள், அச்சத்தோடும் கஷ்டமான நிலையிலும் வாழ்கிருர்கள். இவ்விதமான செயல்கள் அரசாங்கத்தின் மீது மட்மடுல்ல இந்த நாட்டுப் படைவீரர்கள் மீதும் வெறுப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது என்றும் இப்படியான அசம்பாவிதங்கள் குறித்து பாரபட்சபற்ற விசாரணை நடாத்துவதுடன் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுள்ளார்.

யாழ். விவசாயிகளுக்கு

# நீரிறைக்கும் இயந்திரம் வாங்குவதற்கு கடன் உதவி

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்திலுள்ள விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்களை வாங்குவதற்குக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

வறண்டபகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளை ஊக்குலிக்கும் முகமாகவே இப்புதிய கடனுதவித் திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டிருக்கிறது.

இலங்கை கிராமியக்கடன் வழங்கும் பிரிவு ஆசிய அபிவிருந்தி வங்கியின் உதவியுடன் இக்கடனை வழங்க முடிவுசெய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நீரிறைக்கும் இயந்திரங்களைக் கொள்ளனவு செய்வதற்காக ஒவ்வொரு விவசாயிக்கும் 5000 ரூபா கடனுக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு ஏக்கர் நிலத்தில் விவசாயம் மேற்கொள்ளுபவர்களுக்கே இக்கடனுதவித் திட்டத்தில் முன்னுரிமை லழங்கப்படுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரூபா 2 லட்சம் ஒதுக்கியதற்கு முள்ளியான் சங்கம் நன்றி

(யாழ்ப்பாணம்)

முள்ளியான் கிராமத்தில் வசதி குறைந்த குடும்பங்களுக்குக் காணி வழங்கி, அவர்களுக்கு மாதிரிக் கிராமமொன்றை அமைப்பதற்கு முள்ளியான் முஹிதீன் பள்ளிவாசல் தென்னைச் செய்கையாளர் சங்கத்துக்கு அரசாங்கம் அளித்து வரும் ஒத்துழைப்புக்கு மேற்படி சங்கம் நன்றி தெரிவித்துள்ளது. முள்ளியான் கிராம வீதிகள் திருத்தத்துக்கு 2 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை சங்கத்தின் தலைவர் ஜனுப் வி. அபூபக்கரும், பொருளாளர் ஜனுப் எஸ் ஏ. ஸி. சஹாப்தீனும் பெரிதும் வரவேற்று, தமது முயற்சி அரசின் ஒத்துழைப்புக்கு நன்றியையும் தெரிவித்துள்ளனர்.

## அனுதரவான நிலையில் 'ஜீப்'

[கரவெட்டி]

தொலைத்தொடர்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான ஜீப் ஒன்று அநாதரவான நிலையில் நெல்லியடி பெற்ரோல் விற்பனை நிலையத்துக்கு முன்பாக விடப்பட்டிருந்தது. இந்த ஜீப் பின்னர் பொலிசாரினுல் எடுத்துச் செல்லப்பட்டது.

## 14 பேர் நேற்று வந்தனர்!

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறைப் பகுதியில் கைது செய்யப்பட்டு காலி முகாமில் வைக்கப்பட்டுப் பகுதிபகுதியாக விடுவிக்கப்பட்டுவரும் இளைஞர்களில் பதினுன்கு பேர் நேற்று ரயிலில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

## வல்வை அகதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக வழங்குவதற்கு யாழ்ப்பாணம் அரசாங்க செயலகம் முடிவு செய்துள்ளது. இவ்வாரத்தில் இந்த நிவாரணம் கிடைக்கும்.


## மரண அறிவித்தல்

### அலோசியஸ் அமிர்தநாதன்

[பொறியியலாளர்]

இவர் ஓமானில் அகால மரணமானுர். இவர் வாஸந்தியின் அன்புக் கணவரும். டொமினிக், அரவிந்தன், (St. John Bos Co) ஜூட் பிரணவன், ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு, திருமதி பிலிப் முத்தையா (உபதேசியார்) அவர்களின் அன்பு மகனும், செல்வநாதன் (Lankem) சுகந்தியின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு பொன்னம்பலம் [முன்னுள் காரியதரிசி சென்றல் நேசிங் ஹோம்] திருமதி பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மருமகனும், உமாகாந்தனின் (Maldives) அன்பு மைத்துனருமாவார். இவ்வறிவித்தலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

40/4 Temple Rd.
Chundiculi.

1674